# விடுதலைப்புலிகள்


03 தம் கருவிலே தம்மையே...
04 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்...
05 விடுதலைப்புலிகளைச் சூழும்...
07 கிழக்குக் கொலைகளும்...
08 தமிழர் தாயகத்தைத் துண்டாடும்...
10 சுனாமி மீள்குடியேற்றம்...



குரல்: 122 மாசி–பங்குனி, 2005 அன்பளிப்பு: 12/=


# சிங்கள அரசின் நிழல் யுத்தம்

**சிங்களப்படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள பொலநறுவைப்பகுதி இப்போது திரைமறைவுப்போர்க்களமாகிவிட்டது. தமிழரின் விடுதலைப்போராட்டத்திற்கு எதிரான ஒரு சதி அரசியலின் உந்துதளமாக அந்த நிலப்பகுதியை சிங்களப்படைகள் பயன்படுத்தி வருகின்றன. புலிகள் இயக்கத்தின் இராணுவ பலத்தையும் அதன் பொறுமையையும் இலக்கு வைத்து நடாத்தப்படும் இந்த நிழல் யுத்தம் சிங்கள அரசு வரைந்துள்ள அரசியல் இராணுவச் சதித்திட்டத்தின் ஒரு பகுதியாகவே உள்ளது.**

கிழக்கு மாகாணத்தை மையப் படுத்தி இந்த நிழல் யுத்தத்தை அரசு மேற்கொள்கின்றது. புலிகள் இயக்க உறுப்பினர்கள்மீது கொலைத்தாக்கு தல்களை தொடர்ச்சியாக நடாத்தியும் தமிழ் - முஸ்லீம் மக்களை சுட்டுக் கொன்றும் இந்த நிழல்யுத்தம் அரங் கேற்றப்படுகின்றது.

இத்தகைய நிழல் யுத்தக் கூலிப்படையாட்கள் தங்கியிருக்கும் படைமுகாமொன்று அரச இராணுவத்தின் அனுசரனையுடன் இயங்கிவருவதாக ஆங்கிலப்பத்திரிகையொன்று நிழற்பட ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி யிருந்தது.

ஆயினும் அந்த ஆதார உண் மையைச் சிங்கள அரசோ படைத்தலை மையோ ஏற்றுக்கொள்ளவில்லை. அதை மூடிமறைக்கவும் உண்மையைத் திரித் துக்கூறவுமே தலைப்பட்டுள்ளன.

இந்த நிழல் யுத்தத்தின் பலி யாடுகள் படைமுகாம்களுக்கு உள் ளேயே பாதுகாப்பாகத் தங்கவைக்கப் பட்டுள்ளனர். கொலைக்கான ஆயுதங்க ளும் படையினராலேயே வழங்கப்படு கின்றன. படைத்தரப்பின் உதவியுடன் படைமுகாம்களுக்கு அருகாமையில் இந்தக் கொலைத்தாக்குதல்கள் நடாத் தப்படுகின்றன. பல சமயங்களில் சிங் களப்படையாட்களே சிவில் உடை தரித்து கொலைத்தாக்குதல்களை நடத்திவருகின்றனர். ஆயுதக்குழு வொன்றை உருவாக்கி அதற்கு கொலைக்கருவிகளையும் வழங்கி அதை இயக்குவது போர்நிறுத்த உடன்பாட்டிற்கு விரோதமானது.

போர்நிறுத்த ஒப்பந்தவிதிகளின் 1.8ஆவது பிரிவின்பிரகாரம் உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு முப்பது நாட் களுக்குள் அரசகட்டுப்பாட்டுப் பகுதிக் குள் இயங்கும் சகல ஆயுதக் குழுக் களினதும் ஆயுதங்கள் களையப்பட்டு அவை நிராயுதபாணியாக்கப்படவேண்டும் என்பது அரச தரப்பால் ஏற்றுக்கொள்ளப் பட்டவிடயமாகும். அத்துடன் போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலிலுள்ள காலம் வரை வடக்குக்கிழக்கில் எந்த ஒரு ஆயுதக் குழுவும் இயங்கமுடியாதபடி ஒப்பந்தம் தடைசெய்துள்ளது. ஆனால் இவற்றை யெல்லாம் அப்பட்டமாகமீறும் வகையில் சிங்கள அரசு கிழக்கு மாகாணத்தில் புதியதொரு ஆயுதக்குழுவை உரு வாக்கி ஆயுதங்கள் வழங்கி அவற்றைப் பாதுகாத்து செயற்படவைத்துள்ளது.

சர்வதேச கண்காணிப்புக் கொண்ட போர்நிறுத்த உடன்பாட்டை அது கேவலப்படுத்துகின்றது. சர்வதேச சமூகத்தையும் முட்டாள்களாக்க முனை கின்றது. போர்நிறுத்த உடன்பாடொன் றிற்கு வந்துவிட்டுப் புலிகள் இயக்கத் திற்கு எதிராக ஒருநிழல் யுத்தத்தை நடாத்தி வருவது சிங்கள அரசுக்கு இது முதற்தடவையல்ல. அதன் வழமையான ஒரு நடைமுறை இது.

(15ஆம் பக்கம் பார்க்க)




தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# கானல் நீராகும் பொதுக்கட்டமைப்பு

ஆழிப்பேரலைகள் ஏற்படுத்திய அழிவுகளில் இருந்து மக்கள் மீண்டெழ உலக நாடுகள் பெருமளவு நிதியை வழங்க முன்வந்திருந்தன.

அந்தப் பெரும்நிதி சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களிடம் சரியாச்சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் அரச - புலிகள் இணைந்த பொதுக்கட்டமைப்பு ஒன்றின் தேவையைப் புலிகள் இயக்கம் வலியுறுத்தியிருந்தது. புலிகளின் கருத்தை ஏற்றுக்கொண்ட சர்வதேச சமூகம் அவ்விதமானதொரு கட்டமைப்பைப் புலிகளுடன் இணைந்து வரையும்படி சிங்கள அரசைத் தூண்டிவந்தது.

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு யோசனையை கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட சந்திரிகா அரசு அது நடைமுறை வடிவம் பெறுவதைத் திட்டமிட்டுத் தடுத்துவருகின்றது. முதலில் புலிகள் இயக்கம் ஒரு பொதுக்கட்டமைப்பு வரைபொன்றை சிங்கள அரசுக்கு வழங்கியிருந்தது. வடக்கு கிழக்கில் கடற்கோளால் பாதிக்கப்பட்ட தமிழ் - முஸ்லீம் - சிங்கள சமூகங்களின் வீதாசாரத்தை அடியொற்றி அக்கட்டமைப்பைப்புலிகள் வரைந்திருந்தனர்.

எனினும் அக்கட்டமைப்பு யோசனையைச் சிங்கள அரசு அடியோடு நிராகரித்துவிட்டது. இதற்கு பதிலாக சிங்கள அரசின் மேலாண்மையை நிலை நிறுத்தும் வகையில் ஒரு கட்டமைப்பைப் புலிகள் இயக்கத்திற்கு அனுப்பியிருந்தது. அதைப்புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. சுனாமி அனர்த்த உதவி என்ற மகுடத்தில் உலகநாடுகள் இணைந்து வழங்கும் நிதி உதவியிலுள்ள வட - கிழக்கு மாகாணத்திற்கான பங்கை நிருவகிக்கும் அதிகாரம் சிங்கள அரசுக்கில்லை. அதைத் தமிழ்மக்களும் அனுமதிக்கமாட்டார்கள். நிவாரண மற்றும் புனர்நிர்மாண அபிவிருத்தி உதவியாக உலகநாடுகள் வழங்கவுள்ள நிதி முன்னைய காலத்தைப்போல அப்படியே சிங்கள அரசின் மேலாண்மைபெற்ற ஒரு கட்டமைப்பின் கைகளுக்குச் சென்றால் அந்த நிதிக்கு என்ன நடக்கும் என்பது உலகறிந்த ஒன்று. எனவே தமிழர் தாயகம் சம்பந்தப்பட்ட அரசியல் பொருண்மிய விடயங்களில் சிங்கள அரசு மேலாண்மைகாட்ட முயல்வது சனநாயகத்திற்கு முரணானது.

புலிகள் இயக்கம்தான் தமிழரின் அரசியல் பிரதிநிதிகள். போர்நிறுத்த ஒப்பந்தத்திலும் சிங்கள அரசு இதை ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே தமிழர் தாயகம் சம்பந்தப்பட்ட அரசியல் பொருண்மிய உலகநிதி உதவி விவகாரங்களில் புலிகள் இயக்கத்திற்கும் சமபங்குண்டு என்பதை சிங்கள அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை மறுதலிப்பதென்பது சிறுபிள்ளைத் தனமானது. இதேவேளை, இந்த பொதுக்கட்டமைப்பு விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் நோர்வே அரசு ஒரு கட்டமைப்பை உருவாக்கி அரச - புலிகள் இருதரப்பினர்க்கும் அனுப்பிவைத்தது.

சிற்சில குறைபாடுகள் இருப்பினும் நோர்வேயின் கட்டமைப்புவரைபை புலிகள் இயக்கம் ஏற்றுக் கொண்டது. ஆனால் நடுநிலையானதும் நடைமுறைச் சாத்தியமும் கொண்ட நோர்வேயின் கட்டமைப்பை சிங்கள அரசு ஏற்கவில்லை. அதில் திருத்தங்கள் கொண்டுவரவிரும்புவதாகக்கூறி உண்மையில் அதை நிராகரித்துள்ளது. அரசு - புலிகள் என்ற விடயத்திற்கும் அப்பால் ஒரு பொதுநோக்குடன் மக்கள் நன்மைகருதி நோர்வே தயாரித்த பொதுக் கட்டமைப்பு விடயத்தையே இழுத்தடித்து காலத்தைக் கடத்தும் ஒரு பிற்போக்குத்தனமான சிந்தனையிலேயே சிங்கள அரசு இன்று உள்ளது.

சிங்கள அரசின் சமாதானவிரோதக் கடும் போக்கு நிலைப்பாடுகளாலேயே "டோக்கியோ நிதி" இலங்கைக்கு இதுவரை வந்து சேரவில்லை. இதைப் போன்ற சுனாமி அனர்த்த உதவியாக வரவுள்ள பெருந்தொகை உலகநிதியையும் முடக்கி வைத்திருக்கும் முட்டாள்த்தனமான செயற்பாட்டையே சிங்கள அரசு செய்கின்றது. இயற்கை அழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக நிதிஉதவிகளைப் பகிர்ந்தளிக்கும் ஒரு சாதாரண நிருவாக அமைப்பில் புலிகள் இயக்கத்தை சமபங்காளியாக இணைக்கும் மனநிலை இல்லாத சிங்கள அரசு எப்படித் தான் ஒரு அரசியல் நிருவாக அமைப்பை ஏற்படுத்தி ஆட்சி நிருவாகத்தைப் பகிர்ந்துகொள்ளப்போகின்றதோ!

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைப் போன்றே அனர்த்த முகாமைத்துவத்திற்கான பொதுக் கட்டமைப்பும் தமிழர்களைப்பொறுத்தளவில் ஒரு கானல் நீரின்கதைபோன்றே மாறிக்கொண்டிருக்கின்றது. ●

புலிகளின்குரல்



## சாவை அணைத்துச் சாகாச்சுடர்

இது
பண்பு சொரிகின்ற நிலம்
அன்னியர்கள்
விருந்தினராய் மட்டுமே
வந்து போகலாம்
வரவேற்கப்படுவார்கள்

ஆழும் நோக்கோ
அழிக்கும் நோக்கோ
யாருக்கும் வருமானால்
போருக்குள் நாங்கள்
புகுவோம்–இது
வீரம் சொரிகின்ற
நிலமெனும்

விளக்கம் கொடுக்கப்படும்
காலம் காலமாய்
ஈழமண்
ஆண்டவரெவரையும்
வாழ்ந்துவிட்டுப்போவெனச்
சாமரம் வீசவில்லை
அடிமையாய்க் கிடந்து
ஆலவட்டம் பிடிக்கவில்லை
வென்றோமோ தோற்றோமோ
அது வேறு விடயம்
பகையென்றால்
கொன்றே தீருவோமெனக்
கொடிபிடித்தோம்.

வல்லரசோ
சிற்றரசோ
எம்மை நெரிப்பவர்
எவரெனினும்
எதிர்ப்போம்
தலைவனின்
தாரகை மந்திரம்
இதுதான்
தமிழர் வாழ்வதின்
பாதையும் இதுதான்

விடுதலைக்காய்
உயிர்விடத்துடிப்பது
பிரபாகரன் தேசத்துப்
பிறவிக்குணம்

அன்னையும் அவ்வழியே...

பூவாய் இருந்து – ஈழத்
தாயாய் நிமிர்ந்து
தீயாய் எரிந்த
சாகாப்பெயர்
பூபதி...
பெண்மைக்குள்
ஒரு புயல்
தாய்மைக்குள்
ஒரு தணல்
சுறாவளியையே
சுழற்றிய தென்றல்

அவள்
யானைத் துதிக்கைக்குள்
ஏறிய எறும்பு
கோலியாத்தோடு
மோதிய தாவீது

ஆனையை
முன்பொருத்தி
அடக்கியதாய் அறிந்தோம்
அன்னை
பெரும் சேனையையே
முடக்கினாள்
பெண்மைக்குள் உள்ள
வன்மையைப் பறையடித்தாள்
ஈழத்தமிழ் நிலத்தில்
மானம் பெரிதெனும்
மரபை விளக்கினாள்

உதிர வெறியர்களை
உதரத்தால் தாக்கினாள்
அச்சுறுத்தல் தந்தவரை
அவமானப்படுத்தினாள்

உணவுக்கு மறுப்புச்
சொல்லி
உணர்வுக்கு மதிப்புக்
கேட்டு
உலகிற்கு உண்மை
சொன்னாள்.
காந்தி மகானின்
காலடி தொழுவோரை
நோன்பின் பலம்
நோக்க வைத்தாள்.

சாவைப் பிடித்திழுத்துச்
சாதனை செய்தாள்.

அமைதிப்படைகள் முன்
அமைதிகேட்டு
அகிம்சை நாட்டின் முன்
அகிம்சை பூண்டு
எரியாத தீபமாய்
ஒளியைக்கொடுத்தாள்.

பூமியின் மேலே
வெடித்துக் கொண்டது
பூகம்பம்
அமைதியாக
முழங்கிக்கொண்டது
இடி
மலரொன்றில் இருந்து
பிறந்து கொண்டது
மின்னல்

பூபதித்தென்றலின்
புயலின் துளிகளால்
அப்பிக்கொண்ட
கறைகள்–பாரதத்தின்
அகிம்சை முகங்களில்
அழியாமல் இன்னும்... ●

**செந்தோழன்**

வரலாற்றில் சில அபூர்வமான தருணங்கள் வாய்ப்பதுண்டு. அத்தருணங்களில் வரலாற்றின் பாய்ச்சலைத் தடுக்கும் சக்திகளே அதனை தூண்டும் கருவிகளாக மாறிவிடும். ஒரு விடுதலை அமைப்பினை அழிப்பதாகக் கருதி எதிரியே அவ்வமைப்பு மீதமாக நிறைவேறப்படவேண்டியபணிகளை மேற்கொள்வதற்கு தகுந்த வாய்ப்பினை வழங்கிவிடக்கூடும். எனவே விடுதலைப் புலிகள் தமது இலக்கினை அடைய எடுக்கும் முயற்சிகளை தாமே தடுத்து நிறுத்தி வருகின்றோம் என மார்பு தட்டும் ஜே.வி.பியே விடுதலைக்கான மிகுதி நிகழ்ச்சி நிரலையும் பூரணப்படுத்த எமக்கு உதவக்கூடும். மார்ச் மாதம் இரண்டாம் திகதி கொழும்பு விகாரமா தேவி வெளியரங்கில் ஜே.வி.பியின் முன்னணி அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பால் (PNM-PATRIOTIC NATIONAL MOVEMENT) பெருமெடுப்பில் எதிர்ப்பியக்கமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. 2005: மீள் குடியேற்றவாத எதிர்ப்பியக்க ஆண்டு என்கிற இவ்வியக்கம் வெளிநாட்டவர் மீதான கடுமையும் காழ்ப்புணர்ச்சியும் மிக்க பரப்புரையை தீவிரமாக செய்யத்தொடங்கியுள்ளது. போர்த்துக்கேயர் வருகையின் 500வது ஆண்டு நிறைவின் ஆண்டாக 2005ஐப் பிரகடனம் செய்தது. குடியேற்றவாதம், ஏகாதிபத்தியம் என்பவற்றிற்கெதிரான எதிர்ப்பினைத் தேசியவாதமும் முற்போக்கும் கலந்த கலவையாக்கி அதனடிப்படையில் தமிழர் மீதான காழ்ப்பை, வெறுப்பினை விதைக்கும் நிகழ்ச்சியை மறைத்து ஜே.வி.பியினர் போடும் ஆட்டம் எல்லா எல்லைகளையும் தாண்டி விட்டது. இது கண்டு அம்மையாரே அதிர்ந்து போயிருப்பதாகத் தெரிகின்றது. இன்று சிறிலங்காவிலே ஐக்கியதேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் எல்லா ஆயுதங்களையும் ஜே.வி.பியிடம் பறிகொடுத்து அம்மணமாக நிற்கின்றன. தொடக்கத்தில் வி.ஜே.பி இந்தியாவில் வெறித்தனமாக செயற்பட்டது போல, தலிபான்களின் அடிப்படைவாதப்போக்கின் நிழல்போல ஜே.வி.பி செயற்படுவது இப்போது பலராலும் மிகக்கவலையோடு அவதானிக்கப்பட்டு வரப்படுகின்றது. எனவே கடந்த இரண்டாம் திகதியன்று இந் நிகழ்ச்சியில் விமல்வீரவன்ச உதிர்த்த வரலாற்று வாசகங்களை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

"1505ஆம் ஆண்டு **கடற் கொந்தழிப்புக் காரணமாக** போர்த்துக்கேயரான லொறன்சோத அல்மேய்தா இலங்கை வந்தடைந்தார். இன்று **கடல்கோள் காரணமாக** உதவி வழங்கும் போர்வையில் எம் நாட்டினை அடிமைப்படுத்த பலர் வந்துள்ளனர்."

"இன்று **சூல்கெய்ம்** கண்டி சென்று மகாநாயக்கர்களை வணங்குகின்றார். சிங்களப் பிரதேசங்களுக்கு வருகை தருகின்றார். இவை யாவும் அன்பின் விளைவல்ல. இவையாவும் நஞ்சு. இதுபோலத்தான் அன்று **யோன் டொய்லி** என்கிற ஆங்கிலேயர் கண்டி சென்று மகாநாயக்கர்களைச் சந்தித்தார்... சிறி விக்கிரமராயசிங்கனோடு பழகி அவனை மதுவருந்தப் பழக்கினார், பின் கழுத்தறுத்தார். கண்டியை அன்று காட்டிக்கொடுத்த டொய்லியின் வேலையைத்தான் இன்று **அரச சார்பற்ற அமைப்புக்கள் செய்து வருகின்றன.**" "பௌத்த இராச்சியத்தை அழித்துவிட்டு தமிழ்க் கிறிஸ்தவ தமிழீழத்தை உருவாக்கவே சர்வதேசமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அதற்கான **நிகழ்ச்சி நிரலை** இங்கு செயற்படுத்தி வருகின்றன."

விமல் கூறிய இன்னொரு விடயத்தினை கவனத்தில் நாம் கொள்ளவேண்டும். "விரைவில் மீட்கப்படாத பகுதிகளும் மீட்கப்பட்டுவிடும். சுனாமியின் பின் 5,6 நாட்கள் புலிகள் காணாமல் போயிருந்தார்கள். இந்த அரசாங்கம்தான் அவர்களுக்கு மூச்சு வழங்கியது." (தினக்குரல் 04-03-2005)

பிறக்கும்போதே அழிவதற்கான சாபத்தோடு பிறந்தவர்கள் என கதைகளிற்றான் வாசித்துள்ளோம். கருவிலேயே தன்னையே கருவறுப்பதற்கான கருக்களைக் கொண்டு பிறந்த ஒரு விசித்திர முற்போக்கு(?) அமைப்பொன்றினை இப்போது தான் காண்கிறோம். 1505ஆம் ஆண்டிற்கு முன் செல்வோம்; அழிக்கப்பட்ட 250 விகாரைகள் உட்பட அனைத்திற்கும் நட்டஈடு போர்த்துக்கேயரிடம் கோருவோம் என்கிற இக்கருத்துக்கள் உண்மையிலேயே மிகஆழமான அருத்தங்களை கொண்டவை. உண்மையிலே எமது விடுதலையின் ஆதார நிலைப்பாடுகளும், தார்மீக வலுக்களும் இவ்வாதங்களிலுள்ளன. 1505 முன்னுள்ள நிலைக்கு சென்றால் தமிழ் ராச்சியமும் தமிழ்மக்களின் பண்பாட்டு, பொருண்மிய மரபுகளுமல்லவா முதலில் மீட்கப்படவேண்டும். போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்ட 500 ஆலயங்களுக்கும் சேர்த்து அல்லவா நட்டஈடு கோரப்படவேண்டும். கிக்கடுவை சிறி சுமங்கல தேரரின் நாட்டுப்பற்று பற்றி வீரவன்ச பேசும்போது சங்கிலி மன்னன் பற்றியும் அல்லவா அவர் பேசவேண்டும்? ஏன் இவை நிகழவில்லை? சிறிலங்காவின் முழுமையான நாசத்திற்குக்காரணமாகப் போகும் இக்காரணம் பற்றி இத்தீவில் கவலைப்படுவர் யார்?

எமது முழுக்கவனமும் நிகழ்காலத்தில் ஜே.வி.பி இழைத்து வரும் மாபெரும் தவறு பற்றியதாகவே உள்ளது. ஜே.வி.பி ஏலவே இழைத்த தொடர் தவறின் மூன்றாவதும் இறுதியுமாக போகும் இத் தவறு இவ்வுலகின் மனிதநேயமிக்கோரால், விடுதலையுணர்வு கொண்டோரால், முற்போக்காளரால் ஒருபோதும் மன்னிக்கப்பட முடியாததான பெரும் அவலம் நிரம்பிய நினைவுகளாகப் போகின்றன. ஏனெனில் மிகச்சரியான, மிக நீதியான சமூகக் காரணங்களோடு ஒரு மாற்றம் நடப்பதற்கான அகப், புறச்சூழல் தோற்றம் பெற்ற காலகட்டத்திலே ஜே.வி.பி தோற்றம் பெற்றது. சுதந்திரம் பெற்ற மறுகணமே ஏழைச் சிங்கள மக்களை ஏய்த்து அவர்கள் வளமான வாழ்வைப்பறித்த சிங்கள ஆளும் மேட்டுக் குடிக்கெதிராக முழு இளைஞர் தொகையில் 76 விழுக்காடு கிராமங்களில் வாழ்ந்த ஏழை விவசாய, பாட்டாளிகளின் மைந்தர்கள் கிளர்ந்ததை எவரும் எவ்வாறு பிழையென சொல்ல முடியும்? எனவே தனது முதலாவது கிளர்ச்சியை நடத்த முன்னரே சிறைப்பிடிக்கப்பட்ட றோகன விஜேயவீரா குற்றவியல் நீதி ஆணைக் குழுவின் முன் பேசினார். (மொன்காடா கோட்டை தாக்குதலின் பொழுது சிறையாகியிருந்த பிடல் நீதிமன்றில் வரலாறு என்னை விடுவிக்கும் எனப் பேசியதன் சாயலில்) இங்கே நடப்பது என்னவென்றால் ஒரு சமூக வருக்கத்தின் பிரதிநிதி இன்னொரு வருக்க பிரதிநிதி நோக்கி உரையாடுவதுதான். ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் உள்ளான வருக்கத்தின் பிரதிநிதி ஒடுக்கும் சுரண்டும் வருக்கப்பிரதிநிதி நோக்கி விளிப்பதுதான். "**நானொரு மார்க்சியவாதி; நானொரு நவீன போல் சுவிச்; நானொரு பாட்டாளி வருக்கப் புரட்சியாளன்.**'' எத்தகைய உயரிய வார்த்தைகள்? இவற்றினை உச்சரிக்க தன்னும் இவருக்குத் தகுதியிருந்ததா. இவையாவுமே உண்மையாகவிருந்தால் இத்தீவில் இருநாடுகள் அருகருகே அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கவேண்டும்? றோகண உயிருடன் வாழ்ந்திருப்பார், ஒரு புரட்சியாளனாக அவர் உலகால் போற்றப்பட்டிருப்பார்?

ஆனால் நடந்ததென்ன? 1971 ஏப்பிரலில் நடைபெற்றிருக்கவேண்டிய புரட்சி கிளர்ச்சியாகியது; அரசையே கைப்பற்றத்திட்டமிட்ட ஆயுதப்புரட்சி 53 இராணுவத்தினரை 37பொலிசுக்காரரை கொன்று 35 காவல் நிலைகளைச் சிலமணிநேரம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததோடு முடிவிற்கு வந்தது. இங்கேயொரு குறிப்பினை வாசகர்களுக்கு சொல்லவேண்டும். ஜே.வி.பியினர் நிறைவேற்றாத புரட்சி தோற்றதற்கு என்ன காரணமென்பதை ஆராய்வதோ அவர்களது இராணுவச் செயற்பாட்டினை விமர்சிப்பதோ இக் கட்டுரையின் நோக்கமல்ல. ஆனால் எத்தனை மோசமான இராணுவத் திட்டமிடலடிப்படையில் செயற்பட்டுத்தோற்ற இவர்கள் இன்று எல்லாவற்றிற்கும் பிறர்மீது குறிப்பாக தமிழ்பேசும் மக்கள் மீதே பெரும் பழிசுமத்துவது எவ்வகையிலும் ஏற்கமுடியாதது. புரட்சியை நடத்த வேண்டிய புரட்சித்தலைவர் புரட்சிக்கு முன்னரே கைதாகி விடுகின்றார். புரட்சிக்கான இறுதி ஆயத்தங்களைச் செய்ய 1971 மார்ச்சில் மாவட்டங்களுக்குப் பயணித்த ரோகண அம்பாறையில் வைத்துக் கைதாகி யாழ்ப்பாணச் சிறைக்குள் தள்ளப்படுகின்றார். இந் நிலையில் வித்தியோதயப் பல்கலைக்கழகவிகாரையில் கூடிய ஏனைய தலைவர்கள் ஏப்ரல் 5ல் சகல காவல்நிலையங்களையும் தாக்க முடிவெடுத்தனர். அரசைக் கைப்பற்றும் பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. தகவல் பரிமாற கருவிகளற்ற நிலையில் தொடர்புகளை ஏற்படுத்துவதிலேற்பட்ட தவறுகாரணமாக இரவு தாக்கப்பட வேண்டிய வெல்லவாய காவல்நிலையம் அதிகாலை 5.20க்கு தாக்கப்பட்டது. மொனறாகலை ஜே.வி.பியினருக்கு தாக்குதலைத் தொடங்குமாறு உத்தரவு தந்தி வழியே வழங்கப்பட்டது. புகழ்பெற்ற இத்தந்தி "ஜே.வி.பி அப்புகாமி இறந்துவிட்டார். இறுதிச் சடங்கு 5" என்றமைந்தது. இதனை தவறுதலாக விளங்கி அதிகாலையிலேயே தாக்குதல் ஒரு பொலிசு நிலையம் மீது நிகழ்த்தப்பட்டது. **எனவே பொலிஸ் தலைமைப்பீடம் விழிப்படைந்தது. இங்கு நகை என்னவென்றால்** தாக்குதல் நிகழ்த்தப்படுவதற்கான முன்னறிவிப்பு கிடைத்தநிலையிலும் பொலிசுக்காரர்களால் தங்களை முற்றாகப்பாதுகாக்க முடியாமல் போனதுதான். இவ்வாறாக ஒரு தந்தியால் புரட்சி கிளர்ச்சியான கதையிது.

மிகுதிக்கதையையும் மீண்டும் இங்கே நினைவுபடுத்திவிடுகின்றோம். கொழும்பு அரசினையும் கைப்பற்றத்திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன. பிரதான இராணுவ முகாமான பனாகொடையைத் தாக்க 800 மாணவர்கள் 25பேர் கொண்ட குழுக்களாகப்பிரிக்கப்பட்டு ஆயத்தமாக்கப்பட்டிருந்தனர். பனாகொடை முகாம் பற்றியவரைபடமும் கையில் இருந்தது. ஆனால் தாக்குதல் நிகழ்த்தப்படவேயில்லை. ஏனெனில் தாக்குதல்காரர்கள் பனாகொடைப் பக்கம் செல்லவேயில்லை. அது போலத்தான் கட்டுநாயக்கா தளம் மீதான தாக்குதலும் நடக்கவேயில்லை. அதுபோலவே கொழும்பை கைப்பற்றவும் பெருந்திட்டமொன்று வகுக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் சென்று விஜேவீரவை மீட்கும் திட்டமும் தோல்வி கண்டது. நாட்டின் பிரதம மந்திரியான சிறிமாவைக் கடத்துவது அல்லது கொல்வதென்றும் திட்டமிருந்தது. இதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டவர் **சோமவன்ச அமரசிங்க.** நீர்ப்பாசனத்திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளரான இவர் 5ம்திகதி இரவே கைதானார். ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதால் தாக்குதலுக்குப் பொறுப்பானோர் நகரமுடியவில்லை. இச் சோமவன்ச வேறு யாருமில்லை. இன்றைய ஜே.வி.பியின் தலைவர்; சவடால் மன்னன்; மார்க்சியத்தை தெருப்புழுதிக்குள் வீசி நாசமாக்கிய மன வக்கிரக்காரன். மார்க்சை இரண்டாம் தடவை கொன்றவன்.

எனவே ஜே.வி.பியினரின் முதற்புரட்சி இவ்வாறு இடை நடுவில் முடிந்தது. இதற்கு ஜே.வி.பியினரின் திறனற்ற இராணுவ மூலோபாயங்கள் உத்திகள் மட்டுமா காரணம்? விடுதலை, புரட்சி போன்ற உயரிய கருத்தமைவுகளை இவர்கள் புரிந்து கொண்டவிதம் அவர்கள் இவற்றினை அபத்தமாக கையாண்டமை எல்லாமே அவர்கள் செய்யக்கிளம்பிய புரட்சிக்கே எதிரானவை. மாற்றத்தினைக் கொண்டு வர தடையான மாறாத நிலைப்பாடுகள், இயங்கியல் என்னும் சமூக அசைவியக்கத்தினை பின்தள்ளும் காரணிகள்.

எனவே மார்க்சை,ஏங்கல்சை லெனினை, கரைத்துக்குடித்து சேயை, பிடலை றோகணவிக்கு மனதில் உருவகப்படுத்திய றோகணவிக்கு மிக மோசமாகச் சுரண்டப்பட்ட ஏழைப்பாட்டாளியான, மலையகமக்கள் இந்தியாவின் விரிவாக்கக் கைக்கூலிகளாகத் தெரிந்தனர். மலையகமக்களை முன்னனிப்படையாகக் கருதிய சண்முகதாசன் ஒரு இனவாதி. ஒடுக்குமுறைக்குட்பட்ட தமிழ்மக்கள் கிள்ளுக்கீரைகள். இவையாவற்றினையும் விட 1970களில் தமிழ்இளைஞர் மனதிலே கனன்று கொண்டிருந்த விடுதலைத்தீயை அடையாளம் காண முடியாத அகக்குருடர்கள் இவர்கள்.

இவர்கள் எவ்வாறு புரட்சி செய்வது? ஒருபொழுதும் முடியாது என்பதற்கு நெறி கெட்டு அலங்கோலமாகிய 2வது(?) புரட்சியே இன்னொரு சான்று-

தொடரும்......





# தம் கருவிலே தம்மையே கருவறுக்க தாமே கருக்களைக் காவுவோர்

**பிறக்கும்போதே அழிவதற்கான சாபத்தோடு பிறந்தவர்கள் என கதைகளிற்றான் வாசித்துள்ளோம். கருவிலேயே தன்னையே கருவறுப்பதற்கான கருக்களைக் கொண்டு பிறந்த ஒரு விசித்திர முற்போக்கு (?) அமைப்பொன்றினை இப்போதுதான் காண்கிறோம். 1505ஆம் ஆண்டிற்கு முன் செல்வோம் அழிக்கப்பட்ட 250 விகாரைகள் உட்பட அனைத்திற்கும் நட்டஈடு போர்த்துக்கேயரிடம் கோருவோம் என்கிற இக் கருத்துக்கள் உண்மையிலேயே மிக ஆழமான அருத்தங்களை கொண்டவை. உண்மையிலே எமது விடுதலையின் ஆதார நிலைப்பாடுகளும், தார்மீக வலுக்களும் இவ்வாதங்களிலுள்ளன.**

-க.வே.பாலகுமாரன்-

**இன்றைய உலக ஒழுங்கை பலம் தான் நிர்ணயிக்கின்றது.**
**தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.**

# தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இன்றைய உலக ஒழுங்கும்




தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை அரசசார்பற்ற நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், தனியார் கூட்டமைப்புக்கள் என்று பலவாறாக அழைப்பார்கள். ஐ.நாவில் உறுப்புரிமை வகிக்கும் சர்வதேச அரசுகளையும் மேற்கூறிய அமைப்புக்களையும் வேறுபடுத்திக் காட்டுவதற்காக அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற சொற்றொடரை ஐ.நா பயன்படுத்துகிறது. சில அமைப்புக்கள் இப்படி அழைப்பதை விரும்புவதில்லை. ஆனால் அது வழமையாகி விட்டது. "NON GOVERNMENTAL ORGANIZATIONS"என்று அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆங்கில மொழியில் அழைக்கப்படுகின்றன. மூன்று முதல் எழுத்துக்களும் NGO என்று இணைக்கப்பட்டுள்ளன. தமிழ் மொழியிலும் என்ஜியோ என்ற அழைக்கும் மரபு உருவாகிவிட்டது. அனைத்துலக மட்டத்தில் செயற்படும் என்ஜியோக்கள் ஐஎன்ஜியோ என்று அழைக்கப்படும் அதேவேளையில் உள்நாட்டில் மாத்திரம் இயங்கும் என்ஜியோக்கள் வெறுமனே என்ஜியோ எனப்படுகின்றன.

ஐ.நா செயற்படுத்தும் அதே சமூக, பொருளாதார, மனிதமேம்பாட்டுப் பணிகளில் என்ஜியோக்களும் ஈடுபடுகின்றன. இதனால் இரு பகுதியும் ஒன்றிணைந்து செயற்படும் வாய்ப்புக்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன. ஐ.நாவின் பொருளாதாரம் மற்றும் சமூக கவுன்சில் (ECONOMIC AND SOCIAL COUNCIL ) தனது மேற்பார்வையின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பாக அரசசார்பற்ற நிறுவனங்களின் ஆலோசனையைப் பெறுவதற்கு ஐ.நா சாசனத்தின் சரத்து 71 அதிகாரம் வழங்குகிறது. ஆலோசனை வழங்குவதற்கு தகுதி உடையவையாக 300 வரையிலான சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. என்ஜியோக்கள் கவனம் செலுத்தாத பொது விடயங்களைக் காண்பது அரிது. அதேபோல் அவை செயற்படாத நாடுகளைக் காண்பதும் அரிதினும் அரிது. சர்வதேச மட்டத்தில் இயங்கும் என்ஜியோக்களின் எண்ணிக்கைக்கு நிகராக தேசிய மட்டத்தில் தொண்டாற்றும் நிறுவனங்களும் எண்ணிக்கையில் பெருகியுள்ளன. இவற்றுள் சில குறுகிய வட்டத்திற்குள் தமது சேவையை வழங்குகின்றன. வர்த்தக சங்கங்கள், தொழிலாளர் அமைப்புக்கள் என்பவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

சர்வதேச மட்டத்தில் இயங்கும் பல பிரசித்திபெற்ற நிறுவனங்கள் மனித உரிமைகள், சமூக நீதி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, அரச நிர்வாக ஊழல்கள் போன்ற பொது விவகாரங்களில் கவனம் செலுத்துகின்றன. கிறீன்பீஸ் ( GREEN PEACE) என்ற அமைப்பு நீர் வாழ் உயிரினங்கள் அழிக்கப்படுவதைத் தடுப்பதிலும், ஆழ்கடல் மாசுபடுத்தப்படுவதை நிறுத்துவதிலும் ஆர்வம் காட்டுகிறது. கிறீன்பீஸ் அமைப்பு 1971ல் யூ.எஸ்.ஏ, கனடா ஆகிய நாடுகளில் தோற்றம் பெற்றது. கடலில் அணுக்கழிவுகளை கொட்டுவதை தடுத்து நிறுத்துவதில் அது பெருமளவு வெற்றி கண்டுள்ளது. திமிங்கில வேட்டைக்கு எதிராக அது சாத்வீக முறையில் மிகவும் தீவிரமாக ஈடுபடுகின்றது. தனக்குச் சொந்தமான பாரிய கடற்கலங்களில் கிறீன்பீஸ் ஆர்வலர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

அண்மையில் எடுக்கப்பட்ட மதிப்பீடு ஒன்றின்படி 25000 வரையிலான மிகவும் முக்கியமான சர்வதேச மட்ட என்ஜியோக்கள் பல்வேறு துறைகளில் செயற்படுகின்றன. ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இந்த எண்ணிக்கை 400 வரையில் இருந்திருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது. உலகின் மிகக் கூடுதலான உறுப்பினர்களைக் கொண்ட அரசசார்பற்ற நிறுவனமாக அனைத்துலக அபய தாபனம் இடம்பெறுகிறது. 90 வரையிலான நாடுகளிலும் மாநிலங்களிலும் ஒரு மில்லியனுக்கும் கூடுதலான உறுப்பினர்கள் இன்று அனைத்துலக அபய தாபனத்தில் காணப்படுகின்றனர். இலண்டனில் உள்ள அதன் தலைமைச் செயலகத்தில் 300 முழுநேரப்பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

முன்னணி மனித உரிமைப் பாதுகாப்பு அமைப்பான AMNESTY INTERNATIONAL என்று அழைக்கப்படும் அனைத்துலக அபய தாபனம் பீற்றர் பெனன்சன் என்ற ஆங்கிலேய வழக்கறிஞரால் 1961ல் நிறுவப்பட்டது. பாலாத்காரத்தில் ஈடுபடாத மனச்சாட்சிக்காக சிறை சென்றவர்களை மீட்டெடுப்பதையே அது தனது பிரதான குறிக்கோளாக கொண்டுள்ளது. சித்திரவதைக்கும் மரண தண்டனைக்கும் எதிராக அது போரிடுகிறது. காலத்திற்கு காலம் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான அறிக்கைகளை அது வெளியிடுகிறது. இவ்வருடம் பெப்பிரவரி மாதத்தில் பீற்றர் பெனன்சன் இயற்கை எய்தினர்.

தமிழர் தாயகத்தின் மீன்பிடித் தொழிலுக்கு மிகப்பெரும் தொண்டாற்றி வரும் சேநோர் (CEYNOR) நிறுவனத்தை ஆர்னே ப்யொட்ரொப்ற் (ARNE FJORTOFT) என்ற நோர்வே நாட்டவர் 1967 ல் உருவாக்கினார். அப்போது சிறிலங்காவின் பெயர் சிலோன் என்றிருந்தது. இரு நாட்டுப்பெயர்களையும் ஒன்றினைத்து அவர் சேநோர் ஆக்கினார். இவர் நோர்வே நாட்டில் வானொலிச்செய்தியாளராகப் பணியாற்றிய காலத்தில் மூன்று யாழ்ப்பாணத் தீபகற்ப இளைஞர்கள் மீன்பிடி அறிவையும் அனுபவத்தையும் பெருக்குவதற்காக அங்கு சென்றனர். இந்த இளைஞர்கள் மூவரையும் நோர்வே வானொலி சார்பில் ஆர்னே பேட்டி கண்டார். நோர்வே உதவிகளைப் பெற்ற இந்த மூவரும் காரைநகருக்கு வந்து மேற்கு நாட்டு பாணியிலான மீன்பிடித்தொழிலை ஆரம்பித்தனர். அது தோல்வியில் முடிந்தது. இவர்களுக்கு உதவ ஆர்னே முன்வந்தார். அவர் தனது வானொலிச் செய்தியாளர் பணியை விடுத்து காரைநகர் வந்தார். இங்கு தங்கியிருந்த காலத்தில் சேநோர் திட்டத்தை ஆரம்பித்ததோடு அதை காரைநகர் தொட்டு இலங்கைக் கரையோரம் யாவற்றுக்கும் விரிவுபடுத்தினார்.

சேநோரின் ஆதரவில் மீன்பிடித் தொழிலின் எல்லாத்துறைகளும் வளர்ச்சி கண்டன. 1983ல் சிறிலங்கா மீன்பிடித் திணைக்களம் சேநோரைத் தன்னோடு இணைத்துக் கொண்டது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசில் நிதி அமைச்சராகப் பதவிவகித்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுடன் இதே காலப் பகுதியில் ஆர்னே நெருக்க உறவைப்பேணினார். தகவல் தொழில் நுட்பம் மற்றும் செய்தித்துறை விரிவாக்கத்திற்கான ஆலோசனைகளை இலங்கை அரசுக்கு வழங்கினார். அமெரிக்கா,பிரித்தானியா போன்ற நாடுகள் தகவல் தொழில் நுட்பத்தில் அனுபவித்த ஏகபோகத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்காக நோர்வே 1978ல் அனைத்துலக தரிசனம் என்ற செய்திப்பரிமாற்ற அமைப்பை உருவாக்கியது. அது "WORLD-VIEW INTERNATIONAL FOUNDATION" என்று அழைக்கப் படுகிறது. இது WIF என்ற சுருக்குப் பெயரால் அடையாளம் காணப்படுகிறது. இதனுடைய கிளை அமைப்பை 1979ல் ஆர்னே கொழும்பில் நிறுவினார். கொழும்பில் தலைமைச்செயலகம் அமைத்த முதலாவது சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் என்ற சிறப்பு இதற்கு உண்டு. கொழும்பில் அமைக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் கிளைகள் 45 ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகளில் திறக்கப்பட்டன. நோர்வே அரசியலில் ஆர்னே முக்கிய பங்காற்றி வருகிறார். எமது அமைதிப் பேச்சுக்களில் அவர் முக்கிய பின்னணி சக்தியாக இடம்பெறுகின்றார். 1885இல் தொடங்கப்பட்ட நோர்வே லிபரல் கட்சியின் தலைவராக ஆர்னே பதவி வகிக்கிறார். தாய்லாந்து நாட்டிலும் அவர் மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளார். நோர்வே சிறிலங்கா நட்புறவை உருவாக்கிய முன்னோடி என்ற சிறப்பு அவருக்கு உண்டு.

**கலாநிதி.க.சோமஸ்கந்தன்**

ஜேர்மன் நாட்டின் ஜீ.ரீ.சற் (GTZ)தொண்டு நிறுவனம் கடந்த நாற்பது வருடங்களாக இலங்கையில் பணியாற்றுகின்றது. ஜேர்மன் அரசின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைச்சகத்தின் (german ministry of economic cooperation and development- bmz) சார்பில் அது மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுக்கின்றது. 1996 தொடக்கம் ஜீ.ரீ.சற் வட தமிழீழத்துடன் நெருக்கமான உறவுகளைப் பேணுகிறது. 1999 தொடக்கம் ஒரு முழு அளவிலான மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கூறிய அமைச்சகம் ஜீ.ரீ.சற் தொண்டு நிறுவனம் ஊடாக நடைமுறைப்படுத்துகிறது. இத்திட்டம் ஆறு வருடங்களில் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆறு வருடதிட்டத்திற்கான செலவு 17மில்லியன் யூரோ என்று மதிப்பிடப்படுகிறது. யாழ் குடாவிற்கான மீள் குடியமர்வுத்திட்டம் என்று இந்த ஆறு வருடகாலத்திட்டம்(1999-2005) JAFFNA REHABILITATION PROJECT- JRP அழைக்கப்படுகிறது.

ஜீ.ரீ.சற் போன்ற பொருளாதார வளமும் செயற்திறனுமுடைய தொண்டரமைப்புக்களின் வருடாந்த வரவு செலவுக்கணக்குகள் பல மில்லியன் டாலர்களுக்கும் கூடுதலாக இருக்கின்றன. அரசுகளோடும் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களோடும் ஒப்பிடும் போது இத்தொகை குறைவாக இருந்தாலும் என்ஜீயோக்களின் நிதிப்பலத்தை குறைத்து மதிப்பிட முடியாது. என்ஜியோக்களின் நிதிவளம் பல துறைகளிலும் இருந்தும் கிடைக்கின்றது. உறுப்பினர்கள் ஆர்வலர்கள் வழங்கும் தொகைகளிலும் பார்க்க அரசுகளும் சர்வதேச அமைப்புக்களும் வழங்கும் உதவித் தொகைகள் கூடுதலாக இருக்கின்றன. சேவைகள் வழங்கும்போது அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு கணிசமானவளவு வருவாய் கிடைக்கிறது. அதேபோல் சில வர்த்தக முயற்சிகளில் இந்த நிறுவனங்கள் ஈடுபடும்போது குறிப்பிடத்தக்க இலாபம் கிடைக்க இடமுண்டு. பெரும் தொழில் ஸ்தாபனங்கள் உருவாக்கிய உதவி நிறுவனங்கள் தமது வருவாயில் பெரும் பகுதியை அரசசார்பற்ற நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளிக்கின்றன.

போட் மோட்டார் கொம்பனி, அன்றுவா கார்ஜெனி(ANDREW CARNEGIE) நிறுவனம் என்பன பலமில்லியன் டாலர்களை சில குறிப்பிடத்தக்க தொண்டு நிறுவனங்களுக்கு கொடுத்துதவுகின்றன. கெயர், ஒக்ஸ்பாம் போன்ற தொண்டர் அமைப்புக்கள் தமது சர்வதேச மட்டத்திலான உதவிப் பணிகளுக்கு அரசுகள் வழங்கும் நிதியையே பயன் படுத்துகின்றன. பிரித்தானியாவின் ஒக்ஸ்போட் நகரில் 1942ல் உருவாக்கப்பட்ட வறுமை ஒழிப்பு அமைப்பு ஒக்ஸ்பாம் என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறது. நீண்டகால மேம்பாட்டு திட்டங்களை அது மூன்றாம் உலகநாடுகளில் நடைமுறைப்படுத்துகிறது.

1990களில் ஐ.நா அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் ஆணையம் மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டை மேற்கு நாட்டு அரசுகள் மீது சுமத்தியது. ஐ.நா அலகுகளுக்கு உதவி நிதிவழங்காமல் இந்த அரசுகள் தத்தம் நாட்டு தொண்டு நிறுவனங்களுக்கே உதவுகின்றன. இதனால் ஐ.நா அலகுகள் பாதிக்கப் படுகின்றன என்பது ஆணையத்தின் குற்றச்சாட்டு. இன்று தொண்டு நிறுவனங்கள் அரசு வழங்கும் நிதி உதவியில் தங்கியுள்ளன. சில தொண்டு நிறுவனங்கள் அவை தோன்றிய நாட்டின் நலனை முன்னெடுப்பதாகவும் சொல்லப்படுகிறது. அகதிகளுக்கான ஆணையம் சில நாடுகளில் உதவிப்பணிகளை மேற்கொள்வதில் பல என்ஜியோக்கள் அதே இடத்தில் பணியாற்றும் காரணத்தால் இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஒரே பணியை பல தொண்டு நிறுவனங்கள் நிறைவேற்றப்புகும் போது அகதிகளுக்கான ஆணையம் முன்வைக்கும் இடையூறும் எழ வாய்ப்புண்டு. சம்பந்தப்பட்ட நாட்டில் வாழும் திட்டமிடல் அதிகாரிகள் தமது நாட்டின் தேவைகளை அடையாளம் கண்டு உதவி நிறுவனங்களை வழிகாட்ட வேண்டியது அவசியமாகிறது.

1994 தொடக்கம் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான வருடாந்த உதவித்தொகை ஒரு பில்லியன் டாலரை தாண்டுகிறது. ஐ.நாவின் முன்னால் கணக்காய்வாளர் அன்தோணியோ டொனினி ( ANTONIO DONINI) செய்த ஆய்வுகளின்படி 1970ல் 1.5 வீதமாக இருந்த தொண்டு நிறுவனங்களுக்கு அரசுகள் வழங்கும் உதவித்தொகை 1988ல் 35 வீதமாகவும்

(13ஆம் பக்கம் பார்க்க..)

# விடுதலைப்புலிகளைச் சூழும் அழுத்தம்

**கொ**ழும்பு அரசியல் இப்போது சுனாமி நிவாரண பொதுக் கட்டமைப்பைச் சுற்றி மையங்கொண்டிருக்கிறது. சுனாமி நிவாரண நிதி நொடிந்து போயிருந்த அரசாங்கத்திற்கு வல்லமைமிக்க ஊற்றாகவும், அதன் அரசியல் தலைவிதிக்கு நிர்ணயகரமான பாத்திரம் வகிப்பதாகவும் இருப்பதனால் அதன் கூட்டணி, மற்றும் உட்கட்சி அரசியல் பிணக்குகளையும் தாண்டி பொதுக் கூட்டமைப்பைச் சுற்றி அரசியல் மையங்கொள்ள வேண்டியதாயிற்று.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் நிதியை சமாதானத்தை நோக்கி அரசை முன் தள்ளுவதற்கு வாய்ப்பானதொரு ஆயுதமாக பயன்படுத்தியிருந்த சூழலில், சுனாமியினால் ஏற்பட்ட மனிதாபிமான சர்வதேச நிதிவரவு சமாதானத்தைத் தடம்புரட்டி விடக்கூடாது என்பதில் விடுதலைப்புலிகள் அதிக சிரத்தை கொள்ள வேண்டியவர்களாக உள்ளார்கள். அத்துடன் சுனாமியால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு நியாயபூர்வமாக இவ் உதவிகளைப் பெற்றுக் கொடுக்கவேண்டிய அரசியல் கடமைப்பாடுள்ளவர்களாகவும் உள்ளார்கள்.



விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பை அரசாங்கம் மறுதலித்திருக்கிறது. அனுசரணை நாடான நோர்வே அரசு தனது அனுசரணைப் பாத்திரத்தின் கடமை வழிப்பட்டு ஒரு பொதுக் கட்டமைப்பு வரைபை பொதுவில் முன்வைத்தது. இதில் சில குறைபாடுகள் இருந்த போதிலும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தகைமை அங்கீகரிக்கப்பட்டும், நியாயபூர்வமாக வட-கிழக்கு மக்களுக்கு நிதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான வழிவகைகள் இருப்பதையுமிட்டு விடுதலைப்புலிகள் அதன் குறைகளை முன்னிறுத்தாமல் சமாதானத்திற்குச் சாதகமாக அதனைப் பரிசீலித்து ஏற்றுக்கொண்டனர்.

ஆனால், அரசாங்கம் இது விடயத்தில் இணங்கிவர மறுக்கிறது. பொதுக் கட்டமைப்பில் விடுதலைப்புலிகளை மறுதரப்பாக கொள்ளும் அரசியல் தகைமையை, மற்றும் சொற்பிரயோகங்களைக் கூட ஜீரணிக்க அரசாங்கத்தால் முடியாதுள்ளது. சமாதானத்திலும் இந்த மனோபாவமே மிக முக்கிய உள்ளார்ந்த பிரச்சினையாக இருக்கிறதெனலாம்.

இத்தீவில் முன்னெப்போதும் நிகழ்ந்திராத ஓர் இயற்கை அனர்த்தத்திற்கு உள்ளான மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையில் தற்காலிகமானதும் மனித நேயம் மிக்கதுமான இந்த விடயத்தில் கூட தமிழ்மக்கள் ஒரு அரசியல் தகைமையை பெற்றுவிடுவார்கள் என்ற அச்சம் கருதி ஒரு பொதுக்கட்டமைப்புக்கு இணங்கிவர மறுக்கும் அரசாங்கம் இன முரண்பாட்டிற்கான இறுதித் தீர்வு குறித்த அரசியல் தளத்தை எவ்வாறு ஜீரணித்துக்கொள்ளும்.

யதார்த்தத்திற்கு அப்பாலான அவர்களின் மனோபாவத்தை வைத்து சமாதானம் செய்ய முயற்சிக்கும் காரியம் எவ்வாறு கைகூடிவிடும். கடந்த மூன்று தசாப்தத்திற்கும் மேலாக அமைதி பாதுகாப்பு முன்னேற்றம் ஆகியவற்றை அடைவதற்கான கடினமான ஆனால் உத்வேகம்மிக்க ஆயுதப்போரை தமிழ்மக்கள் நடத்தியிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளுக்காகப் போராடியவர்களையும், தியாகங்கள் புரிந்தவர்களையும், அவர்களது நலன்களை சாத்தியமான அனைத்து வழிகளிலும் பாதுகாத்தவர்களையுமே தமது சட்டபூர்வ பிரதிநிதிகளாகக் கொண்டுள்ளார்கள். கடந்த பொதுத்தேர்தலில் விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதித்துவமாகக் கொண்ட தமிழ்க் கூட்டமைப்புக்கு வாக்களித்து சர்வதேசத்திற்கு ஜனநாயக வழிமுறையில் இதை வெளிப்படுத்தியுமுள்ளனர்.

தமிழ்மக்கள் வலிமை பொருந்திய ஒரு ஆயுதப்படைக் கட்டமைப்பை மட்டும் கொண்டிருக்கவில்லை. மாறாக, தமக்கான நிர்வாக அமைப்புக்களை தனித்துவமாக கட்டிவளர்ப்பதிலும் முன்னேறி வந்துள்ளனர். கடந்த கால்நூற்றாண்டில் இவர்களது வாழ்வில் காத்திரமான பின்தள்ள முடியாத முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தமிழர்களின் சில நகரங்கள் சிங்களப் படைகளிடமிருந்து இன்னும் விடுவிக்கப்படாதபோதும் தமிழ் மக்கள் தமக்கான அரசியல் தளத்தை தனித்துவமாக உருவாக்கியிருக்கின்றனர்.

தமிழ் மக்களைச் சிங்கள அரசாங்கம் பிரதிநிதித்துவப்படுத்தமுடியாது. தமிழ் மக்களின் இறைமைக்குச் சொந்தம் கொண்டாடவும் முடியாது. தமிழ் மக்களின் இந்த அரசியல் தகைமைகளை அங்கீகரிக்காமல் சமாதானம் செய்வது சாத்தியமில்லை என்பதை சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்வதாயில்லை. ஒடுக்குமுறைச் சித்தாந்தத்தின் வழிப்பட்டு சமாதானத்தை அணுக முயல்கிறார்கள். சூழ்ச்சி வலைகளை நெய்வதில் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர இயல்புச் சூழலை உருவாக்க மறுக்கிறார்கள். வலுச்சமநிலையைத் தமக்குச் சாதகமாக மாற்றியமைக்க சமாதானத்தைப் பயன்படுத்தும் உள்நோக்கத்தைக் கைவிட அவர்கள் தயாராகவில்லை. சிங்கள அரசாங்கத்தின் பிடிவாதமான, உறுதியான இந்த மனோபாவத்தில் மாற்றங்களில்லை. அமைதியும் நாகரீகமும் நிறைந்த சூழலைப்படைக்க இவர்களிடம் நேர்மையுமில்லை. துணிச்சலுமில்லை.

அமைதியும் பாதுகாப்பும் முன்னேற்றமும் நிறைந்த வாழ்விற்கு தமிழ் மக்கள் அவாவும் அதேவேளை இத்தீவில் அமைதியும் சமாதானமும் நிலவ சர்வதேச சமூகம் ஆர்வம் கொண்டிருப்பதை தமிழ்மக்கள் கண்டு கொண்டார்கள். நாகரீகமான முறையில் சமாதானத்தைப் படைக்கவும், சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படவும், திறன்மிக்க அதன் ஒத்துழைப்பைப் பெற்றிடவும் தயாராகவே தமிழ் மக்கள் இச்சமாதானத்தில் நம்பிக்கை கொண்டனர். ஆனால், மூன்று வருடமாகியும் சமாதானத்தின் நலன்கள் தமிழ் மக்களை வந்தடையவில்லை.

இத்தகைய வெறுமைக்கும் நிரந்தரத் தீர்வென்ற மிகமிகத் தொலைவுக்குமிடையே ஒரு பாதுகாப்பான நம்பிக்கைமிக்க தளம் அமைக்காமல் யுத்தத்தைத்தவிர்க்க இயலாது என்பதைப்புலிகள் புரிந்து கொண்டுள்ளனர். இதன் பொருட்டே இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையைக் கோரினர். யுத்தநிறுத்த ஒப்பந்தம் நீர்த்துப்போகாமல் இருப்பதற்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையால் வல்லமை வழங்கமுடியும். இன முரண்பாடு உலகில் புதுமையானது அல்ல. அதன் தீர்வுக்கான அணுகுமுறையும் உலகிற்கு புதுமையானதல்ல. விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்தால் புரிந்துகொள்ளமுடியும்.

இதனை ஓரளவு புரிந்து கொண்ட உதவி வழங்கும் நாடுகள் சிங்கள அரசை சமாதானத்தை நோக்கி முன் தள்ளுவதற்கு தமது சக்திமிக்க செல்வாக்கை அரசு மீது செலுத்தினர். ஆனால் சுனாமிக்கான மனிதாபிமான நிதி சிங்கள அரசாங்கத்தை சமாதானம் தவிர்ந்த பாதையில் முன்னேற ஆர்வம் ஊட்டிவிடக் கூடிய ஆபத்தே இன்று நிலவுகிறது.

எனவேதான் நிவாரண நிதிக்கான பொதுக்கட்டமைப்பை விடுதலைப்புலிகள் கோரவேண்டி உள்ளது. இது இன்றைய பதட்டமான அச்சம்தரும் சூழலுக்கும் இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை உருவாக்கத்திற்கும் இடைத்தளமாக அமையக் கூடியது. நீர்த்துப்போய்க் கொண்டிருக்கும் ஒப்பந்தத்திற்கு ஊட்டம் வழங்கவல்லது. மாறாக, இதுவும் அடையப்பெறாதுவிடின் தமிழ் மக்கள் நம்பிக்கை இழப்பதோடன்றி சூழுகின்ற அச்சம்தரும் பதட்டமான நிலமைகளுக்கு எதிர்வினை காட்டமுனைவர். வெகுசனமட்டத்தின் இந்த அழுத்தத்திற்கும் பதில்சொல்ல வேண்டிய பொறுப்பு விடுதலைப்புலிகளுக்கு உருவாகும். இது சமாதானத்தை மேலும் தொடர்வதற்கு எந்த விதத்திலும் வாய்ப்பளிப்பதாக இருக்காது போகலாம்.

இவ் அச்சம்தரும் சூழலைத் தவிர்க்க சர்வதேச சமூகம் பயனுள்ள திறன்மிக்க பொருத்தமான அழுத்தத்தை பிரயோகிக்க முடியுமானால் யுத்தநிறுத்தம் வலுப்பட வாய்ப்புண்டு. அல்லாதவிடத்து எதிர்மாறான அரசியல்நிகழ்வுகள் நடந்தேறுவதைத் தடுத்து நிறுத்துவது கடினம். இப்போது யுத்த நிறுத்தம் விடுதலைப்புலிகளைச் சூழும் வெகுசன அழுத்தத்திற்கும், சந்திரிக்காவைச் சூழக் கூடிய சர்வதேச அழுத்தத்திற்குமிடையில் ஊசலாடிக்கொண்டிருகிறது. •

**"தமிழ் மக்களை சிங்கள அரசாங்கம் பிரதிநிதித்துவப்படுத்தமுடியாது. தமிழ் மக்களின் இறைமைக்கு சொந்தம் கொண்டாடவும் முடியாது. தமிழ் மக்களின் இந்த அரசியல்தகைமைகளை அங்கீகரிக்காமல் சமாதானம் சாத்தியமில்லைஎன்பதை சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்வதாயில்லை... ...சிங்கள அரசாங்கத்தின் பிடிவாதவாதமான உறுதியானஇந்த மனோபாவத்தில் மாற்றங்கள் இல்லை. அமைதியும்நாகரீகமும் நிறைந்த சூழலைப்படைக்க இவர்களிடம் நேர்மையும் இல்லை. துணிச்சலும் இல்லை."**

**- பிரபுத்திரன் -**

# மௌனக் குமுறல்

அமைதியான பொழுது... சூரியன் விழுந்துவிடக்கூடாது என்று வானம் போராடியதற்கு அடையாளமாய் முகில்கள் இரத்தமாய் சிவந்திருந்தது. அருள் தனிமையில் நடந்து கொண்டிருந்தான். அவனிற்கும் பூமிக்குமான இடைவெளி நீண்ட தூரமாகிக்கொண்டு போனது. நினைவுகள்தான் இப்போது அவனுடன் ஒட்டியிருந்தன.

அவன் மனசைத்தவிர எல்லா இடமுமே மௌனம் நிலைகொண்டிருந்தது. அந்த வெளியில் முளைத்திருந்த பற்றைகளும் இடிந்து போன கட்டடங்களும் மௌனமாக இருந்தாலும் அவனிற்கு அவை பேசுபவையாகவேயிருந்தன. அவனது நடையில் தளர்வு இல்லை. சோகம் தெரிந்தது. இதுதான்... இந்த இடம்தான்... தாண்டிக்குளச் சண்டைக்கு போன கரும்புலிகள் அணியிற்கு அவன் பயிற்சி கொடுத்த இடம். இந்த மரக்குற்றியில் இருந்துதான் ஓய்வு நேரத்தில எல்லோரும் தேநீர் குடிப்பது. அந்த மண்பிட்டியில தான் எப்போதும் நிதன் இருந்து ஏதாவது ஒருகதை சொல்லிக்கொண்டிருப்பான். இதே வெட்டைக்கரைதான் ஆனையிறவுத்தளம் மீதான ஊடுருவித்தாக்குதலிற்காக சென்ற கரும்புலி அணியிற்கு பயிற்சி கொடுத்த இடம்.

ஒவ்வொரு இடத்தையும் பார்க்கின்ற போது நினைவுகள் அவனை பிடித்து இழுப்பது போல் இருந்தது. பழைய ஞாபகங்கள் அவனிற்குள் தீ மூட்டிக்கொண்டிருந்தன.

அருளன் கரும்புலிகள் அணியின் பயிற்சி ஆசிரியன். அவன் பயிற்சி கொடுத்து அனுப்பிய பல கரும்புலி வீரர்கள் தங்களிற்கான இலக்கை அழித்துவிட்டு தேசத்தோடு நிலைத்து விட்டார்கள். அவர்களின் நினைவுகளைச் சுமந்தபடிதான் இப்போது அருளன் வாழ்ந்துகொண்டு இருக்கிறான். நடந்து கொண்டிருந்த அருளன் நிழலிற்காக அந்தமரஅடியோடு அமர்ந்தான். அவனுக்கு நிழல் எதற்கு? இத்தனை நினைவுகள் அவனை சூழ்ந்து நிழல் கொடுக்கின்றபோது மரத்தின் அடியில் இருந்தபடியே எட்டுத் திசைகளையும் சுற்றி வந்தன கண்கள். நினைவுகள்... சுபேசனாக... சிற்றம்பலமாக... ஆசாவாக... உமையாளாக... இப்படி ஒவ்வொரு கரும்புலி வீரர்களினதும் முகங்களாக படையெடுத்து சுவாசிக்கக்கூட கஸ்ரப்படும் அளவிற்கு சுற்றி வளைத்து முற்றுகையிட்டன.

'இந்த மரத்திற்கு கீழயிருந்தே எத்தின பேர் பயிற்சி ஓய்வு நேரங்களில பம்பல்அடிச்சு கதைச்சுச்சிரித்திருப்பினம்' ஆழ்மனத்தில் இருந்து தவிப்பாய் ஒருகுரல் மேல்எழுந்து வந்தது.

கண்கள் சட்டென ஒரு இடத்தில் குற்றி நிலைத்தன. அது ஒரு இடிந்தும் இடியாமலும் கிடக்கின்ற கட்டிடம். அதுவும் மனிதர்களைப் போலதான். இல்லாமல் போனவர்களிற்காக அவர்களின் நினைவுகளைக் கொண்டு வாழ்பவர்களைப் போல சிதைந்துபோன சில கற்கட்டிகளையும் ஓடுகளையும் வைத்துக் கொண்டு வீடு என்பதை அடையாளப்படுத்திக்கொண்டிருந்தது.


'சரி இனி நாங்கள் செய்யப்போகின்ற சண்டையின்ர மொடலைச்செய்து காட்டுங்கோ' அருளன் அதில் வைத்துத்தான் தாண்டிக்குளம் மீது தாக்குதல் நடத்துவதற்குச் சென்ற கரும்புலிகள் அணியிற்கு பயிற்சி கொடுத்தான். அவனது கட்டளை கிடைத்ததும் தாக்குதலில் ஈடுபடப்போகும் கரும்புலிவீரர்கள் டொள்.... டொள்... என்று வாயால் சத்தம் இட்டபடி உண்மையிலேயே எதிரியை எதிர்கொள்வதைப்போல் ஆவேச பாவத்துடன் முன்னேறினார்கள். பயிற்சியின் ஒரு கட்டத்தில் சண்டை இறுகியது 'சாச்காரன் மூவ்..' என்று அணித்தலைவன் சத்தமாகக் கட்டளையிட்டான். களத்திலே அதை நிறைவேற்றப் போகின்ற கரும்புலிவீரன் ஓடிவந்து தனது உடலில் கட்டிய வெடிமருந்தினை வெடிக்கச் செய்வது போல பாவனைசெய்து டுமார் என்று கத்திக்கொண்டு சிரித்தபடியே கீழேவிழுவான். அணிகள் தொடர்ந்து முன்னேறும்.

இதைப் பார்த்த உடனேயே அருளனது கண்கள் கலங்கிப்போய்விடும். சண்டையில இது உண்மையாகவே நடக்கப்போவது. பயிற்சி இடைவேளை வந்ததும் அணிகள் ஓய்வெடுப்பதற்காகப் போய்விடும். அருளன் தனிமையில் இருப்பான். பயிற்சியில் நிகழ்ந்த நிகழ்வை நினைத்து நினைத்து விம்முவான். இந்த நேரம்தான் அவன் அழுதுதீர்த்துவிடும் நேரம். உடலில் கட்டிய வெடிகுண்டை வெடிக்க வைக்கின்ற ஒவ்வொரு கணத்திலும் அதைச்செய்யப்போகின்ற போராளியை நினைத்து அழுத கண்கள் வீங்கியிருக்க ஓய்வை முடித்து மறுபடியும் பயிற்சி கொடுப்பதற்கு அருளன் தயாராகுவான்.

அவனின் மென்மையான இயல்பிற்கு அந்தப்பணி ஒவ்வொரு கட்டத்திலும் பெரும் போராட்டமாகவேயிருந்தது. அதனால் என்ன அவனிற்கு இந்த போராட்டம் வழங்கிய பணியிது.

அதை மறுப்பு தெரிவிக்காமல் ஏற்றுச்செய்து கொண்டிருக்கிறான். கட்டடத்தின் மீது பதிந்து போன பார்வையைப் பிரித்து எடுத்தான். மீண்டும் விழிகள் சுழல ஆரம்பித்தன. விழிகளின் ஒவ்வொரு அசைவிலும் தெரிகின்ற காட்சிகளில் ஏராளமான நினைவுகள் புதைந்து கிடந்தன. மரத்திற்கு கீழ் இருந்தவன் எழுந்தான். தொடர்ந்தும் நடக்க ஆரம்பித்தான். சிறியதொருவெட்டை அந்த மணல் வெட்டையில் ஒருசில காற்சுவடுகள் அழிந்தும் அழியாமலும் பதிந்துகிடந்ததாக அவனின் கண்களிற்குத்தெரிந்தது. அந்த மண்ணிற்கும் அவனிற்கும் மட்டும்தான் தெரியும் அவை யாருக்குச்சொந்தமென்று.

அந்த காற்சுவடுகள் ஆனையிறவு கரும்புலித்தாக்குதலிற்கு செல்வதற்காக கரும்புலிகள் அணி பயிற்சி எடுத்த இடத்திற்குரியது. அந்த இடம்தான் எப்போதும் அழியாத அடையாளமாய் அவனுள் இருந்தது. தனிமை அவனுக்கு வேண்டியதாகவும் அதுவே வேதனையாகவும் இருந்தது. கண்கள் மீண்டும் வெட்டை முழுவதும் உலவின. கல்லுக் குவியல்... கால்கள் வேகமாக நடந்து அருகில் சென்று தரித்துக் கொண்டன. கண்கள் அந்தக் கற்குவியலையே உற்றுப்பார்த்தன. அருளன் அதற்கு அருகிலேயே அமர்ந்து கொண்டான். உயிரின் ஓசை உமையாள்... உமையாள்... என்று துடித்தது. ஆனையிறவுத் தாக்குதலிற்கு பயிற்சி நிகழ்ந்து கொண்டிருந்தவேளை, அந்த இடத்தில் வைத்துத்தான் கரும்புலி மேஜர் ஆசாவின் அணிக்கு பயிற்சி கொடுத்தான்.



**கரும்புலி மேஜர் அருளன்**
**(நந்தகோபால் துஸ்யந்தன் )**
**மானிப்பாய்,யாழ்ப்பாணம்.**
**தாயகமண்ணில்: 05-11-1999**

குண்டு எறியும் பயிற்சி நேரம் வந்துவிட்டால் ஒவ்வொருவரும் அவர்கள் எறிவதற்கு கற்களை பொறுக்கிக் குவிப்பார்கள். கற்களையே குண்டாக நினைத்து எறிந்து பயிற்சி செய்வார்கள். அப்படி குவிக்கப்பட்ட கற்களில் இது உமையாள் குவித்தகற்கள். அவள் ஓடியோடி நிறையகற்கள் பொறுக்கி குவித்தவள். பயிற்சி முடிந்தபோதும் அவள் கற்களை எறிந்து முடிக்கவில்லை. அந்தகற்கள்தான் அப்படியேயிருக்கின்றன.

தாண்டிக்குளத்தில் நிதன் வீரச்சாவு என்ற செய்தியோடு உருவானபுயல் தொடர்ந்தும் நெஞ்சுக்குள் கொந்தளித்துக் கொண்டேயிருந்தது. நினைவுகளின் வேகம் சிலவேளை அதிகரிக்கின்றபோது இமைகள் கசிந்து எச்சரிக்கும். அவனின் மௌனக்குமுறல்கள் தபால்களின் மடிப்புகளிற்குள் தலைவரிக்கு அனுப்பப்பட்டன. கடிதங்களாக வெளியிட்ட உணர்வுகளை அண்ணனைக் காணுகின்ற போது நேரிலே தெரியப்படுத்தினான். அருளன் கதைத்தபோதும் அவனின் மனக்குமுறல்களைப்புரிந்து கொண்ட தலைவர் சிரித்தார். 'சந்தர்ப்பம் வரேக்குள்ள' என்று கூறிவிட்டு விடைபெற்றார்.

சந்தர்ப்பம் எப்பவரும் என்று அவனது கண்கள் காத்திருக்கத்தொடங்கின. படைத்துறைப்பள்ளியில் ஆசிரியர்கள் தேவைப்பட அருளனது ஆசிரியப்பணி அங்கே ஆரம்பமானது. அவன் சிறந்தவொரு ஆசிரியன் என்பதற்கு இங்கேயும் ஒரு எடுத்துக்காட்டு. படைத்துறைப்பள்ளியில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட முன்தரத்தின் அடிப்படையில் ஐந்துபிரிவுகள் பிரிக்கப்பட்டன. ஐந்தாவது பிரிவு மெல்லக் கற்போரிலும் மிகமெதுவாகக் கற்போர்பிரிவு. ஆசிரியர்கள் ஒன்று கூடி அவர்களிற்கான வகுப்புக்களைத் தெரிவு செய்தபோது அந்த வகுப்பை பொறுப்பெடுக்க முன்வந்தான் அருளன். நான் ஐந்தாவது பிரிவை ஆளாக்குவேன் என்றான். பாடங்கள் தொடங்கியது. வகுப்பறை நேரம் மட்டும் அருளன் ஆசிரியன். மீதி நேரங்களில் எல்லாம் அவன் அன்பு அண்ணன். பல்தேச்சு விடுவது. நகம் வெட்டிவிடுவது. கால் தேத்துக்குளிக்க வைப்பது, இப்படி அவன் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வான்.

அங்கே சில போராளிகளிற்கு சிரங்கு. அருவருப்போ வெறுப்போபடாது முருக்கம் இலை அரைத்த சாறுவைத்து குளிக்கவைப்பான். சிரங்கு மாறும் வரைக்கும் அந்தப் போராளிகளை அவனே கவனித்துக்கொள்வான். படிப்புச் சொல்லிக்கொடுக்கின்ற நேரத்தில் சிலவேளை அவன் கடுமையாகப் பேசிவிட்டால் கூட தான் பேசியதை நினைத்து இரவில் தனக்குள்ளே அழுவான். ஓய்வான நேரங்களில் அவர்களைப் பாடச்சொல்லி இவனும் சேர்ந்து தாளம்போடுவான். படைத்துறைப்பள்ளி வாழ்க்கை நினைவுகளைச் சற்று தனித்துவைத்திருந்தனவே தவிர மாற்றவில்லை. மீண்டும் அவனிடம் இருந்து கடிதங்கள் தலைவரை நோக்கிப்புறப்பட்டன. அப்போது உருவாக்கிக் கொண்டிருந்த புதியகரும்புலிகள் அணியிற்கு பயிற்சி கொடுக்கும் பணி அவனுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்தப்பணியை செய்து கொண்டு இருக்கின்றவேளையில்தான் கரும்புலியணியில் சேருவதற்கு அவனிற்கு அனுமதி கிடைத்தது.

அவன் கரும்புலி வீரனானதே தாக்குதல் ஒன்றிற்கு கரும்புலிகள் அணி தயாரான வேளையிற்றான் மணலாற்றில் ஒரு முக்கியமான இலக்கை அழிப்பதற்கு அணிகள் தயார்ப்படுத்தப்பட்டபோது அந்த அணியின் பிரதான பொறுப்பாளராக அருளனே நியமிக்கப்பட்டான். பயிற்சிகொடுப்பதற்காக கரும்புலிகள் அணியிற்கு வந்தவன் தானும் ஒருகரும்புலியாய் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தான். கடும்பயிற்சியை அருளன் எப்படிச்செய்யப்போகிறான். பயிற்சி எடுப்பதற்கு அவனது உடல் இயலாமை காரணமாய் இருக்குமே என்று அனைவரது மனங்களிலும் சிறு புள்ளியிருந்தது. அந்த சிறுபுள்ளியைக்கூட அவனின் உறுதி இல்லாமல் செய்தது.

உண்மையிலேயே அருளனின் உடல் நிலை கடும் பயிற்சி எடுப்பதற்கு இயலாமற்றான் இருந்தது. முகாமில் நிகழ்ந்த விமானக்குண்டு வீச்சொன்றில் அவனது முதுகில் துளைத்த உலோகத்துண்டு ஒன்று குடலோடுசேர்த்து சுவாசப்பையிலும் சிறு சிதைவேற்படுத்தியிருந்தது. காயம் மாறினாலும் வயிற்றில் தையல்போட்ட அடையாளம் நீளமாக அழியாதவடுவாய் இருந்தது. பலமான வேலைகள் செய்வதால் வயிற்றுக் குத்து, வயிற்றுநோ என்று எல்லாவருத்தங்களும் வரும். ஆனால் அனைத்து வருத்தங்களையும் அவன் தனது புன்னகைக்குள் புதைத்து விடுவான். எந்தப் பயிற்சிகளிலும் தளர்வில்லாது அனைத்துப் பயிற்சிகளையும் செய்தான்.

'இந்தக்காயத்திற்குப் பிறகு நீங்கள் எவ்வளவு தூரம் நீந்துவியல்' எனத்தோழர்கள் யாரும் கேட்டால் இமைகள் குவிய கண்கள் சுருங்க சிரிப்பான். எப்போதும் உலராத உதடுகள் சொல்லும். 'நீந்திறதென்டா மூன்று மீற்றர் கூட நீந்த இயலாது. தேசத்திற்குத் தேவையெண்டு நீந்த வேண்டியிருந்தால் மூன்று கடல்மைல் கூட நீந்தி முடிப்பன்.'சொல்லிவிட்டு மறுபடியும் சிரிப்பான். அவனது கண்கள் உறுதியாய்ப் பிரகாசிக்கும். அவன் பயிற்சி எடுத்துக்கொண்டிருக்கும் நேரங்களில் அவனோடு எப்போதும் ஒரு கடிதம் இருக்கும். தகட்டில் தலைவரினதும் நிழல் கரும்புலிகளினதும் படம் ஒட்டப்பட்டிருக்கும். அந்தக்கடிதம் அவனின் ஒரேயொரு ஆசைத் தங்கை வரைந்த கடிதம். தங்கையின் கண்ணீரால் நனைத்து எழுதியது அவனது வியர்வையில் நனைந்து கொண்டிருக்கும்.

'அண்ணா.. நான் உனக்கு ஒரேயொரு தங்கச்சி எண்டதாலயோ இவ்வளவு கஸ்ரப்படுறன். எனக்கு உன்னோட சேர்ந்துவாழ எவ்வளவு ஆசையாயிருக்கு. எப்பவருவாய்...' அது நதிக் கரைகளைப்போல நனைந்து நனைந்து நீளும். அருளனின் வாழ்வை ஆதாரமாக வைத்தே அவனின் ஆசைத்தங்கையும் அம்மாவும். இதனை நினைக்கின்ற போதெல்லாம் அவனின் நெஞ்சு கனமாகும். பிள்ளைகளுக்காக வாழ்வைச் சுமக்கின்ற அம்மாவும் அந்தச் சிறு வீடும் இமைகளுக்குள் ஈரம் ஏற்படுத்தும். பிள்ளைகள் படிக்கவேண்டும் என்று அம்மா எவ்வளவு கஸ்ரப்பட்டு உழைத்தாள். ஆனால் அருளனிற்கு அம்மாவின் கண்ணீர் சுட்டது ஒரு சூடு என்றால் அம்மாக்களின் கண்ணீர் ஆயிரம் சூடுகள் சுட்டன. அதற்காகத்தான் தனக்காக வாழ்கின்ற அம்மாவையும் தன்னை நினைத்தே வாழ்கின்ற தங்கையையும் மனசோடு வைத்துவிட்டு இந்தத் தேசத்திற்காக வாழ்ந்துகொண்டிருந்தான்.

கொழும்பு றோயல்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தவன் சிறப்புச் சித்தியடையக்கூடிய மாணவன் என்று அனைவரும் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் அவனோ போராடவேண்டும் என்பதற்காக கொழும்பில் இருந்து அவனின் சொந்தஊரான மானிப்பாய் வந்தடைந்தான். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் சிறிதுகாலம் தன் கல்வியைத்தொடர்ந்தவன், பின் அவன் நினைத்து வந்ததைப்போலவே போராட்டத்தில் இணைந்து கொண்டான். அவன் கதைக்கின்ற போதெல்லாம் அவன் வார்த்தைகளில் அதிகம் வருவது பிள்ளைகளை இந்தப்போராட்டத்திற்காய் விலை கொடுத்துவிட்டிருக்கும் தாய்களினது கதையாகத்தான் இருக்கும். அவனுக்குத்தெரியும் பிரிந்திருக்கின்ற வேதனையோடு பார்த்தால் பிரசவத்தின் வேதனை ஒரு துளியென்று. பிள்ளைகளை இழந்த தாய்களிற்காய் கண்கள் கசிவான்.

ஒவ்வொரு போராளியையும் அவன் நினைத்திருந்தான் என்று அவர்களின் பெயர்களைச் சொல்லி அவர்களின் இறுதி நல விசாரிப்பைத் தெரிவித்தான். அவனது விரல்கள் இறுதியாக வரைந்த கடிதங்களை உரியவர்களிற்காய் உறையில் இட்டன.

'அம்மாட்டக் குடுங்கோ...' ஒரு கடிதம் 'தங்கச்சியிட்டக் குடுங்கோ...' ஒரு நோட்புக் ஒரு அல்பம்.

'அம்மாவையும் தங்கச்சியையும் சந்தோசமாய் இருக்கச்சொல்லுங்கோ' அவன் புறப்படப் போகின்றான் என்றாலும் கொடுத்து விட்டுப்போக நிறைய நினைவுப்பொருட்கள் இருந்தன.

'இது நிதன் அண்ணை தந்தது..' மனசின் மடிப்பினைப் போல அவனது பாக்கினுள் ஒரு லைற்றர். கவனமாய் இருந்தது. எடுத்துக் கொடுத்தான்.

'இந்தாங்கோ இதையும் கவனமாய் வைத்திருங்கோ...' ஒரு கல்லு கரும்புலி கப்டன் உமையாள் என்று எழுதி ஒட்டப்பட்டிருந்தது. நினைவுகளை வார்த்தைகளாலும் நினைவுப் பொருட்களை கைகளாலும் கொடுத்துவிட்டு அவன் புறப்பட்டான்.

அந்த தாக்குதல் நீண்ட காலத் தயார்ப்படுத்தலில் பெரியதிட்டமோடு நிகழவிருந்தது. ஓயாத அலைகள் மூன்றின் உக்கிரத்திற்கு அது மிகவும் முக்கியமானது. எனவேதான் அவசர அவசரமாக அந்த இலக்கை அழிப்பதற்கு அருளன் தலைமையிலான அணி புறப்பட்டுக் கொண்டிருந்தது. 04.11.1999 நள்ளிரவு நேரம் ஆரம்பித்த பயணம் காலைவிடிகின்ற வேளைதான் முடிவிற்கு வந்தது. இறுதித் தங்குமிடத்தில் தங்கியிருந்த அணிகள் உள்நுழைவதற்கு தேவையான இருளை எதிர்பார்த்திருந்தனர்.

காலை 10.48 இருளுக்காக காத்திருந்த போராளிகளை இரைச்சல் தின்றது. இறுதி தரிப்பிடத்தில் நின்ற வேளை எதிர்பாராத விதமான விமானத்தாக்குதலில் அந்த இடத்திலேயே அருளனும் சசியும் ஆயிரமாயிரம் கனவுகளைச் சுமந்தபடியே உயிர் பிரிகின்றார்கள். கூட இருந்தவர்களின் நினைவு அருளனைக் கரும்புலி ஆக்கியதென்றால் அருளனது நினைவுகளோடு இன்னும் எத்தனை கரும்புலிகள் உருவாகுவார்கள்.

**- துளசிச்செல்வன் -**



# கிழக்கு கொலைகளும் அரசின் ஆணைக்குழுவும்



**சமாதான முயற்சிகளைக் குழப்பியடித்து - மீண்டும் போரைத்தொடங்கும் இராணுவ நோக்கம் கொண்டதாகவே இந்தப் படுகொலைகள் காணப்படுகின்றன. இதேவேளை தமிழ், முஸ்லிம் அப்பாவிப் பொதுமக்களும் இந்தக் கொலைத் தாக்குதல்களுக்கு உள்ளாகிவருகின்றனர். தமிழர் மத்தியில் அச்சத்தையும் தமிழ் - முஸ்லிம்கள் மத்தியில் முரண்பாட்டையும் ஏற்படுத்தும் சதி நோக்கத்துடன் இந்த மக்கள் கொலைகள் இடம்பெறுகின்றன.**

புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீது கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் கொலைத்தாக்குதல்கள் மீண்டும் ஒரு போருக்குக் கட்டியம் கூறுபவையாகவே இருக்கின்றன.

அதன் உச்சக்கட்டமாக மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

சமாதான முயற்சிகளைக் குழப்பியடித்து - மீண்டும் போரைத்தொடங்கும் இராணுவ நோக்கம் கொண்டதாகவே இந்தப்படுகொலைகள் காணப்படுகின்றன. இதேவேளை தமிழ், முஸ்லிம் அப்பாவி பொது மக்களும் இந்தக் கொலைத் தாக்குதல்களுக்கு உள்ளாகிவருகின்றனர். தமிழர்கள் மத்தியில் அச்சத்தையும் தமிழ் - முஸ்லிம்கள் மத்தியில் முரண்பாட்டையும் ஏற்படுத்தும் சதி நோக்குடன் இந்த மக்கள் கொலைகள் இடம்பெறுகின்றன.

இந்தப்படுகொலைகளை சிங்கள இராணுவத்தினரே திட்டமிட்டுச் செயற்படுத்துகின்றனர். சிங்களத்து முப்படைகளின் பிரதம தளபதி சந்திரிகா அம்மையாரும் இக்கொலைக்கும் உடந்தையாக இருந்து குறுகிய அரசியல் இலாபம் ஈட்ட முயற்சிக்கின்றார். சிங்களப் பத்திரிகை உலகமும் இப் படுகொலைகளை ஆசீர்வதித்து ஊக்குவிக்கின்றன.

இப்படுகொலை களுக்கான குற்றச்சாட்டுக்களை புலிகள் இயக்கம் பகிரங்கமாகவே சிங்கள அரசு மீது சுமத்திவிடுகின்றது. தாக்குதல்களில் உயிர் தப்பிய போராளிகளும் சம்பவங்களைக் கண்ட மக்களும் இந்த உண்மைகளைப் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தி யுள்ளனர். கொலைத்தாக்குதல்கள் நடைபெற்ற இடங்கள் கொலையாளிகள் தப்பியோடி எங்கே சேர்கின்றனர் என்பவையும் கொலையாளிகளை இனங்காணப்போதுமானவை.

ஈனத்தனம் மிகுந்த இப்படுகொலைத்தாக்குதல்கள் இப்போது பெண்புலிகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் இராணுவத்தின் அனுமதியுடன் நிராயுதபாணிகளாக முச்சக்கரவண்டியொன்றில் சென்ற மூன்று பெண் புலிகள் மீது படைமுகாம் ஒன்றிற்கு அண்மையில் வைத்து வழிமறித்த கொலைஞர்கள் அவர்களை சுட்டுக் காயப்படுத்திவிட்டு படை முகாம் நோக்கி ஓடித்தப்பியுள்ளனர்.

இந்தத் தொடர் கொலைகளுக்கும் தாக்குதல்களுக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என இராணுவமும் சிங்கள அரசும் மறுத்துவருகின்றன. சமாதான முயற்சிகளுக்குச் சாவுமணியடிக்கக்கூடிய இந்தப் படுகொலைகளை அமைதியாக அவதானித்து வந்த சர்வதேச சமூகம் கௌசல்யன் படுகொலையுடன் தனது மௌனம் கலைத்து ராஜதந்திர ரீதியில் சிங்கள அரசை எச்சரித்தது.

கௌசல்யன் கொலை தொடர்பாக ஐ.நா செயலர் கொபி அனான் வெளியிட்ட அனுதாப அறிக்கை சிங்கள அரசுக்கு விடப்பட்ட ஒரு இராஜதந்திர மிரட்டலாகவே கருதப்படுகின்றது. இக் கொலைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்று சந்திரிகா அரசை சர்வதேச சமூகம் நிர்ப்பந்தித்துள்ளது.

இந்த நிலையிலேயே தனது அரசின் மீதுள்ள கொலைப்பழியை நீக்கும் அதிகார எண்ணத்துடன் ஆணைக்குழு அறிவிப்பொன்றை அம்மையார் விடுத்துள்ளார். இந்த ஆணைக்குழு அறிவிப்பை ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்று புலிகள் இயக்கம் விமர்சித்துள்ளது. சிங்கள அரசே கொலைகளுக்கு உத்தரவிட்டு விசாரணை என்ற பெயரில் அதுவே ஒரு ஆணைக் குழுவையும் அமைக்கப்போவதாக கூறிவருவது சிங்கள அரசின் வெறுப்பூட்டும் அரசியலுக்கு ஒரு சிறு உதாரணமாக உள்ளது.

சர்வதேச சமூகத்தை ஏமாற்றவே இந்த ஆணைக்குழு நாடகம் நடாத்தப்படுகின்றது. சந்திரிகா அரசின் இந்த சதிநாடகம் அரங்கேறுவதற்கு புலிகள் இயக்கம் துணையாகமாட்டாது. அதனாலேயே ஆணைக்குழு அறிவிப்பு வெளியான உடனேயே அதை நிராகரித்தது. புலிகள் இயக்கம் தனது நிலைப்பாட்டை உலகிற்கு தெரியப்படுத்தியது. புலிகளின் நிலைப்பாட்டையிட்டு உலகம் கருத்தெதையும் கூறவில்லை. சந்திரிகா அரசின் சதிநாடகம் சர்வதேச சமூகத்திற்கு தெரிந்த விடயமாக இப்போது மாறிவிட்டது.

தமிழரை இனக்கொலை புரிவதும் அதை உலக நாடுகளுக்கு மூடிமறைக்க அரசியல் சித்து விளையாட்டுக்களில் ஈடுபடுவதும் சிங்கள அரசிற்கு கைவந்த கலை. தமிழர்கள் கொலைகளை விசாரிக்கப் போகின்றோம் குற்றவாளிகளை கண்டறியப்போகிறோம் என்று பிதற்றுவது சிங்கள அரசுக்கு இதுதான் முதற்தடவையல்ல. ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூறுகளில் கிழக்கு மாகாணத்தில் சிங்களப்படைகள் செய்த பல படுகொலைகளுக்கு சிங்கள அரசுகள் ஆணைக்குழுக்களை அமைத்து விசாரித்த கதைகள் தமிழர்களுக்கு நன்கு தெரியும்.

கொக்கட்டிச்சோலை படுகொலைக்கு ஒரு ஆணைக்குழு, வந்தாறு மூலை பல்கலைக்கழக படுகொலைக்கு ஒரு ஆணைக்குழு, உடும்பன்குள படுகொலைக்கு ஒரு ஆணைக்குழு..... என்று ஆணைக்குழுக்களின் பட்டியல் நீண்டு செல்கின்றது. இந்தச் சிங்கள ஆணைக்குழுக்கள் எவ்வாறு விசாரித்தன எங்கிருந்தபடி விசாரணைகளை மேற்கொண்டன - யார் யாரை அழைத்து விசாரித்தன என்பது பழைய சங்கதி. இந்த ஆணைக்குழுக்களின் முடிவுகள் எப்படி இருந்தன என்பது எவர்க்கும் தெரியாது. இக் குழுக்களின் முன்தோன்றி சாட்சியம் அளித்த தமிழர்கள் பின்னர் காணாமல் போனதும், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பழிவாங்கப்பட்டதும் தமிழ் மக்கள் அறிந்தவையே. படுகொலைகளை விசாரிக்கவென்று வந்த இந்த ஆணைக்குழுக்கள் முன் சாட்சியமளித்ததால் படுகொலையான தமிழர்களின் கதைகள் ஏராளம் உண்டு.

சந்திரிகா அரசின் இந்த ஆணைக்குழு சிங்கள அரசிற்காக சேவகம் செய்யும் நோக்கம் கொண்டது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அல்ல. தமிழ் மக்களுக்கு அலுத்துப்போன இத்தகைய சிங்கள ஆணைக்குழுச் சகதிக்குள் மீண்டுமொரு முறை விழுந்தெழ தமிழ் மக்கள் தயாராக இல்லை.

வெளிவராத உண்மைகளை வெளிக்கொணர்வதுதான் சுயாதீன ஆணைக்குழுக்களின் பணியாகும். ஆனால் உலகிற்கு தெரிந்த உண்மைகளை மூடிமறைப்பதும் திசை திருப்புவதுமே சிங்கள அரசின் ஆணைக்குழுக்களது பணியாகும். உண்மையில் சிங்கள அரசு இக்கொலை அரசியலை உடனடியாக நிறுத்தவேண்டும். சமாதான முயற்சிகளுக்கு நேர்மையாக நடந்துகொள்ளவேண்டும். இனவெறி அரசியலைக் கைவிட வேண்டும். இவற்றை சிங்கள அரசு கருத்தில் எடுப்பதுதான் இன்றைய காலத்தின் தேவையாகும்.

— சு.இரவி —

# தமிழர் தாயகத்தைத் துண்டாக்கும்

**தே**சிய இனப்பிரச்சினைகள் நிலவுகின்ற எல்லா நாடுகளிலும் தேசிய இனங்களின் சுயநிர்ணயக் கோரிக்கையைப் பலவீனப்படுத்துவதற்கு ஒடுக்கும் சக்திகள் குடியேற்றங்களையே ஒரு பிரதான ஆயுதமாகப்பயன்படுத்துகின்றனர்.

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகளின் அடிப்படைகளை இல்லாமற் செய்தல், போர்காலங்களில் போராளிகளை இலகுவில் ஒடுக்குதல், ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களிடையே நெருங்கிய தொடர்புகளை வைத்துக்கொள்ளவிடாமல் தடுத்தல், தீர்வென வரும்போது குடியேற்ற மக்களைக் காட்டி தீர்வு முயற்சிகளை ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு சார்பாகச் செல்ல விடாமல் தடுத்தல் போன்றவற்றிற்கு குடியேற்றங்களையே ஒடுக்கும் சக்திகள் பயன்படுத்துகின்றனர். பாலஸ்தீனத்தில் யூதர்களின் குடியேற்றம், அயர்லாந்தில் புரட்டஸ்த்தாந்தினரின் குடியேற்றம், கோசோவாவில் சேர்பியர்களின் குடியேற்றம், திபெத்தில் சீனர்களின் குடியேற்றம், கிழக்குத் தீமோரில் இந்தோனேசியர்களின் குடியேற்றம் என்பன இந்த வகையிலேயே நடைபெற்றன. இலங்கையிலும் தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கையைச் செயலற்றதாக்குவதற்கு ஆட்சியாளர்கள் குடியேற்றங்களையே ஒரு பிரதான கருவியாக நீண்ட காலமாக பயன்படுத்தி வந்தனர். தமிழ் மக்களின் தனிவழி அரசியல் 1920களிலேயே உணரப்பட்டதால் அக்காலத்திலிருந்தே பேரினவாதிகளிடம் இக்குடியேற்ற எண்ணம் வலுப்பெறத் தொடங்கி இருந்தது. டொனமூர் அரசியல் யாப்பு காலத்திலேயே இதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டன. இக்காலத்தில் சிங்கள சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தைகொண்டே இம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1941ம் ஆண்டு உருவாக்கப்பட்ட கல்லோயா அபிவிருத்தித் திட்டம் இந்த வகையில் உருவாக்கப்பட்ட முதலாவது குடியேற்றத்திட்டமாகும். இதனைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்திலும் வவுனியா மாவட்டத்திலும், மன்னார் மாவட்டத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும், பல குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இத்திட்டங்களில் நீண்டகால இலக்கின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் திருகோணமலை, முல்லைத்தீவு திட்டங்களே ஆகும். இந்த இரண்டு பிரதேசங்களும் தமிழர் தாயகத்தினை இணைக்கின்ற மையமான பிரதேசங்களாக இருந்தமையினால் இங்கு குடியேற்றங்களைச் செய்வதன் மூலம் தமிழ் மக்களின் தாயகக்கோரிக்கையை இல்லாமல் செய்யலாம் என்பதே அவர்களது இலக்காக இருந்தது. இதிலும் திருகோணமலை மாவட்டத்திலேயே அதிகமான குடியேற்றத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. திருகோணமலை மாவட்டத்தினைக் கடற்கரைப்பக்கமாக வில்போல சுற்றி வளைத்து முல்லைத்தீவு மாவட்டத்துடனும், மட்டக்களப்பு மாவட்டத்துடனும் உள்ள நிலத் தொடர்ச்சியினை துண்டிப்பதே இத்திட்டங்களின் பிரதான நோக்கமாக இருந்தது. ஒரு வில்போல நீளமாக வளைந்திருக்கும் குடியேற்ற பிரதேசமான சேருவல தேர்தல் தொகுதியினை பார்க்கும் போது இவ்வுண்மை தெளிவாகப் புலப்படும். இக்குடியேற்றங்கள் பல்வேறு குடியேற்றத்திட்டங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட போதும் திட்டமிட்ட விவசாய குடியேற்றமே இதில் பிரதானமானதாக இருந்தது. அல்லைத் திட்டம், கந்தளாய் திட்டம், பதவியாத்திட்டம், மொறவேவாத் திட்டம் மாகதிவுல்வெலத் திட்டம் என்பன இவற்றுள் முக்கியமானவை ஆகும்.


> **தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகளின் அடிப்படைகளை இல்லாமற் செய்தல், போர்காலங்களில் போராளிகளை இலகுவில் ஒடுக்குதல், ஒடுக்கப் பட்ட மக்கள் தங்களிடையே நெருங்கிய தொடர்புகளை வைத்துக்கொள்ளவிடாமல் தடுத்தல், தீர்வென வரும்போது குடியேற்ற மக்களைக் காட்டி தீர்வு முயற்சிகளை ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு சார்பாக செல்ல விடாமல் தடுத்தல் போன்றவற்றிற்கு குடியேற்றங்களையே ஒடுக்கும் சக்திகள் பயன்படுத்துகின்றனர்.**

## அல்லைத்திட்டம் :

இத்திட்டமே திருகோணமலை மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட முதலாவது விவசாய குடியேற்றத்திட்டமாகும். இது 1949ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆனாலும் 1953ம் ஆண்டு தொடக்கமே மக்கள் இப்பிரதேசத்தில் குடியேறத்தொடங்கினர். மகாவலி கங்கை ஆற்றினை மறித்து வாய்க்கால்கள் மூலம் திருப்பி அல்லை குளத்தை நிரப்பி அதனோடு சூழவுள்ள கிராமங்களுக்கு நீர்பாசன வசதி செய்து கொடுப்பதற்காகவே இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இதற்கு முன்னரும் கூட இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1868ம் ஆண்டு வாய்க்கால்கள் வெட்டப்பட்டு தாழ் நிலமாக இருந்த பகுதிகள் இணைக்கப்பட்டு அல்லைக்குளம் உருவாக்கப்பட்டது. பின்னர் 1910ம் ஆண்டு குளம் பலப்படுத்தப்பட்டதோடு வாய்க்கால்களும் பெரிதாக்கப்பட்டன. எனினும் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இதில் பெரிய அக்கறை செலுத்தாததினால் திட்டம் விஸ்தரிக்கப்படவில்லை. சுதந்திரத்தைத் தொடர்ந்து இலங்கையின் முழுமையான பொறுப்பாட்சி சிங்களத் தலைவர்களிடம் வந்த பின்னரே 1949ல் இத்திட்டம் மிகப்பெரிய விவசாய திட்டமாக புனரமைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் 17,500 ஏக்கர் விவசாய நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஒரு குடும்பத்திற்கு 4 ஏக்கர் வயல் நிலமும் குடியிருப்புக்காக 1 ஏக்கர் மேட்டு நிலமும் என இரு வகை நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டவற்றில் 75% நிலங்கள் சிங்கள மக்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட்டன. 25% மான நிலங்களே தமிழ், முஸ்லிம் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. காணி உரிமை பெறுபவர்களுக்கான விண்ணப்பங்களை கோரும் போது சிங்கள மக்கள் இலங்கையிலுள்ள எல்லா அரசாங்க அதிபர்களினூடாகவும் கோரப்பட்டனர். ஆனால் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை திருகோணமலை மாவட்டத்தில் அதுவும் மூதூர் பகுதியில் இருப்பவர்கள் மட்டுமே கோரப்பட்டனர். சிங்கள மக்கள் அதிகமாக தென்மாகாணத்தில் இருந்தே விண்ணப்பங்களைச் செய்தனர். குறிப்பாக மாத்தறை மாவட்டத்தில் இருந்து அதிகளவில் குடியேறி இருந்தார்கள் எனப்பேசப்படுகிறது. இன்று திருகோணமலையில் இருந்து மாத்தறைக்கு நேடிரடியாக புகைவண்டிப் பயணம் நடைப்பெறுவதற்கு இக் குடியேற்றங்கள் ஒரு காரணமாக இருக்கலாம். பொதுவாக குடியேற்றங்களை மேற்கொள்ளும் போது அந்தப்பிரதேசத்தில் உள்ளவர்களுக்கும், அதனையடுத்து அந்த மாவட்டத்தில் உள்ளவர்களுக்கும், தொடர்ந்து அந்த மாகாணத்தில் உள்ளவர்களுக்கும், முன்னுரிமை வழங்கிப் பின்னர் ஏனையவர்களுக்கு வழங்குவதே வழக்கமானதாகும்.

ஆனால் தமிழர் தாயக குடியேற்றங்களைப் பொறுத்தவரை இத்தொடர் நிலை ஒழுங்கு கவனத்தில் கொள்ளப்படாமல் ஏனைய மாகாணங்களைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. அரசு தனது நீண்டகால இலக்கில் தெளிவாக இருந்ததனாலேயே இந் நிலை ஏற்பட்டது. இப் பாராபட்சங்களை அன்றைய காலத்தில் தமிழ் பேசும் அரசியல் சக்திகள் தடுத்திருக்கலாம். ஆனால் அவை தொடர்பான முயற்சிகள் எவற்றிலும் இவ்வரசியல் சக்திகள் இறங்கியதாக தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. இக்காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை தேர்தல் தொகுதியிலும், மூதூர்த் தேர்தல் தொகுதியிலும் என இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்திருந்தனர். 1947 - 1952 வரை திருகோணமலை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு.எஸ். சிவபாலனும், மூதூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக ஐ.தே.கட்சியைச் சேர்ந்த. A.R.A.M. அபூபக்கரும் விளங்கியிருந்தனர். இக்காலத்தில் தான் குடியேற்றம் தொடர்பான காணி கச்சேரிகள் நடைப்பெற்றதால் இதனை ஒரு அரசியல் பிரச்சினையாக்கி தடுத்திருக்கலாம். பாராளுமன்றத்தில் இது தொடர்பாக குரல்களையெழுப்பி இருக்கலாம். மக்களை இணைத்து போராட்டங்களை நடாத்தி இருக்கலாம். ஆனால் இவ்விரு தலைவர்களும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் எனச்சான்றுகள் எதுவுமில்லை.



திருகோணமலைத் தொகுதி உறுப்பினர் எஸ்.சிவபாலன் இப்பிரச்சினை தனது தொகுதிக்கு அப்பாற்பட்ட பிரச்சினையென கைவிட்டு இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களின் அரசியல் கட்சி என்ற வகையில் தமிழ் காங்கிரஸ் கட்சி இதனை கைவிட்டிருந்திருக்கக் கூடாது. மூதூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் A.R.A.M. அபூபக்கர் ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவராக இருந்தமையினால் கட்சிக்குள்ளேயே அழுத்தங்களைக் கொடுத்து இதனை தடுத்து இருக்கலாம். ஆனால் அவரும் எதுவும் செய்யவில்லை.

பொதுவாகவே அன்றில் இருந்து இன்றுவரை முஸ்லிம் தலைவர்கள் கிழக்கில் சிங்கள குடியேற்றம் பற்றி அக்கறை செலுத்தவில்லை. இது துரதிஸ்டவசமானதும் கவலைக்குரியதுமான ஒரு விடயமாகும். உண்மையில் இந்த முதலாவது குடியேற்றத் திட்டத்தினை இவர்கள் தடுத்திருந்தால் அதனை அடிப்படையாகக் கொண்டு ஏனைய குடியேற்றங்களை தடுக்கின்ற வாய்ப்பும் இருந்திருக்கும். காலத்தை பிந்தவிட்டு தமிழ் மக்கள் கவலைப்படவேண்டியதேவையும் வந்திருக்காது.

மக்கள் குடியேறத்தொடங்கிய 1953ம் ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலை தேர்தல்த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக தமிழரசுக் கட்சியைச்சேர்ந்த N.R.இராஜவரோதயமும், மூதூர் தொகுதி உறுப்பினராக M.A.H.முகம்மத்அலியும் அங்கம் வகித்து இருந்தனர். இருவரும் 1952-1956 வரை அங்கம் வகித்தனர். ஆனாலும் இவர்களும் இது விடயத்தில் எந்த முயற்சிகளையும் பெரிதாக மேற்கொள்வில்லை. தமிழ் காங்கிரஸ் கட்சி அக்கறை அற்றதாக இருந்தாலும் தமிழ் தேசியத்தையும் அதன் அடிப்படையில் அமைந்த சமஸ்டிக் கோரிக்கையும் முன்வைத்த தமிழ் அரசுக்கட்சி இதில் போதிய அக்கறை காட்டாதது தான் மிகவும் கவலைக்குரிய விடயமாகும். தமிழ் அரசுக் கட்சி ஆரம்பமாகிய போது அதன் கொள்கைத் திட்டத்தில் குடியேற்ற எதிர்ப்பு என்பது பிரதான விடயமாக இருந்தபோதும் குடியேற்றங்கள் தொடர்பாக அவர்கள் எந்தவித போராட்டத்தையும் நடத்தவில்லை. தமிழ்மொழி புறக்கணிப்புக்கு எதிரான போராட்டத்தினை மட்டுமே நடாத்தினார்கள்.

அல்லைத்திட்டத்தில் காணி பெறுபவர்களுக்குரிய தகமைகளைக் குறிப்பிடும் போது விண்ணப்பதாரிகள் விவசாயிகளாகவும், திருமணம் புரிந்தவர்களாகவும், விவசாய காணிகளை சொந்தமாக வைத்திருக்காதவர்களாகவும் இருத்தல் வேண்டுமென்றே குறிப்பிடப்பட்டது. ஆனால் நடைமுறையில் தமிழ் பேசும் மக்களைப்பொறுத்தவரையே இத்தகமைகள் கடைப்பிடிக்கப்பட்டன. சிங்கள மக்களைப் பொறுத்தவரை இவை கடைப்பிடிக்கப்படவில்லை. விவசாயம் தெரியாதவர்களும் நிலங்களை சொந்தமாக வைத்திருந்தவர்களும் அவர்கள் மத்தியில் இருந்து தாராளமாக தெரிவு செய்யப்பட்டனர். குடியேற்றத்திட்டத்தின் ஆரம்பகாலங்களில் சிங்களவர்கள் தமிழ் விவசாயிகள், விவசாயம் செய்வதை பார்த்தே அதன் அடிப்படையில் விவசாய முயற்சிகளை ஆரம்பித்தனர். நான் சந்தித்த பலமுதியவர்கள் தாங்கள் விவசாயம் செய்யும் போது குடியேறிய சிங்கள மக்களில் பலர் தாங்கள் செய்யும் விவசாய முறைகளை பார்த்ததோடு அல்லாமல் அது பற்றிய விளக்கங்களை தங்களிடம் கேட்டறிந்து கொண்டதாகவும் கூறியிருந்தனர்.

**கந்தளாய் திட்டம்**

இத்திட்டம் கந்தளாய் குளத்தினை மையமாக



- நிலவன்-

# சிங்கள குடியேற்றங்கள்

வைத்து 1950ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1954 தொடக்கம் மக்கள் குடியேறத் தொடங்கினர். அல்லைக்குடியேற்றத்தில் மக்கள் குடியேறிய காலப்பகுதியும், கந்தளாய் குடியேற்றத்தில் மக்கள் குடியேறிய காலப் பகுதியும் அண்மிய காலங்களாக இருந்தன. இதனால் இவ்விரு குடியேற்றமக்களுக் கிடையேயும் நெருங்கிய தொடர்புகள் காணப் பட்டன. கந்தளாய் குடியேற்றத்திட்டத்தின் மூலம் 24,750 ஏக்கர் காணி பகிர்ந்தளிக் கப்பட்டது. இதில் 14,360 ஏக்கர் காணி நெல் செய்கைக்காகவும், 10,420 ஏக்கர் காணி கரும்புச் செய்கைக்காகவும் பகிர்ந்தளிக் கப்பட்டன. 80%மான காணிகள் சிங்கள மக்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட்டன. 20% மான காணிகள் மட்டுமே தமிழ், முஸ்லிம் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. அல்லைத் திட்டத்தினைப் போலவே ஒரு குடும்பத்திற்கு 4 ஏக்கர் நெற்செய்கை நிலமும் 1 ஏக்கர் மேட்டு நிலமும் வழங்கப்பட்டது. கந்தளாய்ப் பிரதேசசபையும், உதவி அரசாங்க அதிபர் பிரிவும், இப்பிரதேசத்தை மையமாக வைத்தே உருவாக்கப்பட்டன. கந்தளாய் பிரதேசசபை எல்லைக்குள் உள்ள 22,737 வாக்காளர்களில் மிகப் பெரும்பான்மையோர் சிங்களவர்களே யாவர். பழம் பெரும் தமிழ் கிராமங்கள் பல இப்பிரதேசத்தில் உள்ள போதும் அவை அதி களவில் கவனிக்கப்படாத கிராமங்களாகவே உள்ளன.

இப்பிரதேசசபை 397.30 சதுரமைல் விஸ்தீரத்தை கொண்டதாகும். கந்தளாய் நகரம் இன்று திருகோணமலை நகரத்திற்கு அடுத்தபடியான ஒரு நகரமாக வளர்ச்சி யடைந்து வருகின்றது. திருகோணமலை மாவட்டத்தின் சிங்கள அரசியலில் ஆதிக்கம் செலுத்துபவர்களாக கந்தளாய் பிரதேச மக்களே உள்ளனர். திருகோணமலை மாவட் டத்தின் தற்போதைய சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் ஜயசேகரா கந்தளாய் பிரதேசத்தை சேர்ந்த ஒரு குடியேற்றவாசியாவர். ஜே.வி.பியைச் சேர்ந்த இவரே தற்போது புதிய குடியேற்றங்களில் அக்கறை செலுத்தி வருகின்றார். இக் குடியேற்றமும் அடுத்த வந்த பதவியா குடியேற்றமும் தமிழரசுக் கட்சியின் எழுச்சி காலங்களில் உருவாக்கப்பட்ட குடி யேற்றங்கள் ஆகும். அவ் எழுச்சிகள் எவையும் குடியேற்றங்களை தடுக்கவில்லை என்பது தான் மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இக்காலத்தில் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினராக இராஜவரோதயம் இருந்தி ருந்தார்.

## பதவியாத்திட்டம்

இத்திட்டம் 1954ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1956 தொடக்கம் மக்கள் குடியேறத் தொடங்கினர். அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பதவியாக் குளத்தினை மையமாக வைத்தே இத்திட்டம் உருவாக் கப்பட்டது. பதவியாக்குளம் அனுராதபுரம் மாவட்டத்தில் இருந்தாலும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள 2400 ஏக்கர் காணிகளுக்கு நீர் பாய்ச்சுவதை நோக்கமாகக் கொண்டே இது உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் இத் திட்ட காணிகள் முழுவதும் தமிழர்களுக்கே வழங்கப்படுவதாக கூறப்பட்ட போதும் பின்னர் முழுக் காணியும் சிங்களவர்களுக்கே பகிர்ந்த ளிக்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தின் வடபகுதியில் குடியேற்றங்களை செய்வதன் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்துடனான தமிழர்களின் நிலத்தொடர்ச்சியைத் துண்டிப் பதே இதன் பிரதான நோக்கமாகும். 1958ம் ஆண்டு இனக்கலவரத்தை தொடர்ந்து தென்ன மரவாடியை அண்டியிருந்த பிரதேசத்தில் வசித்திருந்த தமிழர்கள் பலாத்காரமாக அகற்றப்பட்டு அவ்விடங்களிலும் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். பின்னர் வந்த போர்க் காலங்களில் தென்னமரவாடி மக்கள் முழுமையாக வெளியேறியதைத் தொடர்ந்து இப்பிரதேசம் 100% சிங்கள மக்களைக் கொண்ட பிரதேசமாகவே உள்ளது. இப்பிரதேச மக்களுக்காக பதவி ஸ்ரீபுர என்னும் பெயரில் ஒரு பிரதேசசபையும், சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவும் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பிரதேச சபையில் வாக்காளர் எண்ணிக்கை 7203 என்ற அளவிற்கு மிக குறைவாக இருந் தபோதும், குடியேற்றங்களுக்கு அரசியல் உறுதிப்பாட்டை கொடுக்கவேண்டும் என்ப தற்காகவே பிரதேசசபை உருவாக்கப்பட்டது. இப்பிரதேச சபை 217.70 சதுரமைல் விஸ் தீரனத்தைக் கொண்டதாகும்.

## மொறவேவாத் திட்டம்

முதலிக்குளம் என்ற தமிழ் பிரதேசமே பின்னர் மொறவேவா என்ற சிங்களப் பெயராகமாற்றப்பட்டது. இத்திட்டம் 1954ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. 1962ம் ஆண்டு தொடக்கம் மக்கள் குடியேறத் தொடங்கினர். திருகோணமலையில் உள்ள பிரித்தானிய கடற்படைத்தளம் மூடப்பட்டதால் அதில் வேலை செய்தவர்கள் வேலை இழந்த போது அவர்கள் விவசாயம் செய்வதற்காகவே இத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் 4040 ஏக்கர் காணிகள் பங்கிடப்பட்டன.

முன்னைய குடியேற்றத் திட்டங்கள் தமிழ் மக்களை பாதிப்பனவாக இருந்தமை யால் தமிழரசுக் கட்சி இத்திட்ட விடயத்தில் சற்று அவதானமாக இருந்தது. திட்டங்கள் தொடர்பாக மோசடிகள் பாராபட்சங்கள், காணி கச்சேரிகள் மூலமாகவே நடைபெற்றதால் காணிக்கச்சேரி விடயத்தில் தமிழரசுக்கட்சி சற்று அவதானமாகவே இருந்தது. காணிகள் பங்கிடுவதற்கான காணிக்கச்சேரிகள் நடைபெற்ற போது தமிழரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கு.வன்னியசிங்கம் நேரடியாகவே அதில் பங்கேற்றியிருந்தார். காணிக் கச்சேரிகள் நடைபெற்ற எல்லா நாட்களிலும் அவர் அதில் கலந்து கொண்டார்.

இந்த இடத்தில் இலங்கையில் அரச இயந்திரத்தை இயக்குகின்ற சிங்கள அதி காரிகள் பற்றியும் சிறிது கூறுதல் வேண்டும். குடியேற்றப் பிரச்சினையில் சிங்கள மக்களை திட்டமிட்டு குடியேற்றுவதில் பிரதான பாத்தி ரத்தை வகிப்பவர்கள் இவர்களேயாவர்.

திருமலையில் கடமையாற்றிய சிங்கள அதிகாரிகள் இது விடயத்தில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர்களாக விளங்கினர். குறிப்பாக காணி தொடர்பாக அதிகாரிகள் முன்னணி வகித்தனர். திட்டமிட்ட விவசாய குடியேற்றம் மாத்திரம் அல்ல, சட்டவிரோத விவசாயக் குடியேற்றங்கள், மீனவர் குடியேற்றங்கள், வியாபாரக் குடியேற்றங்கள் என்பவற்றுக்கும் இவர்களே தூண்டுதல் வழங்குபவர்களாக இருந்தனர். திரு கோணமலை நகரப்பகுதிகளிலுள்ள கோயில் காணிகளை அடையாளங்கண்டு அவற்றி லெல்லாம் சிங்கள மக்களை குடியேற் றுவதில் முன் நின்றவர்கள் இவர்களேயாவர்.



திருகோணமலை மாவட்டத்தில் சட்ட ரீதியான குடியேற்றங் களுக்கு ஏறத்தாழ சமனான சட்டவிரோதமான குடியேற்றங்கள் உள்ளன. இக் குடியேற் றங்களுக்கு சட்ட ரீதியான அந்தஸ்த்தினை பெற்றுக் கொடுப்பதில் இவர்களே முன்னின்று செயற்பட்டனர். இவர்களின் செயற்பாட்டிற்கு வசதியாக திருகோணமலை மாவட்டத்தின் அரசாங்க அதிபராக தொடர்ச்சியாக சிங்களவர் ஒருவர் நியமிக்கப்படுவதே வழக்கமாக இருந்தது.

மொறவேவா திட்டத்துக்காக காணிகள் பங்கிடப்பட்ட போது 55% மான காணிகள் தமிழ், முஸ்லிம் மக்களுக்கும், 45% மான காணிகள் சிங்கள மக்களுக்குமென ஒதுக்கப்பட்டன. தமிரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நேரடியாக சமூகமளித்தும் கூட மூன்று இனங்களுக்கும் சமமாகவோ அல்லது குறைந்தபட்சம் திருமலை மாவட்ட இன விகிதாசாரப்படியோ காணிகள் பங்கிடப் படவில்லை.

இத்திட்டத்தில் மேட்டு நிலங்களில் குடியேற்ற வாசிகளுக்கென வீடுகள் கட்டப் பட்டன. 75% மான வீடுகள் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. மீதி 25% மான வீடுகளே தமிழ், முஸ்லிம் மக்களுக்கு கொடுக்கப் பட்டன. காணிகளைப் பெற்றுக்கொண்ட பல தமிழ், முஸ்லிம் மக்கள் வீடு கொடுக்கப்படா ததினால் தமிழ், முஸ்லிம் மக்கள் உடனடி யாக குடியேறவில்லை. சிங்கள மக்கள் மட்டுமே குடியேறினர். தொடர்ந்து வந்த இன அழிப்பு நடவடிக்கைகளினால் தமிழ், முஸ்லிம் மக்கள் குடியேறத்தயக்கம் காட்டவே நாள டைவில் குடியிருக்காத நிலங்கள் இரத்துச் செய்யப்பட்டு அவ்விடங்களிலும், சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். 1971ம் ஆண்டு விமானப்படையினருக்கான விவசாயப் பண்ணை அங்கு உருவாக்கப்பட்ட போது அதனை சான்றாக வைத்து பல சிங்கள மக் கள் குடியேறத் தொடங்கினர். விமானப் படையினரின் பண்ணை மேலும் குடியேற் றங்களை பலப்படுத்தியதால் எஞ்சியிருந்த ஒரு சில தமிழ்க்குடும்பங்கள் கூட வெளி யேறத்தொடங்கினர்.


இக் குடியேற்றத்தினை மையமாக வைத்தே மொறவேவா சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவும் மொறவேவா சிங்க ளப் பிரதேச சபையும் உருவாக்கப்பட்டன. 322 சதுர மைல் விஸ்தீரணத்தைக் கொண்ட இப்பிரதேசத்தில் தொடர்ச்சியான போர் கார ணமாக 60% மான சிங்கள மக்கள் வெளியே றியிருந்தனர். இதனால் 1994ம் ஆண்டு நடைப்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 38% மானவர்களே வாக்களித்திருந்தனர். மொத்தமாக 2,200 வாக்குகளே அளிக்கப் பட்டிருந்தன, மக்கள் மிககுறைவாக இருந்த போதும் குடியேற்றத்தை பலப்படுத்த வேண்டும் என்பதற்காக பிரதேசசபை உருவாக்கப்பட்டு தேர்தல் நடாத்தப்பட்டது. தற்போது சமா தானகாலமாகையால் வெளியேறிய மக்கள் மீளவும் குடியேறி வருகின்றனர். ஆனால் தமிழ்மக்கள் எவரும் குடியேறுவதாக தெரியவில்லை.

## மகாதிவுல்வெவ திட்டம்

பெரியவிளான் குளம் என்னும் தமிழ்ப் பிரதேசமே இத் திட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர் மகாதிவுல்வெவ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இத் திட்டம் 1979ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. 1981ம் ஆண்டு தொடக்கம் மக்கள் குடியேறத்தொடங்கினர். தமிழ் மக்களின் தனிநாட்டுப் போராட்டம் ஆரம்பித்துப் பின்னர் இத்திட்டம் உருவாக் கப்பட்டது என்பது முக்கியமானதாகும். போராட்டத்தை ஒடுக்குவதே இதன் இலக்காக இருந்தது. இத்திட்டத்தின் மூலம் 1200 ஏக்கர் காணி பங்கிடப்பட்டது. இதில் 65% காணிகள் சிங்கள மக்களுக்கும், 35% காணிகள் தமிழ் மக்களுக்கும் பங்கிடப்பட்டன. பங்கிடப்படும் போது 2 ஏக்கர் வயல் நிலமும் 1/2 ஏக்கர் மேட்டு நிலமும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்பட்டது. தமிழ் மக்களினுடைய போராட்டம் வளர்ச்சியடையத் தொடங்கிய பின்னர் கூட குடியேற்றங்களில் விட்டுக் கொடுக்க தயார் இல்லை என்பதற்கு இத் திட்டம் உதாரணமாக அமைந்தது.

திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மேற்கூறிய குடியேற் றங்களினால் பல விளைவுகள் அம் மாவட் டத்தில் ஏற்பட்டன. அவற்றில் ஒன்று திட்ட மிட்ட விவசாயங்களை குடியேற்றங்களை அடிப்படையாக வைத்து சட்டவிரோத குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டமையாகும். இதனை விரிவாக அடுத்த இதழில் பார்ப்போம். ●

**இதிலும் திருகோணமலை மாவட்டத்திலேயே அதிகமான குடியேற்றத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. திருகோணமலை மாவட்டத்தினைக் கடற் கரைப்பக்கமாக வில்போல சுற்றி வளைத்து முல்லைத்தீவு மாவட்டத்துடனும், மட்டக்களப்பு மாவட்டத்துடனும் உள்ள நிலத் தொடர்ச்சியினை துண்டிப்பதே இத்திட்டங்களின் பிரதான நோக்கமாக இருந்தது.**





# சுனாமி மீள்குடியேற்றம்:
# மீண்டும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள்

**கிழக்கில் உள்ள சிங்களவர்களை தனது நடவடிக்கைகளால் கவரவேண்டும் என்ற ஜே.வி.பி.யின் நேரடி நோக்கம் ஒரு புறம் இருக்க, கிழக்கில் சிங்களப் பேரினவாதத்தை பலப்படுத்தவேண்டும் என்கின்ற சதி நோக்கமும் ஜே.வி.பி. தலைமையிடம் காணப்பட்டது.**

காலாகாலமாகவே சிங்களப் பௌத்த பேரினவாதத்தின் பிரதிநிதிகளாகத் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டு பல்வேறு தரப்பினர் வலம் வந்த வரலாறு இலங்கையில் காணப்படுகின்றது.

அநாகரிக தர்மபால முதல் பண்டார நாயக்க, ஜே.ஆர். ஜெயவர்த்தன, டீ.பி.விஜயதுங்க, ரத்னசிறி விக்ரமநாயக்க, 'சப்புமல் குமார' ரத்வத்தை வரை- ஒவ்வொரு காலகட்டத்திலும் தேவைக்கு ஏற்றாற்போன்று பலரும் தம்மை சிங்கள பேரினவாதத்தின் பிரதிநிதிகளாகப் பகிரங்கமாகவே பிரகடனப் படுத்திப் பல்வேறு ஆட்டங்களை ஆடி அரசியல் நடாத்தியிருந்தார்கள்.

தற்பொழுது இந்த அரசியல் ஆட்டத்தை ஜே.வி.பி. துணிச்சலுடன் முன்னெடுத்து வருகின்றது.

சோசலிசவாதிகளாகவும், இடது சாரிகளாகவும், மாக்சிசவாதிகளாகவும், உலக மயமாக்கலுக்கு எதிரானவர்களாகவும், தேசப்பற்றாளர்களாகவும் தம்மை இனங் காண்பித்துக்கொண்டு முன்னர் வலம் வந்த ஜே.வி.பி.யின் முகமூடி படிப்படியாக கிழிந்து, கடைசியில் சிங்களப் பௌத்த பேரின வாதத்தின் பிரதிநிதிகள் என்கின்ற அவர்களது சுயரூபம் வெளிப்பட ஆரம்பித்திருக்கின்றது.

அண்மைக்காலமாக கிழக்கைக் குறிவைத்து ஜே.வி.பியினர் மேற்கொண்டு வரும் நகர்வுகள் இதனை உறுதிப்படுத்தியுமிருக்கின்றது. கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள், தமிழ் தேசியத்திற்கு எதிரான நடவடிக்கைகள், தமிழ் மக்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள், வடக்கில் இருந்து கிழக்கைப் பிரிப்பதற்கான முயற்சிகள் என்று ஜே.வி.பியினர் மேற்கொண்டு வருகின்ற அடாவடித்தனங்கள், எல்லைகடந்து செல்வதையே திருகோணமலைச் சம்பவங்கள் எடுத்துக் காண்பிக்கின்றன.

கடந்த 02.03.2005 அன்று திருகோணமலையில் ஜே.வி.பியினர் மேற்கொண்ட குடியேற்ற முயற்சியும், அதற்கு தமிழ் மக்கள் வெளிப்படுத்தியிருந்த வெகுஜன எதிர்ப்பு நடவடிக்கையும், இந்தப் பிரச்சினையில் இரண்டு தரப்பினரும் கொண்டுள்ள ஈடுபாட்டையும் கரிசனையையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

ஜே.வி.பி. அமைப்பினுள் உள்ள ஒரு பிரிவின் பெயர் 'ரது தருவ' (தமிழில் சிவப்பு நட்சத்திரம்). சுனாமி நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கென்று ஜே.வி.பி. தமது உறுப்பினர்களைக் கொண்டு இந்த அமைப்பை உருவாக்கியிருந்தது. தெற்கில் இந்த ரது தருவ பல சுனாமி நிவாரண நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொண்டது. சிங்கள மக்களுக்கு நிவாரணங்கள், புனர்வாழ்வு கிடைக்க வேண்டும் என்பதற்கு அப்பால், தெற்கில் அரசியல் ரீதியான அனுகூலங்களைப் பெற்றுவிட வேண்டும் என்பது ஜே.வி.பியின் மறை முகத்திட்டமாக இருந்தது. இதேபோன்று ஜே.வி.பி.யின் ரது தருவ குழு கிழக்கிலும் சுனாமி நிவாரண நடவடிக்கைகளில் தனது தொண்டர்களை களம் இறக்கியிருந்தது. கிழக்கில் உள்ள சிங்களவர்களை தனது நடவடிக்கைகளால் கவரவேண்டும் என்ற ஜே.வி.பி.யின் நேரடி நோக்கம் ஒரு புறம் இருக்க, கிழக்கில் சிங்களப் பேரினவாதத்தை பலப்படுத்தவேண்டும் என்கின்ற சதி நோக்கமும் ஜே.வி.பி. தலைமையிடம் காணப் பட்டது.

கடந்த 02.03.2005 அன்று திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவங்கள் ஜே.வி.பினரின் சதி நடவடிக்கையின் ஒரு வெளிப்பாடாக அரங்கேறியது. 01.03.2005 அன்று மாலை திருகோணமலையின் மையப் பகுதியில் உள்ள மக்கெய்சர் விளையாட்டரங்கில் வந்திறங்கிய ஜே.வி.பியினர், 'நிவாரண நடவடிக்கைக் குழு' என்ற வாக்கியம் பொறித்த பதாதைகளைத் தொங்க விட்டனர். குறிப்பிட்ட இந்த விளையாட்டரங்கு திருகோணமலை மத்திய பஸ்நிலையத்திற்கு பின்புறமாக அமைந்துள்ளது. மறுநாள் காலை, அதாவது 2ம் திகதி இந்த விளையாட்டு மைதானத்தில் மரங்கள், தளபாடங்கள், செங்கற்கள், கூடாரங்கள் என்று குடிமனை அமைப்பதற்கான பொருட்கள் வந்திறங்க ஆரம் பித்தன. பெரும் அளவிலான சிங்கள இளைஞர்களும் லொறிகளிலும், வேறு வாகனங்களிலும் வந்திறங்க ஆரம்பித்தார்கள்.

முதலில் குறிப்பிட்ட மைதானத்தைப் பராமரித்துவரும் விளையாட்டுக்குழு இளைஞர்கள்தான் இதனை அவதானித்தார்கள். இந்த விடயத்தை பொது அமைப்புக்கள், மற்றும் திருகோணமலையிலுள்ள சில பிரமுகர்கள் கவனத்திற்கு அவர்கள் கொண்டு வந்தார்கள். அதனைத்தொடர்ந்து மைதானத்திற்கு விரைந்த சில பொது அமைப்புப் பிரமுகர்கள் இந்த அடாவடித்தனம் தொடர்பான திருகோணமலை மக்களின் அதிருப்தியை வெளியிட்டதுடன், இந்தப் நடவடிக்கையை உடனடியாக நிறுத்தும்படி ஜே.வி.பியினரிடம் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் அதற்கு இணங்கவில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட சமுத்திரகம பிரதேச மக்களை குடியேற்று வதற்காகவே இந்த குடிமனைகள் அமைக்கப் படுவதாக அவர்கள் தெரிவித்தார்கள். திருகோணமலையின் சங்கமித்தை பிரதேசத் திற்கும், மீன் சந்தைக்கும் நடுவே உள்ள பிரதேசமே இந்தச் சமுத்திரகம என்றழைக் கப்படுகின்ற பிரதேசமாகும்.

இந்தப் பகுதி உண்மையிலேயே தமிழருக்குச் சொந்தமான ஒரு பிரதேசமாகும். திருகோணமலை காளி கோவிலின் தீர்த்தக் கரை அமைந்துள்ள புனிதப்பிரதேசம். ஸ்ரீலங்கா அரசாங்கம் திருகோணமலையில் மேற் கொண்டுவந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றச்சதியின் காரணமாக இந்த இடம் பறிபோய் தற்பொழுது சிங்களப்பகுதியாகக் காட்சி தருகின்றது. சுனாமி அனர்த்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருகோணமலையில் மேற் கொள்ளப்பட்டுவருகின்ற சிங்களக் குடியேற்றத்தை விஸ்தரிக்கும் நோக்கத்துடன்தான் ஜே.வி.பி. இந்தக் கைங்காரியத்தைச் செய்கின்றது என்பதை தமிழ் பொதுஅமைப்பைச் சேர்ந்தவர்கள் புரிந்துகொண்டார்கள்.

அரசாங்க அதிபர், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களுக்கு இந்த விடயம் பற்றி தமது அதிருப்தியையும், கண்டனத்தையும் வெளியிட்ட பொது அமைப்புக்கள் உடனடியாக களத்திலும் இறங்கி னார்கள்.

இளைஞர்கள் பல இடங்களிலும் வீதிமறியல் போராட்டங்களில் குதித்தார்கள். திருகோணமலையே முற்றாக ஸ்தம்பித மடையும் வகையில் திருகோணமலை மக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டார்கள்.

மக்களின் எதிர்ப்பையும் மீறி செல்ல முற்பட்ட ஜே.வி.பியினருக்குச் சொந்தமான வாகனம் ஒன்று பொதுமக்களின் தாக்குதலுக்கு உள்ளானது.

தமது அத்துமீறிய குடியேற்ற முயற்சியை தீவிரமடைந்த மக்கள் எதிர்ப்புக் காரணமாக அவசர அவசரமாகக் கைவிட்டுச் செல்லவேண்டிய அளவிற்கு நிலைமை மோசமானது. எஞ்சியிருந்தவர்களையும், ஜே.வி. பியினரால் கைவிட்டுச்செல்லப்பட்ட பொருட் களையும் பொலிசார் இரவிரவாக அகற்றி முடித்தனர்.

தற்காலிகமாக இந்த பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படுத்தப்பட்டது. ஆனாலும் மீண்டும் வருவோம் என்ற அறைகூவலுடனேயே ஜே.வி.பியினர் திரும்பியிருந்தார்கள்.

தமிழர் தாயகப்பிரதேசங்களில் இதுபோன்ற ஆக்கிரமிப்பு அடாவடித் தனங்களை மேற்கொள்ள அவர்கள் மீண்டும், மீண்டும் வருவார்கள் என்பதை கடந்தகால வரலாறுகள் வெளிப்படுத்திநிற்கின்றன.

இதுபோன்ற திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் சுனாமி மீள்குடியேற்றம் என்ற பெயரில் ஜே.வி.பியினர் ஈடுபட்டுவருகின்றார்கள். தொடர்ந்தும் ஈடுபடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. குறிப்பாக திருகோணமலைப் பிரதேசம் என்பது ஜே.வி.பியினரின் கண்களை தொடர்ந்து உறுத்திக்கொண்டிருக்கின்ற பிரதேசமாக இருந்துவருவதால், திருகோணமலையைப் பொறுத்தவரையில் அவர்கள் முழுமூச்சுடன் காரியமாற்றும் சந்தர்ப்பங்கள் அதிகம்.

தமிழீழத்தின் தலைநகர் என்று தமிழ் மக்களாலும், தமிழர் தேசத்தைக் கூறுபோடப் பயன்படும் பிரதேசம் என்று சிங்களப் பேரின வாதிகளாலும், கேந்திர முக்கியத்துவம் மிக்க ஸ்தலம் என்று சர்வதேச நாடுகளாலும் அடை யாளப்படுத்தப்பட்டுவரும் திருகோண மலை மாவட்டம் வடக்குக்கிழக்குத் தொடர்பான எந்தக் காரியங்களைப் பொறுத்தவரையிலும் ஒரு முக்கிய ஸ்தலமாக இருக்கும் என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை.

இந்த மூன்று வருட சமாதான காலத்தை கவனமாக எடுத்து நோக்கினால், படையியல் ரீதியாக அதிகம் பேசப்பட்ட ஒரு மாவட்டமாகவும் திருகோணமலை மாவட்டம் இருக்கின்றது. மூதூர் விவகாரம் முதல், புலிகளின் குரங்குப்பாஞ்சான் முகாம் விடயம், திருகோணமலை துறைமுகத்தில் அமெரிக்க கப்பல்கள் வந்து செல்வது தொடர்பான (Accusation & Cross Service Agreement) ஒப்பந்த விடயம், திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவிற்கு ஒப்படைத்தது, திருகோணமலை துறைமுகத்தை சுற்றி வழைத்து புலிகள் முகாம் அமைத்ததாக வெளியான செய்திகள், மாவீரர் தினத்திற்கு எதிரான தாக்குதல்கள்.. - என்று நிறைய இராணுவ தந்திரோபாய காய் நகர்த்தல்கள் திருகோணமலையை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்டன.

சிங்களப் பேரினவாத இயந்திரத்தைப் பொறுத்தவரையில் திருகோணமலை இராஜதந்திர ரீதியாகவும், போரியல் ரீதியாகவும் மிகமிக முக்கிமான பிரதேசம் என்பதால், திருகோணமலையை குறிவைத்து பல காய் நகர்த்தல்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கேந்திர முக்கித்துவம் வாய்ந்த திருகோணமலை ஒப்பீட்டளவில் முக்கிமான தாக இருப்பதால், திருகோணமலையைக் குறிவைத்து இந்தச் சமாதான காலத்தில் சிங்களப் பேரினவாதிகளால் பல நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஸ்ரீலங்காப்படைத் தரப்பினர் திருகோணமலையைத் தக்கவைக்கும் நோக்கத்தில் பல நடவடிக்கைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் மேற்கொண்டிருந்தனர். முக்கியமாக திருகோணமலையில் படையினர் தமது படைப்பலத்தை அதிகரித்திருந்தார்கள். திரு கோணமலையை எந்த விலைகொடுத்தாவது தக்கவைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் வெளிநாடுகளுடனும் பல ஒப்பந்தங்களைச் செய்யத்தலைப்பட்டார்கள். தமிழ் முஸ்லிம் கலவரங்களைத் திட்டமிட்டு கட்டவிழ்த்துவிட்டார்கள். முஸ்லிம் ஆயுதக் குழுக்களை உருவாக்கினார்கள். கிழக்கின் உதயம் என்ற பெயரிலும், வடக்கு கிழக்கு சிங்கள அமைப்பு என்ற பெயரிலும் பல சிங்கள அடிப்படைவாத அமைப்புக்களை உரு வாக்கி, வடக்கில் இருந்து கிழக்கு பிரிய வேண்டும் என்ற உணர்வை திருகோணமலை வாழ் சிங்களமக்களுக்கு ஏற்படுத்த முனைந்தார்கள். திருகோணமலை என்பது தமிழர்களுக்கு உரிய ஒரு பிரதேசம் அல்ல என்பதை சிங்கள மக்களுக்கும், சர்வதேசத்திற்கும் காண்பிக்கும் நோக்குடன் சிங்கள அடிப்படை வாதிகளைத் தூண்டிவிட்டு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் என்று பல வேடிக்கைகளை நிகழ்த்தினார்கள். கோமரங் கடவலயில் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட இரண்டு சிங்கள ஊர்காவல்படையினர் விட யத்தில் இடம் பெற்ற உண்ணாவிரதங்கள், ஆர்ப்பாட்டங்கள் முதற்கொண்டு, குரங்குப் பாஞ்சான் முகாமைமீட்பதற்கென்று கூறி மேற்கொள்ளப்பட்ட யாத்திரை, விடுதலைப் புலிகளின் தேசியக் கொடியை இறக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மாவீரர் தினத் தைக் குழப்புவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக் கைகள் என்று பலவற்றைக் குறிப்பிடமுடியும்.

இதுபோன்ற சதிகளின் தொடர்ச்சி தான் அன்மைய ஜே.வி.பியினரின் திரு கோணமலைக்குடியேற்ற முனைப்புக்கள்.

இந்த குடியேற்ற நாடகங்களின் தொடர்ச்சிகள் புல்மோட்டை, 5ம் கட்டை என்று தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

**தென்னவன்**

# இயற்கை விதிகள்



**மருத்துவர் ஒரு போராளியை அழைத்துச் செயன்முறை விளக்கம் கொடுக்கிறார். எவ்வாறு அடுத்தடுத்த குருதி, திரவஊடக மாற்றீடுகள் செய்வது இதயத்துடிப்பு நின்றால் என்ன செய்வது, செயற்கைச்சுவாசம் எவ்வாறு கொடுப்பது போன்றவை விளங்கப்படுத்தப்படுகின்றது. அனைத்தையும் விட முக்கியமானது பயணம் தாமதிக்கப்படக்கூடாது. வாகனமோ,படகோ பழுதாகலாம் என்பது கருத்தில் எடுக்கப்படுகின்றது. ஆதலால் இரண்டு வாகனம் இரண்டு படகு என ஒழுங்கு செய்யப்படுகிறது.**

குடாரப்பு மணற்பிரதேசம் சூடேறிக்கொண்டிருக்கின்றது. போர் வெம்மையுடன் ஒப்பிடுகையில் அது இதமானதாகவே இருக்கின்றது. ஆனையிறவைக் கைப்பற்றுவதற்கான தந்திரோபாயமாக மேற்கொள்ளப்பட்டதுவே இத்தரையிறக்க முற்றுகை. இதனை முறியடிக்க எதிரி மூர்க்கமாக முயன்றுகொண்டிருக்கிறான். ஆயிரத்தை யெட்டியிருந்த போராளிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைவடையத் தொடங்கிவிட்டது. சற்று முன்னர் எதிரி மேற்கொண்ட தாக்குதலில் சிலர் வீரச்சாவடைந்துவிட்டனர். காயமுற்றவர்கள் அவசர உயிர்காப்புச்சிகிச்சைகள் அளிக்கப்பட்டு பின்தளம் அனுப்பப்பட்டு விட்டனர். அடுத்துவரப்போகும் சமரை எதிர்பார்த்து களமருத்துவப்போராளிகள் மீளொழுங்கினைச் செய்து முடித்திருந்தனர். பனைவடலிகளுக்கிடையில் எலிவளைகள் போல் அமைக்கப்பட்டிருக்கும் பதுங்ககழிகள் தான் அவர்களின் மருத்துவப்பாதுகாப்பிடம்.

பனைவடலி நிழலில் நீட்டிக்கொண்டிருக்கும் கருக்குமட்டைகள் வெட்டாமல் மண்மூடையொன்றில் சாவகாசமாகச் சாய்ந்திருக்கிறாள் விடுதலைப்புலிகளின் பெண் இராணுவ மருத்துவர் வளர்மதி. அருகிருக்கும் இசையரசியைப்பார்த்து சொல்கிறாள். "மருந்துகள் கொஞ்சம்தானிருக்கு, இரத்தமும் வந்து சேரவில்லை" களைப்பைப்போக்க கண்களைமூடித்தியானம் செய்வதுபோல் மௌனமாக இருந்தவள் கண்களைத்திறந்து "அதற்கு என்ன? என்பதுபோல் பாவனையில் கேட்கிறாள். "அதுக்கில்ல..... இப்ப கடுமையாக யாரும் காயப்பட்டு வந்தால் என்ன செய்யிறது?" இவளது இடக்கான கேள்வியைப் புரிந்தவள் புன்முறுவலுடன் சிறிது இடைவெளிவிட்டுக் கதைக்கிறாள். "சரி...நான் கேட்கிறதற்கு பதில் சொல்லு! அதிக ரத்தம் வெளியேறும் போது உடலின்தற்காப்பு பொறிமுறை எவ்வாறு இயங்கும்?" "மூளை,இதயம், நுரையீரல் போன்ற முக்கிய அங்கங்கள் இறுதிவரை பாதுகாக்கப்படுவதற்கு ஏனைய அங்கங்களுக்கான இரத்தவிநியோகம் குறைக்கப்பட்டு திசைதிருப்பப்படும்." "அப்படித்தான் இயற்கைவிதிகள் இயக்கத்திற்கும் பொருந்தும்." என உரையாடலை முடிவிற்கு கொண்டு வருகின்றாள் வளர்மதி. "நித்திரைகொள்ள வேண்டிய நேரத்தில் கதைக்கிறோம் போல் இருக்கிறது" எனக்கூறியவாறு மீண்டும் கண்களை மூடுகின்றாள்.

அப்பொழுது எதிரி எறிகணை ஏவும் சத்தமும் டாங்கிகள் உறுமும் சத்தமும் கேட்கத்தொடங்குகின்றது. "மீண்டும் தொடங்கிட்டான், ஒருகை பார்க்கிறது எண்டுதான் நிக்கிறாங்கள்" கூறியபடி பதுங்ககழிகனுள் புகுந்து கொள்கிறார்கள். எறிகணைகள் சரமாரியாக இவர்கள் பகுதிகளில் வீழ்ந்து படீர் படீர் என வெடிக்கின்றது. மேலால் வந்துவிழும் எறிகனைகளும் கிடையாக வந்துதாக்கும் டாங்கியின் எரிதணல்களும் பனை மரங்களைப் பொச்சுகளாகப்பிய்த்து எறிகின்றன. காய்ந்த ஓலைகள் நிறைந்திருந்த பனைமரங்களும் சிறு பற்றைகளும் பற்றி எரிகின்றன. கடந்த சில நாட்களாக இவ்விகாரமான போர் அகோரத்திற்கு பழக்கப்பட்டிருந்தார்கள். அப்பொழுது தொலைத்தொடர்பு கருவியில் அறிவித்தல் வருகின்றது. எதிரி முன்னேற முற்படும் பகுதியில் கடமையாற்றிய களமருத்துவப்போராளி இறந்து விட்டதாகவும், இன்னொருவரை அங்கு அனுப்பும்படியும் "களமருத்துவர்களின் எண்ணிக்கை வீதம் கைமீறிக் குறைந்துவிட்டது. எனினும் ஒன்றும் செய்யமுடியாது. உடனடியாக இசையரசி தனது களமருத்துவப்பையையும் எடுத்துக்கொண்டு புறப்படுகின்றாள். எறிகணைச்சிதறல்கள் படாமல் சமர் நடைபெறும் இடம் சேர்வது என்பது அவளுடைய அதிஸ்டத்துடன் தொடர்புடையது.

மகளீர் படையணியும் எதிரியும் கைகலப்பில் ஈடுபடும் தூரத்தில் சுப்பாக்கிச் சமர்புரிகின்றனர். பகைவன் அடிவாங்கிப் பின்வாங்குகையில் இவர்கள்மீது எரிதணல் பொழியும். இவர்கள் அதற்கு நிலையெடுக்க எறிகனை வீச்சு இவர்களின் சுற்றயல் நோக்கி நகரும். எதிரி நேராக இவர்களுள்ள இடத்திற்குள் உட்புகமுனைவான். மீண்டும் இருபகுதியினரும் நேருக்குநேர் அடிபடுவார்கள். இறப்புக்கள் அதிகரிக்கும் மீண்டும் பின்வாங்குதல் மீண்டும் முன்னேறுதல் என நிகழ்வுகள் தொடர களமுனை எறிகணைச் சிதறல்ளாலும், வெற்றுக்கோதுகளாலும் நிறையும், காயமடைந்தவர் குரல்களால் களம் மேலும் விகாரமடையும். சமரின் உச்சக்கட்டத்தில் சமர்முனையின் மகளீர் தளபதி வயிற்றில் காயமடைந்து விழுகின்றாள். பாரிய இரத்தப்பெருக்கு ஏற்படுகின்றது. உடனடியாகக்கட்டுப்போடப்படுகின்றது. எனினும் வயிற்றறையினுள் இரத்தம் பெருகுவதை விளங்கக்கூடியதாக உள்ளது. இங்கு இரத்தப்பெருக்கை நிறுத்துவது சாத்தியமற்றது. திரவஊடக மாற்றீடு செய்தலே சாத்தியமானது. உடனடியாக தளபதிக்கு"வென்புலோன்"போட்டு திரவ ஊடகத்தை ஏற்றுகின்றாள் இசையரசி. தாமதிக்கும் ஒவ்வொரு கணங்களும் ஆபத்தானவை அடுத்த களமருத்துவ நிலைக்கு மாற்றும்வரை உயிரைத் தக்கவைக்கவேண்டும். தளபதியைத் தோழில்தூக்கிக் கொண்டு வேகமாகப் பின்வாங்குகின்றாள். காயப்பட்டவள் வலியில் கத்துவதையும் பொருட்படுத்தாமல் இசையரசி வேகமாக ஓடுகிறாள். அப்பொழுது எறிகணைச்சிதறல் ஒன்று இசையரசி நெஞ்சைத்துளைத்துச்செல்கிறது. அவள் குப்புறவிழுகின்றாள். அப்பொழுது அங்கு சமரிட்டுக்கொண்டிருந்த சில போராளிகள்வந்து இருவரையும் தூக்கிக்கொண்டு களமருத்துவ நிலைக்கு

தோல் பிசுபிசுத்துக்காணப்படுகிறது. மீண்டும் அதிர்ச்சிநிலைக்கு உட்பட்டி ருந்தார். மீண்டும் இரத்தம், திரவஊடகம், உயிர்க்காப்பு மருந்து நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் என்பன ஏற்றப்படு கின்றது. இதைத்தவிர அங்கு ஒன்றும் செய்ய முடியாது. வயிற்றறை வெட்டித் திறக்கப்பட்டு சேதமடைந்திருக்கும் குருதிக்கலன்கள் கட்டப்படவேண்டும். மேற்படி சிகிச்சை செய்வதாயின் பின்தளம் அனுப்பப்பட வேண்டும். அதுவரை உயிரைத்தக்க வைப்பதுதான் இவர்களது இலக்கானது. மீண்டும் உழவு இயந்திரத்தில் தளபதி ஏற்றப்படுகின்றார். எறிகணைவீச்சு, கடற்கலங்களின் பீரங்கித்தாக்குதல், கிபிர் விமானங்களின் அச்சுறுத்தல் அனைத்தையும் அலட்சியம் செய்த வண்ணம் உழவு இயந்திரம் புழுதிகிளப்பிப் புறப்படுகின்றது.

மிகசிரமத்தின் மத்தியில் கட்டைக்காட்டில் இயங்கும் பிரதான களமருத்துவநிலையை கொண்டுசெல்கின்றார்கள். இருவர்நிலையையும் களமருத்துவர் வளர்மதி பரிசோதிக்கிறார். இசையரசி வீரச்சாவடைந்துவிட்டாள். தளபதி இரத்தப்பெருக்கால் அதிர்ச்சிநிலையை எட்டிவிடப்பட்டுவிட்டாள். உடனடியாகப் பதுங்ககழியினுள் வைத்து இரத்தம் ஏற்றப்படுகின்றது. எனினும் இரத்தம் வெளியேறும் வீதத்துடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் குருதி ஏற்றவேண்டும். ஆனால் அது இங்கு சாத்தியமில்லை. இப்பகுதி எப்பவும் எதிரியால் கைப்பற்றப்படலாம். உடனடியாகப் தொண்டமனாறு நீரேரிகடந்து அடுத்த மருத்துவநிலைக்கு கொண்டு செல்லப்படுகிறாள். அங்கு கடமையில் இருக்கும் போராளிமருத்துவர் வித்தகி தளபதியைப் பொறுப்பேற்கின்றார். பரிசோதிக்கையில் மீண்டும் இரத்த அழுத்தம் குறைந்தது, நாடித்துடிப்புவீதம் அதிகரித்து, வந்தடைகின்றனர். அங்கு கடமையாற்றும் மருத்துவர் அருந்ததி தளபதியை பொறுப்பேற்று பரிசோதிக்கின்றார். மீண்டும் அவரின் உயிர் சாவின் எல்லைக்கு வந்திருந்தது. இங்குசற்று நிதானமாக மீளவுயிர்ப்பித்தல் செய்யக்கூடியதாக உள்ளது. மீண்டும் இரத்தமும் ஏற்றப்படுகின்றது. வன்னித்தளத்தில் இயங்கும் பிரதான சத்திரசிகிச்சை கூடத்திற்கு அனுப்புவதற்கு சில மணித்தி யாலங்கள் எடுக்கும். முதலில் பனை மரங்கள் நிறைந்த மணற்தரையூடாக பயணிக்க வேண்டும். பின் கண்டாவளை நீரேரி கடக்கவேண்டும் மீண்டும் தரையில் பயணிக்க வேண்டும். சீரற்றபாதைகளும், அடிக்கடி பழுதடையும் வாகனங்களும், போர்அபாயமும் எந்நேரமும் உயிரைப் பறிக்கலாம். குறித்த மருத்துவமனை போய்ச்சேரும்வரை குறைந்தது ஒரு மருத்துவரின் கண்காணிப்பு அவசியமானது. தொடர்ந்து இரத்ததிரவம் ஊடக மாற்றீடு செய்யப்படவேண்டும் ஆனால் உடன் அனுப்புவதற்கு மருத்துவப்போராளிகள் இல்லை. அங்கு கடமையாற்றுபவர்களுக்கு வேலைப்பழு அதிகரித்த வண்ணம் உள்ளது.

உடன் மருத்துவர் ஒரு போராளியை அழைத்துச் செயன்முறை விளக்கம் கொடுக்கிறார். எவ்வாறு அடுத்தடுத்த குருதி, திரவஊடக மாற்றீடுகள் செய்வது இதயத்துடிப்பு நின்றால் என்ன செய்வது, செயற்கைச்சுவாசம் எவ்வாறு கொடுப்பது போன்றவை விளங்கப்படுத்தப்படுகின்றது. அனைத்தையும் விட முக்கியமானது பயணம் தாமதிக்கப்படக்கூடாது. வாகனமோ,படகோ பழுதாகலாம் என்பது கருத்தில் எடுக்கப்படுகின்றது. ஆதலால் இரண்டு வாகனம் இரண்டு படகு என ஒழுங்கு செய்யப்படுகிறது. அனைத்தி னதும் தொலைத்தொடர்புகள் உறுதிப் படுத்தப்படுகின்றது. நீரேரியின் மறுமனையில் இரண்டு வாகனமும் ஒருமருத்துவரையும் வந்து நிற்கும்படி அவசரதகவல் அனுப்பப்படுகின்றது. கூடப்போகும் போராளிக்கு அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது. 'வோக்கித்தொடர்போட போங்கள். வழியில் வாகனமோ படகோ பழுதடைந்தால் அடுத்தது வரும். அங்கால பொறுப்பெடுக்க அவர்கள் நிற்பினம். அவர்களிடம் ஆள உயிரோட கொண்டு போய்ச் சேர்க்கிறது உங்களுடைய பொறுப்பு' மேற்படி காயடைந்த தளபதியை ஏற்றி பிக்கப் வாகனம் வேகமெடுத்தது.


தொடர்ந்து வரும் காயக்காரர்களுக்கு சிகிச்சையளிப்பதில் இவர்கள் முழ்கிவிட்டார்கள். காயம் நகரும் பயணம் இடையூறின்றி நடைபெறுகிறது என்பதை இடையிடையே உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள். அப்பொழுது ஒரு அதிர்ச்சித்தகவல் கிடைக்கின்றது. குறித்த தளமருத்துவமனை இரவோடு இரவாக இடம்மாற்றப்பட்டு விட்டது. மறுநாள் வான்தாக்குதல் ஒன்றை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். இதனால் காயம் பயணிக்க வேண்டிய தூரம் இருமணிக ளால் அதிகரித்தது. விளைவுகளை யோசித்து கவலைப்பட போர்ப்பணி இடம் தரவில்லை. இறுதியாகக் கிடைத்த தகவல் நிம்மதியைக்கொடுத்தது. மேற்படி தளபதிக்கு வயிற்றைத்திறந்து இரத்தப் பெருக்கு நிறுத்தம் சத்திரசிகிச்சை வெற்றி கரமாகச் செய்யப்பட்டுள்ளது என.

சில மாதங்கள் கடந்து விட்டிருந்தது. மேற்படி மருத்துவர்கள் கற்கைநெறி யொன்றினைப் பயின்றுகொண்டி ருக்கிறார்கள். அப்பொழுது எதிரி தீச்சுவாலை இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருந்தான் இவர்களின் மருத்துவரீதியான பங்களிப்பு இல்லா மலேயே அச்சமர் புலிகளால் முறியடிக் கப்பட்டு விட்டது. அதில் ஈடுபட்ட போராளிகளை பாராட்டும் நிகழ்வு நடைபெற்றது. அதில் தேசியத்தலைவர் கலந்து கொண்டு சிறப்பித்தார். அவரால் கௌரவிக்கப்பட்டவர்களில் மேற்படி தளபதியும் ஒருவராயிருந்தது இவர்களுக்கு மகிழ்வைக் கொடுத்தது நினைவுகளில் பெருமிதத்தையும் தான்.

— தூயவன்

# சிங்கள அரசியலின் சாரம்சம்; துப்பாக்கியைப்போலவே தென்றலும் புயலும் ஒடுக்குமுறைக்கான கருவிகள்





இலங்கையின் உள்நாட்டு அரசியலும், கட்சி அரசியலும், அயல்நாட்டு அரசியலும், சர்வதேச அரங்கிலும் இனப்பிரச்சினையினையும் விடுதலைப் புலிகளையும் மையமாகக் கொண்டே பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளன. அதாவது இலங்கைத்தீவின் அனைத்துவகை அரசியலும் இனப்பிரச்சினையின் மீதும் புலிகளின் மீதும்தான் மையங்கொண்டுள்ளன.

இனப்பிரச்சினையின் பெயரால் சனாதிபதி சந்திரிகா தன்னை இலங்கையின் பெரும் தலைவராக்க முயன்று வருகின்றார். இனப்பிரச்சினையைச் சிங்கள அரசியற்சக்திகள் அனைத்தும் ஒரு கரகாட்டப்பொருளாக்கி விட்டன. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதென்பதல்ல இப்போதைய பிரச்சினை; அதை வைத்து தத்தம் நலன்களை எப்படி ஈட்டலாம் என்பதே இப்போதைய பிரச்சினை.

**சமாதான முயற்சிகளைக் குழப்பியடித்து - மீண்டும் போரைத்தொடங்கும் இராணுவ நோக்கம் கொண்டதாகவே இந்தப் படுகொலைகள் காணப்படுகின்றன. இதேவேளை தமிழ், முஸ்லிம் அப்பாவிப் பொதுமக்களும் இந்தக் கொலைத் தாக்குதல்களுக்கு உள்ளாகிவருகின்றனர். தமிழர் மத்தியில் அச்சத்தையும் தமிழ் - முஸ்லிம்கள் மத்தியில் முரண்பாட்டையும் ஏற்படுத்தும் சதி நோக்கத்துடன் இந்த மக்கள் கொலைகள் இடம்பெறுகின்றன.**

ஆட்சியாளரின் நிகழ்ச்சிநிரலில் (Agenda) இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாணுதல் என்ற விடயம் இடம் பெறவில்லை. இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வென்பது அவர்களின் மனங்களுக்கு வெளியே, அவர்களின் விருப்பங்களுக்கு வெளியே, அவர்களது நிகழ்ச்சி நிரல்களுக்கு வெளியே நிற்கின்றது.

சமாதானத்தீர்வை வெளிப்படையாக எதிர்க்கும் சக்திகள் ஒருபுறமும், சமாதானத் தீர்வுக்கு முயற்சி மேற்கொள்வதாகக்காட்டும் சக்திகள் மறுபுறமும், சமாதானத்தீர்வுக்கு ஆதரவுகாட்டுவதாகக்கூறும் சக்திகள் இன்னொருபுறமென சிங்கள அரசியலின் நாடக அரங்கு உள்ளது. செயல்பூர்வ அர்த்தத்திலும் இலக்கிலும் சமாதானத்திற்கு எதிர்நிலையை வகிக்கின்றன.

ஜே.வி.பி, ஹெலஉறுமய, சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, ஊடகங்கள், புத்திஜீவிகள் எனப்பலதரப்பட்ட சிங்களச் சக்திகளும் இந்நாடகத்தின் கதாபாத்திரங்களாகும். இச்சக்திகள் அனைத்தும் இனப்பிரச்சினையையும் அதற்கான தீர்வையும் தங்கள் கால்களுக்குள்போட்டு மிதித்துக்கொண்டு தங்களுக்கிடையேயான பிரச்சினையைத்தான் இப்போதும் கருப்பொருளாகக் காட்டி நாடகமாடுகின்றனர்.

அவர்கள் அனைவரும் தமிழ் மக்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் காட்ட விரும்பும் காட்சிஇதுதான். இனப்பிரச்சினையை விடவும் தங்களுக்கு இடையேயான பிரச்சினை தான் பெரிதாக உள்ளது. எனவே தங்களுக்கு இடையேயான பிரச்சினையைப் பார்த்துக்கொண்டிருங்கள், இப்போதைக்கு தங்கள் நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருக்குமாறு கோருகிறார்கள். ஆனால் அவர்களது நாடகம் இவ்வாறு அரங்கேறிக்கொண்டிருக்கும் போது அவர்களது கால்களுக்குள் இனப்பிரச்சினை மிதிபட்டு நசிந்து கொண்டிருக்கின்றது. என்பது நாடகத்தின் துன்பியற்கட்டமாகும். “பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன்போகின்றது” என்ற நிலையே இங்கு யதார்த்தமாயுள்ளது.

பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச்சார்ந்தது. அரசாங்கத்திற்கு உள்ளேயும், அரசாங்கத்திற்கும் வெளியேயும் பிரச்சினைகள் இருப்பதாகக் காட்டிக்கொண்டு தமிழ் மக்களை நசுக்கி வருவது இலங்கையின் ஓர் அரசியல் வழிமுறையாகிவிட்டது. இராணுவத்தை தமிழ் மண்ணெங்கும் பரப்பி வைத்துக்கொண்டு தமிழ் மக்களின் அன்றாடவாழ்வையும், வளத்தையும், வளர்ச்சிகளையும் நசுக்கி வருவது போல தமது கட்சி அரசியல்களை அரங்கத்தில் பரப்பிவைத்துக்கொண்டு அதன் மூலம் தமிழ் மக்களை ஒடுக்கி வருகின்றனர். அதாவது ஆயுதங்களையும், இராணுவத்தையும், சட்டங்களையும், திட்டங்களையும் எவ்வாறு ஒடுக்குமுறைக்கான கருவிகளாகப்பயன்படுத்தி வருகின்றனரோ அவ்வாறே தமதுகட்சி அரசியல்சார் பிரச்சினைகளையும் தமிழ்மக்களுக்கெதிரான ஓர் ஆயுதமாகப்பயன்படுத்திவருகின்றனர்.

பதவியில் இருக்கும் அரசாங்கத்தின் பொறுப்பு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுதான். தீர்வுகாண்பதற்குப் பதிலாக அவர்கள் தங்களுக்குள் பெரும்பிரச்சினைகள் இருப்பதாக அதனை முன்னிறுத்துகிறார்கள். சனாதிபதி சந்திரிகா தீர்வுக்கான நடவடிக்கையில் ஈடுபடாமல் தீர்வுகாணாதிருப்பதற்கும், ஒடுக்குவதற்கும் உரிய அணிகலன்களாகவும் அரண்களாகவும் ஜே.வி.பியையும் ஹெலஉறுமயவையும், ஐக்கியதேசியக்கட்சியையும் மற்றும் இனவாதசக்திகளையும் அவர் கொண்டிருக்கிறார்.

“சமஷ்டித்தீர்வை எதிர்ப்பவர்கள் முட்டாள்கள்” “சமஷ்டித் தீர்வில்லையேல் நாடு இரண்டாகும்” “சமாதானத்திற்கு 85% மக்களின் அங்கீகாரம் உண்டு” எனத் தற்போது கூறும் சந்திரிகா அதனை நோக்கி ஒரு கல்லைத்தானும் நகர்த்தியது கிடையாது. இவ்வாறு ஆக்ரோசமாய்ப் பேசிக்காட்டுவதன் மூலம் தான் தீர்வு காணத்துடிப்பவர் என்று தன்னைச்சூழ உள்ளும்புறமும் இருக்கும் முட்டாள்த்தனமான சக்திகளை எதிர்த்துப்போராட வேண்டிய, போராடிவருகின்ற புனிதமான பணியைத்தான் தோளில் சுமப்பதாக அவர் பகல்வேசமாடுகிறார்.

சனாதிபதி சந்திரிகாவின் வாய் சமாதானத்தீர்வைப் பற்றிப்பேசிக் கொண்டிருக்கின்றது; ஆனால் அவரது கைகள் பாகிஸ்தானிடமிருந்தும், சீனாவிடமிருந்தும், மற்றும் சாத்தியமான அனைத்து நாடுகளிலுமிருந்து ஆயுதங்களையும் ஆயுத தளபாடங்களையும் வாங்கிக்குவித்த வண்ணமுள்ளன. ஆயுதம் வாங்கிக்குவிக்க கண்டம் விட்டுக் கண்டம் புறப்படும் அவரது கால்கள் சமாதானத்திற்காக கொழும்பு வீதிகளில் தனது சொந்தத் தெருக்களில், தனது சொந்தத் தெருக்களின் பட்டி தொட்டிகளில் ஊர்வலம் போகத்தயாரா?

தமிழ் மக்களின் கண்களைப் பிடுங்குவதற்காகவும், சர்வதேச சமூகத்தின் கண்களைக்கட்டுவதற்காகவும் அவர் பத்திரிகையாளர் மாநாடுகளில் “சமாதான” உச்சாடனங்களைச் செய்வதற்குப்பதிலாக அவர் தனது வாழ்நிலையில் சமாதானத்திற்காகப் போராடிய ஒரு கட்டத்தைத்தானும் காணமுடியாது. இத்தகைய பின்னணிகளில் சந்திரிகா சுனாமியை சூடுகாய்வதற்குரிய அரியதொரு வாய்ப்பாய்ப்பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்.

இன மத மொழி வேறுபாடுகளுக்கப்பால் இயற்கை மனிதனுக்குச் சவாலாய் வந்துவிட்ட நிலையில், மனிதன் தனக்கிடையேயான முரண்பாடுகளைக் கடந்து தீர்வு காணத்தக்க ஒரு யதார்த்த நிலையை சுனாமி முன்னிறுத்தியபோது சந்திரிகா சுனாமியைக் சாட்டாகக்காட்டித் தீர்வைப் பின்தள்ள முற்பட்டுள்ளார். நன்மைக்குக் சாதகமாகப் பயன்படுத்தத்தக்க இயற்கையின் சவாலை சிங்கள ஆட்சியாளர் தீமைக்குச் சாதகமாய்த் திசை திருப்பிவிட்டனர்.

இறுதி ஆய்வின்படி பார்ப்போமானால் சிங்களச்சட்டங்களை எடுத்தாலென்ன, திட்டங்களை எடுத்தாலென்ன, கட்சிகளை எடுத்தாலென்ன, தத்துவங்களையெடுத்தாலென்ன, கோட்பாடுகளை எடுத்தாலென்ன, வெளியுறவுக்கொள்கைகளை எடுத்தாலென்ன, உள்நாட்டுக் கொள்கைகளை எடுத்தாலென்ன, மழையை எடுத்தாலென்ன, சூறாவளியை எடுத்தாலென்ன, சுனாமியை எடுத்தாலென்ன அனைத்தையுமே தமிழினத்தை ஒடுக்குவதற்குரிய கருவிகளாகப் பயன்படுத்துவதுதான் சிங்கள அரசியலின் சாராம்சமாய் உள்ளது.

**- சாரணன் -**

# இப்படியொரு இரவு

**அ**மாவாசையிருள் அரங்கேறியது. அவர்கள் இறுதி வேவுக்குத் தயாரானார்கள். கொண்டு செல்லும் பொருட்களை சரி பார்த்துக் கொண்டார்கள். அணி அந்த இராணுவமுகாம் நோக்கி நகரத்தொடங்கியது. இறுதி வேவுவரை முன்னேறக்கொடுத்த உயிர்த்தியாகங்கள் அவர்களின் மனங்களில் ஆழப்பதிந்து போயிருந்தன. சுமூகமாய் முடித்து விடலாமென்ற நம்பிக்கையோடு அவதானமாய் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்தார்கள்.

இராணுவ முகாமிலிருந்து ஏவிய எறிகணைகள் அவர்களைக் கடந்து சூனியப் பிரதேசத்தில் விழுந்து வெடித்தன. பனைவடலிகளூடாக நகர்ந்து இராணுவமுகாமின் தடையை நெருங்கினார்கள். இராணுவ முகாமிலிருந்து பாய்ச்சப்பட்ட தேடொலிகள் இரவைப்பகலாக்கின. அரையடிக்கு வளர்ந்திருந்த புற்களோடு புற்களாய் அவர்கள் படுத்தார்கள். தோடொளிகள் சிறிது நேரத்தில் நிறுத்தப்பட்டன. மீண்டும் தோடொளிகள் பாய்ச்சப்படுவதற்கு முன்னர் தடையைக் கடந்து முகாமுக்குள் நுளைந்தார்கள்.



திடீரென துப்பாக்கி வேட்டுக்கள் அகோரமாயத்தடைக்கு வெளியில் கேட்டன. மருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது இராணுவத்தினரின் வழமையான பயத்தின் வெளிப்பாடு. வேட்டுக்களாய் வெளிப்பட்டிருந்ததை உணர்ந்து கொண்டார்களா. மினிமுகாமிலிருந்த இராணுவத்தினர் சிலர் வேட்டுக்கள்கேட்ட காவலரணுக்கு சென்று விசாரித்துவிட்டு அவர்களிருந்த பற்றைப்பக்கமாய் வந்தார்கள். அவர்கள் அசையவில்லை. கண்கள் மட்டும் இராணுவத்தினரின் ஒவ்வொரு அசைவையும் கண்காணித்துக் கொண்டிருந்தன. வந்த இராணுவத்தினர் பற்றையடியில் சிறுநீர் கழித்துவிட்டு பாடலொன்றை பாடியபடியே மினிமுகாம் நோக்கி நடந்தார்கள்.

அவர்கள் பற்றையை விட்டு வெளியே வந்தார்கள். மூன்று குழுக்களாகப் பிரிந்துசென்று முகாம் தொடர்பாகத் திரட்டியிருந்த தகவல்களை உறுதிப்படுத்தினார்கள். நள்ளிரவுக்குப் பின் உறுதிப்படுத்தல் பணி நிறைவாகி ஒன்று சேர்ந்தார்கள். இனி வெற்றிகரமாக முகாமை விட்டு வெளியேறினால் சரி. வெளியேற சுலபமாயிருந்த காவலரண் இரண்டிற்கும் இடைப்பட்ட பகுதியை நோக்கி நகர்ந்தார்கள். முன்னுக்குப் போனவனின் சைகை எல்லோருக்கும் பரிமாறப்பட்டது. நகர்வை நிறுத்தி அவதானித்தார்கள். நடமாடும் இராணுவத்தினர் அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அரைமணிநேரம் கடந்தும் அவ்விடத்தை விட்டு அகலவில்லை.

## பதிவாகாத பக்கங்கள்

நேரம் கடந்து கொண்டிருந்தது விடிவதற்குள் வெளியேறிவிட வேண்டும். இல்லையெனில் இவ்வளவு நாள் உழைப்பும் தியாகமும் வீணாகிவிடும். வேறு வழியின்றி வேறோரிடத்தைத் தெரிவு செய்து வெடிபொருட்களை அகற்றியபடி நகர்ந்தார்கள். மீண்டும் இராணுவமுகாம் ஒன்றில் இருந்து ஏவிய எறிகணை ஒன்று சூனியப்பிரதேசத்தில் விழுந்து வெடித்தது. தடையில் தோழியொருத்தியின் கால் மிதிவெடியில் மாட்டிச்சிதம்பியது. எறிகணை வெடித்த கணத்தில் மிதிவெடியும் வெடித்ததால் இராணுவத்தினர் இனம் காணவில்லை. அவள் வலியைப் பொறுத்து அமைதியாய் இருந்தாள். குருதி வெளியேறாமல் கட்டுப் போட்டார்கள்.

அவளையும் நகர்த்தியபடி தடையைக்கடந்து சூனியப் பிரதேசத்திலிருந்த மரத்தடியை அடைந்தார்கள். அவர்களுக்கு எதிர்பாராத அதிர்ச்சி அவர்களுக்கு மிகஅருகில் இராணுவத்தினர் அனைவரும் துப்பாக்கியைக் கொழுவியபடி தரையில் தூங்கிக்கொண்டிருந்தனர். அணித்தலைவன் எல்லோரையும் நகருமாறு சைகைகாட்டிவிட்டு கைக்குண்டின் லிவரை இறுக்கப்பிடித்தபடி பாதுகாப்பு ஊசியை அகற்றினான். மரத்திலிருந்து கணிசமான தூரம் கடந்த பின்னரே மீண்டும் கைக்குண்டை பாதுகாப்பு நிலைக்குகொண்டு வந்தான். வேவுப்பணி வெற்றிகரமாக நிறைவேறிய திருப்தியோடு வேகமாய் நகர்ந்தார்கள். அந்த இராணுவமுகாமின் அனைத்து நிலையும் அவர்கள் மனத்திரையில் படமாக விரிந்தது. இருள் திட்டுக்கள் விலகத்தொடங்கின......

**ஆ.ந.பொற்கோ**

(04ஆம் பக்கத்தொடர்ச்சி..)

2000ம் ஆண்டில் 40 வீதமாகவும் உயர்ந்துள்ளது. இந்தப் போக்கு தொடர்ச்சியாக வளர்ச்சி காண்கிறது. இதன் காரணமாக "அரச சார்பற்ற நிறுவனங்கள்" என்ற சொற்பிரயோகம் நியாயமானதாகப்படவில்லை. அரசுகள் தனியார் நிறுவனங்கள் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் பெரும் செல்வந்தர்கள் போன்ற மூலகங்களின் நிதியை கையேற்கும் தொண்டு நிறுவனங்கள் சுதந்திரமாக இயங்க முடியுமா என வினாவப்படுகின்றது. பல தொண்டு நிறுவனங்கள் இன்னுமோர் ஆபத்தான பாதையில் செல்கின்றன. சேவைகளையும் ஆலைத் தயாரிப்புக்களையும் இலாப நோக்கில் தொண்டு நிறுவனங்கள் விற்பனை செய்கின்றன. நிதி தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்ட நிறுவனங்கள் மறைமுகமாக இதில் இறங்கியுள்ளன. தொண்டு என்ற சொல் அர்த்தமற்றதாகின்றது. தொண்டுநிறுவனங்கள் வழங்கும் சேவைகளையும் பிறஉதவிகளையும் கூர்ந்து நோக்கும் போக்கு அண்மைக் காலமாக உதவி பெறும் நாடுகளில் காணப்படுவதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

ஐ.நா அபிவிருத்தித்திட்ட யூ.என்.டி.பி (UNDP) மேலாளர் ஸ்ரீபன் பிறவுண் உதவி வழங்கும் நாம் பணிவாக நடக்க வேண்டும். நாம் வழங்கும் உதவிகளிற்பல பயனளிப்பதில்லை என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று உணர்வு பூர்வமாக கூறியுள்ளார். தொண்டு நிறுவனங்கள் வழங்கும் உதவிகளைக் கண்காணிக்கும் உரிமையும் பெறுமதியை விமர்சிக்கும் அதிகாரத்தையும் உதவியைப் பெறுவோர் கோருகின்றனர். தமது சூழலுக்கும் தேவைக்கும் பொருத்தமான திட்டங்களை உள்நாட்டிலே தயாரிக்க விரும்புகின்றனர். வெளிநாட்டு ஆலோசகர்கள் கூறுவது பெரும்பாலும் பொருத்தமற்றதாகவும் குறுகிய காலப்பயன் கூடத் தராதவையாகவும் இடம் பெறுகின்றன. தொண்டு நிறுவனங்கள் வழங்கும் உதவித் திட்டங்கள் பயனுள்ளவைதானா என்று தீர்மானிக்கும் உரிமையை உள்நாட்டு அதிகாரிகள் வேண்டிநிற்கின்றனர். அதே சமயத்தில் தொண்டு நிறுவனங்களும் உதவிகளைப் பெறுவோரிடமிருந்து ஊழலின்மை, வெளிப்படை, கணக்குவழக்குகளில் நேர்மை, திட்டமிடல்ச்சிறப்பு போன்ற முக்கிய பண்புகளையும் ஒழுக்கத்தையும் கட்டாயமாக எதிர்பார்க்கின்றனர். இருபகுதியும் இணைந்து செயற்படுத்துவதற்கு இதில் குறிப்பிடப்பட்டவை அவசியமாகின்றன. அண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த இது தொடர்பான தீர்மானம் கவனத்திற்குரியது. உள்ளூரிலுள்ள நிபுணர்களையும் வளங்களையும் கூடுமான வளவு பயன்படுத்தவேண்டும். கொள்வனவுகள் இயன்றளவு உள்ளூரில் செய்யப்படவேண்டும். வெளிநாடுகள் வழங்கிவரும் திட்டமிடல் சம்பந்தமான கட்டாய உத்தரவுகள் அளவோடு இருத்தல் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக பாதிக்கப்பட்ட மக்களின் தேவைக்கு உதவும் திட்டங்கள் மாத்திரம் அமுலாக்கப்படவேண்டும். தேவைகளைக் கண்டறிவதற்காக உலகவங்கி உள்ளிட்ட நிதிநிறுவனங்கள் உள்ளூர் தொண்டமைப்புக்களின் ஆலோசனைகளை நாடுகின்றன.

என்ஜியோக்களின் செயற்பாடுகளை அவதானித்த அரசியல் விஞ்ஞானிகள் அவற்றை அழுத்தம் பிரயோகிக்கும் குழுக்கள்(PRESSURE GROUPS) ஆதரவு தேடும் அமைப்புக்கள் (LOBBYISTS)என்று அழைக்கத் தொடங்கியுள்ளனர். இதில் ஓரளவு உண்மை இருப்பினும் என்ஜியோக்கள் ஆற்றும் காத்திரமான மனிதநேயப்பணிகளை அது கருத்தில் எடுக்கத்தவறிவிட்டது என்பது வெளிப்படை. இத்துறை ஆய்வாளர்களின் பார்வையில் அரசுகளிலும் பார்க்கக்கூடிய மக்கள் ஆதரவை சில தொண்டுநிறுவனங்கள் பெறுகின்றன. சில வருடங்களுக்கு முன் ஜேர்மனியில் நடத்தப்பட்ட மக்கள் கருத்துக் கண்காணிப்பு வாக்கெடுப்பின்போது ஒரு திடுக்கிடும் உண்மை வெளிவந்தது. தமது நாட்டு அரசிலும் கூடிய நம்பிக்கையைத் தாம் கிறீன்பீஸ் அமைப்பின் மீது வைத்திருப்பதாகக் கூடுதலானோர் வாக்களித்தனர். பொருளாதார நிபுணர்கள் என்ஜியோக்களை மூன்றாம் பகுதி (THIRD SECTOR) என்று வர்ணிக்கின்றனர். அரசு முதலாம் பகுதி, வர்த்தக நிறுவனங்கள் இரண்டாம் பகுதி என்பது அவர்கள் கணிப்பீடு. ஆனால் நடைமுறையில் மூன்றுபகுதிகளும் இரண்டறக்கலந்துவிட்டாலும் ஒன்றிணைந்து செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. சில என்ஜியோக்கள் பல மில்லியன் எண்ணிக் கையில் வேலைவாய்ப்புக்களையும் பல மில்லியன் டாலர்கள் பெறுமதியான பொருளாதார நடவடிக்கைகளையும் வழங்குவதை மறுக்க முடியாது.

இன்றைய உலக ஒழுங்கில் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமக்கென நிரந்தர இடம்பிடித்துள்ளன. இந்த அமைப்புக்கள் அரசு அல்லாத செயற்பாட்டாளர்கள் (NON-STATE ACTORS)என்று அழைக்கப்படுகின்றன. பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களும் இவ்வாறு அழைக்கப்படுவது வழமை. சர்வதேச அரங்கில் நாடுகளும் நாடுகளை உறுப்பினராகக்கொண்டு இயங்கும் ஐ.நாவும் கொள்கை உருவாக்கத்திற்கும் அமுலாக்கத்திற்கும் பொறுப்பாக இருக்கின்றன. மக்களால் தெரிவு செய்யப்படுவது போன்ற அந்தஸ்து இல்லாவிட்டாலும் கொள்கை உருவாக்கத்திலும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சட்டங்களைத் கோரி திருமதி.ஜோடிவில்லியம்ஸ் தலைமையிலான என்ஜியோக்கள் கூட்டமைப்பு பிரசாரம் செய்தன் பயனாய் 1997 ஆம் ஆண்டின் கண்ணிவெடித் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

1998ல் சர்வதேச கிரிமினல் நீதிமன்றம் உருவாவதற்காண உடன்படிக்கை என்ஜியோக்களின் அழுத்தம் காரணமாக நிறைவேற்றப்பட்டது. அரசுகளும் ஐ.நாவின் சர்வதேச அலகுகளும் என்ஜியோக்களை இடைவிடாது தொல்லை தரும் நிறுவனங்களாகக் கருதினாலும் அவற்றின் உதவியை காலத்திற்கு காலம் நாடிப்பெற்றுக்கொள்கின்றன. ஐ.நாவின் செயற்பாடுகளுக்கு என்ஜியோக்கள் உறுதுணையாக இருக்கின்றன என்று முன்னால் ஐ.நா செயளார் நாயகம் பூட்ரொஸ் பூட்ரொஸ்-காலியும் என்ஜியோக்கள் மனித குலத்தின் மனட்சாட்சி என்று இப்போதைய ஐ.நா செயலாளர் நாயகம் கோபிஅனானும் கூறியுள்ளனர். இராசதந்திரத்துறையில் என்ஜியோக்களின் ஆதிக்கம் இரண்டாம் உலகப் போரின் பின் பலம் பெற்றுள்ளது. என்ஜியோக்களின் இராசதந்திர அந்தஸ்து ஐ.நா சாசனத்தின் சரத்து 71ல் பதியப்பட்டுள்ளது. ஐ.நாவின் பொருளாதார சமூக அலகிற்கு ஆலோசனை வழங்கும் தகுதிபெற்ற 300 என்ஜியோக்களை விட இன்னும் 2500 வரையிலானவை ஐ.நாவின் பிறஅலகுகளோடு இவ்விதமாகத் தொடர்புபடுகின்றன. இறைமை என்பது அரசுகளின் ஏகபோக அரசுரிமை என்றாலும் என்ஜியோக்கள் போன்ற அமைப்புக்களின் கைககளுக்கு அதன் பெரும்பகுதி மாறிவிட்டதை எம்மால் உணரமுடிகிறது. ஐ.நாவின் பணிகளும் அரசசார்பற்ற நிறுவனங்களால் நிறைவேற்றப்படுகின்றன. பசிப்பிணி போக்குவதில் இவை பெரும்பங்களிப்புச்செய்கின்றன. கிறிஸ்தவ மதப்பரப்பலில் ஈடுபடும் உலக தரிசன அமைப்பு (WORLD VISION) நிவாரணப்பணிகளிலும் உணவு வழங்குதலிலும் முன்னனி இடம்வகிக்கிறது. இதியோப்பியா, எரித்திரியா, கென்யா, சூடான் போன்ற நாடுகளில் பல மில்லியன் மக்கள் உணவின்றி இறக்க நேரிட்டபோது அமெரிக்காவின் பட்டினிக்கு எதிரான என்ஜியோ மற்றும் கெயர், பிரித்தானியாவின் ஒக்ஸ்பாம், நோர்வே யின் மக்கள் உதவி அமைப்பு, (NORWEGIAN PEOPLES AID)போன்ற தொண்டு நிறுவனங்கள் உணவளித்து அரும் பணியாற்றின.

நிகழ்காலத்தின் மிகப்பெரிய இயற்கை அனர்த்தம் என்று வர்ணிக்கப்பட்ட சுனாமிப் பேரழிவால் தமிழர் தாயகக் கடற்கரையோரம் முற்றாக அழிந்துள்ளது. மீளக்கட்டியெழுப்பும் பணிக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியைத்தாயகம் வேண்டிநிற்கிறது. நிவாரணப் பணிகள் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளது. பல நாடுகளும் கூட்டமைப்புக்களும் தொண்டு நிறுவனங்களும் சுனாமிப்பேரழிவோடு தொடர்புடைய எல்லாவகை நிவாரணப்பணிகளிலும் ஈடுபடுகின்றன. ஆனால் நிவாரணப்பணிகள் மக்கள் நலனை கருத்தில் கொண்டுநிறைவேற்றப்படவேண்டும். திட்டம் எம்முடையதாகவும் நிறைவேற்றும்பணிகள் அவர்களுடையதாகவும் இருப்பின் உறவுகள் சுமூகமாக இருக்கும்.

**என்ஜியோக்களின் செயற்பாடுகளை அவதானித்த அரசியல் விஞ்ஞானிகள் அவற்றை அழுத்தம் பிரயோகிக்கும் குழுக்கள் (PRESSURE GROUPS) ஆதரவு தேடும் அமைப்புக்கள் (LOBBYISTS) என்று அழைக்கத் தொடங்கியுள்ளனர். இதில் ஓரளவு உண்மை இருப்பினும் என்ஜியோக்கள் ஆற்றும் காத்திரமான மனிதநேயப்பணிகளை அது கருத்தில் எடுக்கத்தவறிவிட்டது என்பது வெளிப்படை.**

# பொங்கலோ பொங்கல்!



கம்பங்களில் சில விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. காற்றுக்கு படபடக்கும் அந்தச் சுடர்களில் கல்லறைகள் நன்றாகத் தெரிந்தன. மழை மீண்டும் வருவதற்கு ஆயத்தமாக வடக்குப்பக்கமாக இரைந்தது. அவனுக்குள் நினைவுகள் பாரமாய்க் கனத்தன. அந்தத் துயிலுமில்லத்திற்கு மட்டும் எத்தனை தோழர்கள், எவ்வளவு சகோதரிகள். பெருமூச்சு விட்டபடி நடையை விரைவுபடுத்தினான். காலையில் வந்து மாலையிட்ட முத்துவின் கல்லறை ஒரு மின்னல்க்கீற்றால் பளிச்சிட்டது. அந்த இடத்தில் கால்களில் ஆணி அறைந்தாற்போல் நின்றான். மாலைகள் வாடாமலே இருந்தன. உலருணவுகளை எறும்புகள் மொய்த்திருந்தன. முத்து என்ன சாப்பிடவே இல்லையா? என்று கேட்கவேண்டும் போலிருந்தது. அவனுக்காய் பரவியிருந்த எல்லா உலருணவையும் பார்த்தான். சுருண்டு போன வாழையிலைக்குள் கொஞ்சம் சர்க்கரைப்பொங்கலும்... அவனுக்கு அழுகை வந்தது. முத்து கொஞ்சம் புக்கையாவது சாப்பிடன், கல்லறை முன்நிகழும் இதே கெஞ்சல் பாசறையிலும் ஒருநாள் நடந்தது.

சில வருடங்களிற்கு முன்னொரு பொங்கல் நாளில் முத்துவோடு ஒருஅணி பரந்தன் முன்னணி அரங்கில் நின்றது. பொங்கலுக்கு முதல் நாள்வரை பொங்குவதில்லை என்ற முடிவே இருந்தது. அந்த இடத்தில் அது சாத்தியமில்லை. பொழுது கருகிவிட்டது. இரவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. முத்துவுக்குள் அடக்கமுடியாத ஆசை 'காலம பொங்குவம். ஒவ்வொரு நாளும் வெடி கொழுத்திறம் ஒருநாளைக்காவது பொங்குவம்' என்று தொடங்கினான்.

'அதுசரி வராது கன பிரச்சனை இருக்கு ....'
'இல்லை மச்சான் பொங்குவம்...'
'பாயாசம் காய்ச்ச வேணும், பானையில அரிசியில்லை...' என்று பாடித்தோழர்கள் ஆடத்தொடங்கினார்கள்.
'சத்தம் போடவேண்டாம் செல்லடிப்பான்.' பக்கத்து காவலரணில் இருந்தவர்கள் சூழ்நிலையை விளக்கினார்கள். முத்து விடுவதாக இல்லை.
'விடிய சர்க்கரைப்புக்கை பொங்கவேணும்.' இன்னும் பன்னிரண்டு மணிநேரத்துக்குள் தேடவேண்டியவை எவ்வளவோ. பானையிலிருந்து தண்ணிவரை எடுக்கவேண்டும். விறகிலிருந்து சர்கரைவரை தேடவேண்டும். முத்துவின் விடாதமுயற்சி ஏனையவர்களிற்குள் மறைத்துவைத்த ஆசைகளையும் வெளிக்கொணர்ந்தன. ஒவ்வொருவர் ஒவ்வொரு பொருள்களிற்காக வெவ்வேறு திசைகளிற்குப் போனார்கள்.

நள்ளிரவு கடக்கும்போது முத்து தலையில் பெரிய மூட்டையோடு வந்திருந்தான். பொங்கலுக்குத் தேவையான முக்கிய பொருட்கள். 'கிச்சின் கிழவனுக்கு ஐஸ்வைச்சு வேண்டப்பட்டபாடு.'

வியர்வையிலூறிய மேற்சட்டையைக் கழட்டிவிட்டு மண்மூட்டையில் உட்கார்ந்தான்.
'முத்து பானையும் எடுத்தாச்சு' என்றுவிட்டு காவலரணுக்குள் பாதுகாக்கப்பட்ட அலுமினியப் பானை ஒன்றை வெளியே கொண்டு வந்தார்கள்.
'தண்ணியை விடுபாப்பம்.' முத்து எழுந்து பானையைத் தூக்கினான். இன்னொருத்தன் தண்ணீரை விட்டான். ஒழுகியது. என்ன சர்க்கரைப்புக்கை சரிவராதுபோல.... தோழர்கள் சோர்ந்து போனார்கள். முத்து 'சோப் எடுத்து வா...' என்றான். சில மணிநேரமும் பாதிச்சவர்க்காரமும் செலவழித்த பின் ஒழுகுவது ஓரளவு நின்றது. 'எரிச்சாநின்டிடும்' என்றுவிட்டு அடுப்பை மூட்டினான்.
'கவனம் மறைப்பு கட்டிப்போட்டு பொங்கு பிறகு படைக்கேக்க மட்டும் சூரியனுக்குக் காட்டுவம்.'

சாக்கு மறைப்பிற்குள் சூரியப்போங்கல்.... அவர்கள் பக்கத்துக் காவலரண்காரர்களிற்கும், எதிரியின் காவலர்களிற்கும் தெரியாது பொங்கவேண்டும். இயன்ற வரை மறைத்தார்கள். ஈர விறகுகள் இரகசியத்தைக் காற்றில் பறக்கவிட்டன. பக்கத்துக் காவலரணைவிட முதலில் எதிரி கண்டுவிட்டான்.

'சரி இறக்கடா.... காணும்...' சுற்றி நின்றவர்கள் அவசரப்படுத்தினார்கள். முத்து ரசித்து, அனுபவித்துக் கிளறிக்கொண்டிருந்தான். எறிகணைகள் குழல் வாயிலிருந்து புறப்படும் சத்தம் கேட்டன. மறுவினாடி... எங்கும் புகை... எறிகணைகளைத் தொடர்ந்து டாங்கிகளின்

**சாக்கு மறைப்பிற்குள் சூரியப்பொங்கல்.... அவர்கள் பக்கத்துக் காவலரண்காரர்களிற்கும், எதிரியின் காவலர்களிற்கும் தெரியாது பொங்கவேண்டும். இயன்ற வரை மறைத்தார்கள். ஈரவிறகுகள் இரகசியத்தைக் காற்றில் பறக்கவிட்டன.**

இரைச்சல்... துப்பாக்கிச்சூடுகள் அந்தக் காவலரண் பகுதியே சின்னாபின்னமாக்கப்பட்டது. முன்னேற்ற முயற்சி தோல்வி கண்டது. கிபிரும் வந்து குண்டு வீசிப்போனது. அது போர்க்களத்திலல்ல. அவர்களில் இருந்து வெகுதூரத்தில் உள்ள வயற்கிராமத்தில். சண்டை ஓய்ந்தபோது ஒவ்வொரு காவலரணிற்குள்ளும் எல்லோரும் உள்ளார்களா என்ற துடிப்போடு தொலைத்தொடர்பு கருவிகளும் வாய் உரையாடலும் சத்தமிட்டுக்கொண்டிருந்தன. பாதுகாப்பு நிலைச்சண்டை ஆகையினால் யாருக்கும் காயமோ வீரச்சாவோ ஏற்படவில்லை. 'முத்து எங்க...' தேட ஆரம்பித்தார்கள். சண்டை நடக்கும் நேரமெல்லாம் காவலரணுக்குள் நின்றான்... இப்போது எங்கே.

"சரி சூரியனுக்குப் படைக்கப்போறன் வாறாக்கள் வா..."
வந்து கொண்டிருந்த சாப்பாட்டு உழவு இயந்திரத்தின் சத்தத்திலும் பார்க்க முத்துவின் குரல் எல்லாக் காவலரணுக்கும் ஓங்கி ஒலித்தது. சண்டை ஓயவே அவன் பொங்கல்ப்பானைக்கு கிட்ட போய்விட்டான். அத்தனை எறிகணை வீச்சிற்குள்ளும் அது தப்பியது அதிசயம்தான். 'கெதியா இறக்கு... கெதியாப்படை... அடுத்த தரம் அடிக்கமுதல் சாப்பிடுவம்.' முத்துவைச் சுற்றி நின்றபோராளிகள் அவசரப்படுத்தினார்கள். சாப்பாடு எடுக்கப் போனவன் சில சொப்பின்பை பொதிகள் சுமந்து வந்தான்.

'டேய் உது இண்டைக்கு தேவையில்லை.... இஞ்ச திறம் புக்கை காச்சியாச்சு...' முத்து மகிழ்ச்சி பொங்கச் சொன்னான். கேட்டவன் அப்படியிருக்கவில்லை. அழுதான். அடக்க முடியாது விக்கிவிக்கி அழுதான். எல்லோரும் அவனைப் பார்த்தனர். அவன் சின்ன விசயத்திற்கு அழக்கூடியவனில்லை. இறுக்கமான மனசு. இலையில் பரப்பப்பட்ட சர்க்கரைப்பொங்கலில் இருந்து ஆவிபறந்தது. வாசனை வீசியது. 'ஏன்' அருகில் நின்றவன் சாப்பாட்டுபையுடன் வந்தவனின் தோளில் கைபோட்டுக் கேட்டான். அவனது கைகளிலிருந்த பொட்டலங்களை மண்மூட்டையில் வைத்தான். குனிந்தபடியே 'இப்ப கிபிர்வந்து அடிச்சதில...'விழுங்கினான், விக்கினான்...?
'பொங்கிக் கொண்டிருந்த ஏழெட்டுச்சனம் செத்துப் போட்டுதுகலாம்...'
அவன்ர அப்பா, அம்மாவைக் கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்தநேரம் கூட இப்படி அழுதிருக்கமாட்டான். அப்ப சின்ன வயசு...

பொங்கல் பானையும் படையலும், வந்த சாப்பாட்டுப் பொதிகளும் தனிமையில் கிடந்தன. போராளிகள் காவலரணொன்றிற்குள்ளும் பதுங்குகுழிக்குள்ளும் இருந்தார்கள். நாட்குறிப்பு எழுதினார்கள். துப்பாக்கியை துப்பரவு செய்தார்கள். கலைந்த உருமறைப்பை சரிசெய்தார்கள். சிதைந்த காவலரண்களைத் திருத்தினார்கள். ஆனால் யாரும் சாப்பிடவில்லை. அந்த சர்க்கரைப்பொங்கல் இரவு கடந்தும் அப்படியே கிடந்தது.

அதிகாலை மறுபடி சண்டை. முன்னைய நாளைவிட கடுமையான முன்னேற்ற முயற்சி - உக்கிரமான சண்டை. சண்டை ஓய்ந்தது முன்னேற்ற முயற்ச்சி தடைப்பட்டது. இப்போதும் பொங்கல் பானை அதே இடத்தில் - சர்க்கரைப்பொங்கலோடு. யாரும் சாப்பிடவில்லை. இனிச் சாப்பிடவும் பலர் இல்லை.

முத்து... இலக்கியன்... அருளன்...இந்து..! காவு குழுக்காரர் ரத்தமோடு கிடந்த அவர்களைத் தூக்கிக்கொண்டு போனார்கள். அந்தப் பொங்கல் பானையுள்ள பக்கம் செல்லாமலே பல நாட்கள் அதே காவலரண்களில் வாழவேண்டியிருந்தது. நினைவுகள் எப்படி செல்லாது இருக்கும்....

மழை தூறத்தொடங்கியது. மறுபடியும் அவன் நனையத்தொடங்கினான். முத்துவின் கல்லறைக்கு அருகோடே சிறிது நேரம் இருந்தான். மனசு பொங்கியது, கண்கள் பொங்கி - எழுந்தான். காவலரண்களில் இன்னும் அவனிற்கான பணியிருப்பதை நினைத்துக் கொண்டு நடந்தான். எப்போதாவதுவரும் நல்லதொரு சூரியப்பொங்கல்.

**துளசிச்செல்வன்**



இத்தாவிற் போர்க்களத்தில், போராளிகள் தமது உயிர் கொண்டு தகர்த்த எதிரிக் கவசவாகனமொன்றைப் பாதுகாத்து வரலாற்றிற்கு அறிவிப்பதற்காக அமைக்கப்பட்ட காப்பகம்

# இத்தாவிலில் வடலிகள் முளைத்துவிட்டன

கடந்த மார்ச்-26ஆம் திகதி. எமது வரலாற்றுக்குப் பெருமை சேர்த்த இத்தாவிலில் மக்களும் போராளிகளுமாகக் கூடியிருந்தார்கள். ஆனையிறவை வீழ்த்தும் இறுதிச் சமரில் இத்தாவிற் போர்க்களத்தில், எமது போராளிகள் தமது உயிர்கொண்டு தகர்த்த எதிரிக் கவசவாகனமொன்றைப் பாதுகாத்து வரலாற்றிற்கு அறிவிப்பதற்கான சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகள் அங்கே நடக்கவிருந்தன.

நேரம் அப்போது 9.30 மணிதான். இருந்தபோதும் வெப்பக் கற்றைகள் தேகத்தின் ஈரலிப்பை உறிஞ்சத் தொடங்கிவிட்டிருந்தன. அழகுபடுத்தப்பட்டிருந்த அவ்விடத்திற்கு அப்பால் கண்ணுக்குகெட்டிய தூரத்தில் சுற்றும்முற்றும் பற்றைகள் மண்டிக்கிடந்தன. சமாதானத்தின் பரிசாக அரை குறைத் திருத்தங்களுக்குள்ளான கண்டி - யாழ் நெடுஞ் சாலைமட்டும் கறுப்பாய் வளைந்தும் நெளிந்தும் சென்றுகொண்டிருந்தது. தலையை உயர்த்திப்பார்த்தபோது அன்று தலைசாய்ந்திருந்த பனைமரங்களும் தென்னை மரங்களும் அப்படி அப்படியே இருந்தன. அவை ஒவ்வொன்றும் இந்த மண்ணிற்காய்த் தமது மடியிற் தலைசாய்த்த எமது வீரர்களை நினைவிற்கொணர்ந்தன.

உண்மையில் அந்தப் பூமியில் நிற்பது நினைவு களிற்குக் கனதியாய் இருந்தது. மகிழ்ச்சியும் துக்கமுமான கலவையான உணர்வுகளுக்கு ஆட்பட்டிருந்தது மனது. இப்படியொரு நாளை இத்தேசத்திற் களிப்போம் என்ற நம்பிக்கையுடன் போரிட்டு மடிந்த வீரர்கள் அருகில் இல்லாதது துக்கத்தைத் தந்தது. ஆனாலும் அவர்களின் கனவின் ஒரு பகுதி நனவாகியிருக்கின்றது என்பதை நினைக்க மனது ஆறுதல் கொள்கிறது. உண்மையில் விடுதலைக்காக நாம் பட்ட அதியுச்சமான வேதனைகள் பின்நாளில் மகிழ்வையும் நிறைவையும் தருகின்றன. ஆனால் அதை அருகிருந்து சுமந்தவர்கள் இல்லாத போது...

தமிழீழத்தில் அதிக எறிகணைகளும், வெடி பொருட்களும் விதைக்கப்பட்ட களமல்லவா அது. பல பத்தாயிரம் எதிரிகள் நடுவே இருந்த போராளிகளும், விலங்குகளும் மரங்களும் வீடுகளும் புற்களும் செடிகளும்... இப்பூமி புல் கூட முளைக்காத பூமியாகிவிடுமோ என்று நினைக்குமளவிற்கு அது வினாடிக்கு வினாடி வதைக் கப்பட்டுக்கொண்டிருந்தது. ஏனெனில் இத்தாவிலிற் தரையிறங்கியிருக்கும் புலிகளை அழிப்பதென்றால் அவ்விடத்தைப் பூமிப்பதிலிருந்து உடைத்தெறிந்தால் மட்டுமே சாத்தியமாகும் என்று உணர்ந்தவன் போல் அங்கு அங்குலம் அங்குலமாக எறிகணைகளை விதைத்தபடியிருந்தான் எதிரி. அதைவிடவும் சில வேளைகளில் எதிரி எமது பகுதிக்குள் நுளைந்துவிட்டால் அவனை விரட்டியடிப்பதற்கான சமரில் நாம் செலுத்தவேண்டியேற்பட்ட எறிகணைகளின் கணக்கோ வேறு. உண்மையில் நாம் அப்போது கதைத்ததுண்டு. "இப்ப யாரும் விஞ்ஞானிகள் இத்தாவிலிற்கு வந்தால் இது ஒரு உயிர்கள் வாழ முடியாத பூமியென்றுதான் முடிவு எழுது வார்கள்" என்று. அந்த அளவிற்கு ஒட்சிசன் குறைந்து கந்தகம் செறிந்த காற்றும் செயற்கையாய் அதிகரித்த வெப்பமும், எப்போதும் காற்றைக்கிழித்தபடியே அலைந்து திரியும். குண்டுச்சிதறல்களும் அவர்களுக்கு அதைப் புலர்த்தியிருக்கும். இப்படித்தான் இத்தாவிற்களம் அன்று இருந்தது.

பங்குனி மாதத்தின் கோரவெயில் கொழுத்தியெரியும். வசதிகுறைந்த மண்ணகழிகளுக் குள்ளிருந்து வெளிவரமுடியாதபடி எதிரியின் தாக்குதல் நடந்துகொண்டேயிருக்கும். நேரம்செல்லச்செல்ல வியர்வையால் நனைந்த உடம்பு வெந்து வெதும்பிப்போயிருக்கும். அருகில் விழும் எறிகணைகளின் அதிர்வுகளால் இடிந்து விழும் பதுங்ககழிகளின் சுவர்களிலிருந்து உடலில் விழும் மண் உணர்வைப்பிசையும். ஒருகட்டத்தில் "உயிர் போனாலும் பரவாயில்லை வெளியில போயிருப்பம்" என்று மனதில் முடிவுதோன்றும். ஆனாலும் "போரில் கொல்லப்படாமல் இருந்தாற்தான் எதிரிகளை வீழ்த்திப் போரில் நீ வெல்லமுடியும்" என்ற உண்மை மட்டும் எங்கள் மனதை வென்றுவிடும். மற்றும்படி மரணத்திலும் அந்தப் பதுங்ககழித் துன்பம் கொடுமையானது என்பதிற் சந்தேகமேயில்லை.

பெரும்பாலும் ஒவ்வொரு நாளும் சண்டைக்கான உசார்நிலை அறிவிப்பு வந்துகொண்டிருக்கும். வெறிகொண்டு உறுமியபடி கவசவாகனங்கள் எமது காவலரண்களைப் பதம்பார்க்கும். நேரகாலமின்றிப் பூமியையும் செவிப்பறையையும் அதிரச்செய்யும். எறிகணைகள், கடற்கலங்களும் வானூர்திகளும் எந்த வேளையிலும் உறுமிக்கொண்டே யிருக்கும். காயமடைந்தும் வீரச்சாவினைத் தழுவியும் எமது எண்ணிக்கை நாளுக்கு நாள் குறையும்போதும் எமது ஆற்றல் மட்டும் பெருகிக்கொண்டேபோனது.

எதிரியின் அதியுச்சமான பலப்பிரயோகத்திற்கு இத்தாவிற்களம் அடிக்கடி ஆட்படும். ஒவ்வொரு தடவையும் தான் வென்றுவிட்டேன் என எதிரி நம்புமளவிற்குக் களநிலை மாறிவிட்டிருக்கும். ஈற்றில் தனது பலமெல்லாவற்றையும் எமக்களித்து தோல்வியுடன் எதிரியைத் திருப்பிவிட்டுக் காத்திப்பர் எம் வீரர்கள். ஆனாலும் காவலரண்களில் எமது எண்ணிக்கை குறைந்திருக்கும். காலையிலிருந்து நடந்த தொடர் சமரால் தடைப்பட்டுப்போயிருந்த உணவு மாலையில் வந்தால் அருகிருந்து இல்லாமற்போன தோழர்களின் உணவுப் பாசலைப் பார்க்க நெஞ்சு கனக்கும். உண்ண மனம் மறுக்கும்.

அதிகாலைச்சமரில் காயமடைந்த தோழனைப் பின்நிலைக்கு அனுப்பிவைக்கச் சில வேளைகளில் பல மணி நேரங்கள் ஆகும். அவனைக் காப்பதற்குத் "தவமிருந்து" ஈற்றில் ஒரு மூச்சுவிடும் நேரத்தில் அவனை அனுப்பிவைத்துவிட்டு நின்மதி மூச்சுவிடச் செய்திவரும். "எறிகணை விழ்ந்து அவன் உயிர் பிரிந்தது." என்று. எம் உயிரைப் பிழிந்தெடுக்கும் அந்தச்செய்தி.

இப்படித்தான் வீரச்சாவடைந்த தோழர்களும், சில வேளைகளில் நாட்கணக்கிற்கூட அவர்கள் எங்களுடனேயே துயிலும் நிலையும் இருந்தது. அதிசயமாகக்கிடைக்கும் ஏதோவொரு இடைவெளியில் அந்த வீரனின் உடலைப் பின் நிலைக்குக் (இத்தாவில் களத்தில் பின்நிலை என்று எதுவுமே இருக்கவில்லை. அங்கு எல்லாமே முன்நிலைதான்) கொண்டு சென்ற வீரர்களிலும் அந்த உடலுடனேயே துயிலும் இல்லங்களுக்கு கொண்டு செல்லப்பட்ட சந்தர்ப்பங்கள் கூட இருந்தன. இதைவிடவும் வீரச்சாவடைந்த தோழர்களின் உடல்கள் களத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுவதற்கிடையில் பல தடவைகள் மீண்டும் மீண்டும் விழுப்புண் ஏற்றிருக்கும். இருந்தபோதும் ஒன்றை நினைக்கும் போது இப்போதும் பெருமையாக இருக்கிறது தரையிறங்கித் தாளையடியில் எதிரியின் தளம் தாக்கப்பட்டு ஒரு தரைத்தொடர்பு ஏற்படுத்தப்பட்டதன் பின் எந்தவொரு போராளியின் வித்துடலையும் எந்தவொரு ரணகளத்திலும் நாம் ஆங்காங்கே புதைக்கவோ தவறவிடவோ இல்லை என்பது.

இவ்வாறு இந்த இத்தாவிற்களம் எமக்குத் தந்த உணர்வுகள் ஏராளம். ஆனையிறவைத் தகர்த்து எமது வீரர்கள் வரும்வரை எத்தனை காலமென்றாலும் தன்னுடன் எம்மை ஈர்த்து வைத்திருக்கத் தயாராய் இருந்த பூமி இது. இதன் கதையை, இதன் உணர்வுகளைக் கூறும் இடமாக இந்தக் கவசவாகனக் காட்சியறை நிமிர்ந்து நிற்கிறது. இதைக் கடந்து செல்லும் ஒவ்வொருவருடனும் இது பேசும். "தமிழீழம் இனிமேலும் தலைகுனியாது" என்று எல்லோருக்கும் இடித்துரைக்கும்.

.....இந்த மண்ணிற் களமாடி மடிந்த எல்லா வீரர்களினதும் சாட்சியாக.......

-மதுசங்கர்-



(01ஆம் பக்கத்தொடர்ச்சி)

இத்தகைய சூழ்ச்சிகர இராணுவ அணுகுமுறைகளாலேயே சிங்கள அரசுடனான முன்னைய போர்நிறுத்தங் கள் முறிந்து போயிருந்தன.

மீண்டும் போரைத்தொடங்கும் புறச்சூழல்களை உருவாக்குவதுதான் இத்தகைய நிழல் யுத்தங்களின் நோக்கங்களாகும்.

உண்மையில் சிங்கள அரசிற்கு சமாதான முயற்சிகளிலும் நாட்டமில்லை - அரசியல் தீர்விலும் நம்பிக்கையில்லை. அதன் நாட்டமும் நம்பிக்கையும் போரி லேயே உள்ளது. போர்மூலம் புலிகளை வென்று தமிழர்களை நெருக்க வேண்டும் என்பதே சிங்கள அரசின் நோக்கமாகும்.

சந்திரிக்கா அரசின் இத்தகைய இனவாத நோக்கங்களை வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் உலகிற்கு அம்பலப்படுத்திவிடுவார்கள் என்ற அச்சத்தின் விளைவுதான் சிங்கள அரசால் அண்மையில் நிறைவேற்றப்பட்ட வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு எதிரான செய்திசேகரிப்பு மற்றும் விவரணக்கட்டுரைகளுக்கான தணிக்கை முறையாகும்.

சிங்கள அரசு விரும்புவது போலப் புலிகளுக்கு எதிராக அது நடாத்தும் நிழல்யுத்தம் அதற்கு நன்மைகளைக் கொடுக்கமாட்டாது. சிங்கள அரசின் சூழ்ச்சிகர அரசியலை சமாதான முயற்சிகளின் பங்காளி நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. நாசகார நோக்கம் கொண்ட இந்த நிழல் யுத்தத்தை சிங்கள அரசு உடனடியாக நிறுத்த முன்வரவேண்டும் இன்றேல் அது ஒரு நிஜப்போராக பரிணாம வளர்ச்சி அடைவதை எவராலும் தடுக்க முடியாதுபோகும்.

# பொய்மானின் பின்னே போனது போதுமடா சாமி

உலைக்களம்
வியாசன்

நெருப்புச்சுடர் விளங்கி ஒளிபரவ
நிமிர்ந்திருந்த பரம்பரையொன்று
இன்று இருட்குகைக்குள் இடியுண்டுபோனதா?
புலியாய் உறுமிய தலைமுறையொன்று
புதைமணலில் விழுந்து
மூக்குவரை மூடுண்டு
மூச்சுத்திணறுகிறதா இப்போது?
ஆலவட்டக்காரரின் பின்னே அள்ளுண்டு
கவரிவீசும் காற்றில் மெய்மறந்து
அரையில் ஆடையவிழ்வதும் அறியாமல்
கரைகிறதா அமிலக்குடுவையில்?
பஞ்சகல்யாணி ஏறிப்பறந்தவனே!
எஞ்ச ஏதுமின்றி ஏனடா இடியுண்டாய்?
நேற்றுவரை தொடர்ந்த சுவடுகள் தொலைத்து
எவரெவரோ காற்தடங்களின் பின்னே
எங்கு நடக்கிறாய் இப்போது?
பாதிவழி கடந்த பயணத்தெரு மறந்து
மீதிவழி நடக்க முடியாது தடுமாறுகின்றாயே
என்ன நடந்தது உனக்கு?
வெளிச்சம் தரும் வீதி துறந்து
இன்று இருளடர்ந்த தெருவிலல்லவா
இருக்கிறாய்?
காண்டீபம் வளைத்து
நீ நாணேற்றிய ஒலிகேட்டு
அட்டதிக்கும் அதிர்ந்ததல்லவா ஒருகாலம்.
உன் குதிரையின் குழம்பொலிச் சத்தத்துக்கே
பகைவன் குடல்நடுங்கிக் கிடந்தானே.
நீ கவசம் தரித்த மிடுக்கறிந்தே
கண்டிவீதியேறிய பகைச்சேனை
காடுமுழுவதும் திசைமாறி ஓடின.
கொஞ்சம் காலாற அமர்ந்ததும்
உன் தோளேறி விளையாடுகின்றன
சுண்டெலிகள்.
கும்பிடு பூச்சிகள் கூட வழிமறித்து
உன்னைச் சுண்ணாம்பு கேட்கும் பழியெதற்கு?
போதும் உனக்கிந்த இழிவு
போதும் உன் பொறுமையின் அளவு.
காராம்பசுவில் பால்கறக்கும்,
கற்பகதருவில் பூப்பறிக்கும்
கனவிற் கிடந்தது போதும்.
வந்தவனுக்கெல்லாம் வெற்றிலை மடித்துக்
கொடுத்தால்
இந்த இழிவுதான் எஞ்சும்.
ஓணான்களுக்கு உயிர் உதற
உன் வலம்புரிச்சங்கு சிலம்பட்டும்.
காத்திருப்புக்கும் ஒரு எல்லை விதித்து
இந்தத் தவறான கணக்கிடலாற்றான்
உரிமைபற்றி மட்டுமல்ல
சலுகைபற்றியும் பேசமறுக்கின்றனர்.
பொய்மானின் பின்னேபோன கதையாகி
மெய்யறியா நீண்டு வினைகெட்டுப் போனோம்.
கடந்த காலத்தைக் கணக்கிட்டுப்பார்த்தால்
பழிசுமந்து பெற்ற படிப்பினை தெரியும்.
உடுப்புகளை ஒவ்வொன்றாய் இழந்து
இடுப்பிலிருந்ததையும் எடுத்தெறிந்துவிட்டு
அம்மணமானதன்றி ஆனதென்ன?
உலகநாடுகளின் உற்பத்திப் பொருட்களுக்கு
சந்தையானதன்றி எமக்கு வந்ததென்ன?
ஈழத்தமிழரெனும் எழுப்பம் தொலைத்து
வாழப்பழகியதன்றி வரலாறெழுதலையே.
நயினாதீவுக்கான யாத்திரையும்
நாகவிகாரைக்கான எண்கோண மண்டபமும்,
மண் அகழ்வும்,
மரங்கள் அழிப்பும்,
ஹீரோகொண்டாவும்,
கொமட் வைத்த கழிப்பறையும்,
கேளிக்கைக்கான சின்னத்திரைகளும்,
மலையாள மாந்திரீயமும்,
மனையியல் வகுப்புக்களும்
சுற்றிவளைத்துச் சூறையாடுகின்றனவே தவிர
சுகந்தம் வந்ததா எம்வாசல்?
இதற்காகவா உயிர் விதைத்தோம்?
இதற்காகவா இரத்தம் சொரிந்தோம்?
இதற்காகவா அலைவுற்றோம்?
வெற்றுப்பெட்டியில் வெள்ளரிக்காய் இருப்பதாய்
அவர்கள் விலைபேசுகின்றனர்.
நாங்கள் மீண்டுமொரு சுற்றுச்சுற்றி
வாய் நுரைதள்ள ஓடிக்களைத்து
தொடங்கிய இடத்துக்கே திரும்பியுள்ளோம்.
நேற்று விடுதலைக்கான வேற்றுவழி தேடி
இழிவுற்றது இன்றுடன் தொலையட்டும்.
ஈழத்தமிழரின் இன்றைய தலைமுறை
வாழ்வு சமைக்குமென்பதே வரலாறு
நாளைய தலைமுறையாவது ஆளட்டும்.
நாங்கள் மிதிபூண்டல்ல சுருண்டுபோவதற்கு
நாங்கள் தம்பலப்பூச்சியல்ல
நசிந்துபோவதற்கு.
உலகம் நடுநிலைமை நாற்காலியைவிட்டு
நீதியின் பக்கம் நிரைகொள்ளட்டும்.
ஒன்றில் எங்கள் பக்கம் வரட்டும்
இல்லையேல் அவர்கள் பக்கம் போகட்டும்.
மனிதவுரிமை பேசும் எல்லோருமே
செத்தவனுக்குச் சுண்ணமிடித்து



கூத்தைத் தொடங்கு.
தருப்பாடியபடி சபைக்கு வா
அவர்கள் விளங்கிக்கொள்ளட்டும்.
பேச்சுவார்த்தை என்ற சொல்லுக்கு
எங்கள் அகராதியில் ஒன்றாகவும்
சிங்கள அகராதியில் வேறொன்றாகவும்
அர்த்தம் எழுதியுள்ளது போலும்.
உயிரறுத்தநேர வலிக்குரலும்,
ஒழுகிய பச்சைரத்தக் கசிவும்,
அவலமுற்றோடிய வதையும்
இனியும் வேண்டாமெனக் கூறியதை
அவர்கள் தப்பாக அர்த்தப்படுத்திவிட்டனர்.
உலக முன்னிலையில் உட்கார்ந்து
ஒரு தீர்வையெட்டுவோம் என்ற அழைப்பைக்கூட
பிழையாகக் கணக்கிட்டனர் போலும்.
ஒற்றைத்தெருவின் ஜொலிப்பிலும்,
ஓடிவரும் சொகுசுவாகனச் சிலிர்ப்பிலும்,
வெற்றிடம் நிரப்பும் வெறுங்காற்றிலும்,
வெள்ளைக்காரரின் கைகுலுக்கலிலும்,
வசமிழப்போமென நம்பினர் போலும்.
கொல்பவனுக்குக் குடைபிடிப்பவர்கள் தான்.
தின்றவனின் ஏவறையும்
பட்டினிக்காரனின் கொட்டாவியும் ஒன்றல்ல.
இரண்டும் வாயால் வருவதெனினும்
வகைமாதிரி வேறுபடும்.
அடக்குமுறையாளரின் சுடுகலனும்
விடுதலைவீரனின் சுடுகலனும் ஒன்றல்ல.
இரண்டும் உயிர்கொல்லுமெனினும்
வகைமாதிரி வேறுபடும்.
வேலிக்குள்ளே விடுதலையை நசித்தபடி
வெளியே ஞானஸ்தர்களாக வேஷமிடுகின்றவர்
எமக்கான தீர்ப்பை எழுதிவிட முடியாது.
நாமே போராடுவோம்
நாமே நமக்கான தீர்ப்பையும் எழுதுவோம்.
தலைமகன் நிலைகுலையானெனும்
நம்பிக்கையில்
திசைகளை எமதாக்கப் புறப்படுவோம்.
நடக்க நடக்கப் பாதை தெளியும்
தெளியத் தெளிய திசைகள் வெளிக்கும்.